உ

# ஆலயக் கிரியை மரபில் ஸ்பர்சாகுதி



## சிவஸ்ரீ ஸ்ரீனிவாச இரகுநாதக்குருக்கள்
## ஸ்ரீமதி நாதரூபி தம்பதிகளின்
## ஷஷ்டியப்த பூர்த்தி விழா வெளியீடு

11.08.2005 வியாழக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நஞ்சுமிழ் அரவணிந்தநாயகி நாளும் உன்றன்
கஞ்சமென் மலர்ப்பாதம் கடையேனென்சிரமேல் - வைத்தே
அஞ்சேலென்று ஆதரிப்பாய் அனைத்துமாய் நின்றதாயே
மஞ்சுலாம் என்பீல்ட் நகர்வாழ் நாகம்மை நீயே!

சிவஸ்ரீ இரகு கமலநாதக்குருக்கள் B.A(Hons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக் கிரியை மரபில் ஸ்பர்சாகுதி



## சிவஸ்ரீ ஸ்ரீனிவாச இரகுநாதக்குருக்கள்
## ஸ்ரீமதி நாதரூபி தம்பதிகளின்
## ஷஷ்டியப்த பூர்த்தி விழா வெளியீடு

11.08.2005 வியாழக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


# மணி விழா தம்பதிகள்

## சிவஸ்ரீ ஸ்ரீனிவாச இரகுநாதக் குருக்கள்
## ஸ்ரீமதி இ. நாதரூபி அம்மா



ஈரைந்து மாதம் கருவில் சுமந்து ஜனிக்கச்செய்த தாய்க்கும்
தன் ஆத்மஜர்களாகிய எம் எல்லோரையும்
வளர்த்தெடுத்து ஆளாக்கிய தந்தைக்கும்
பணிவன்புடன் அவர்களின் பாத கமலங்களில்
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பொருளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| ஆசியுரை - பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் | 01 |
| ஆசியுரை - சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் | 03 |
| வாழ்த்துரை - சிவஸ்ரீ சிறீனிவாச நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி) | 04 |
| வாழ்த்துரை - சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் | 05 |
| வாழ்த்துரை - என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயம் | 06 |
| நயப்புரை - சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் | 07 |
| வெளியீட்டுரை: | 08 |
| என்னுரை | 09 |
| முன்னுரை | 10 |
| இயல் ஒன்று<br>திருக்கோவிற் கிரியை மரபு | 13 |
| இயல் இரண்டு<br>வைதீக மரபும் ஆகம மரபும் | 28 |
| இயல் மூன்று<br>ஸ்பர்சாகுதிக் கிரியை ஒழுங்கும் நோக்கமும் | 40 |
| இயல் நான்கு<br>ஸ்பர்சாகுதியில் காணப்படும் சமய தத்துவ சிந்தனைகள் | 57 |
| இயல் ஐந்து<br>கிரியைகளின் ஞானபாதச் சிந்தனைகள் | 69 |
| இயல் ஆறு<br>நிறைவுரை<br>நூற்பட்டியல் | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை:

## பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர்

முன்னாள் கலைப்பீடாதிபதி/ இந்து நாகரீகப்பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

எனது மாணவனும் தற்பொழுது இலண்டனில் குருத்துவத்தில் ஈடுபட்டு உள்ளவருமாகிய சிவஸ்ரீ இ.கமலநாதக்குருக்களது தந்தையாராகிய சிவஸ்ரீ சிறீனிவாச இரகுநாதக்குருக்கள் அவர்களது ஷஷ்டியத்த பூர்த்தி விழா 11.08.2005 அன்று நடைபெற உள்ளதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைவதோடு சிவஸ்ரீ சிறீனிவாச இரகுநாதக்குருக்கள் ஸ்ரீமதி நாதரூபி மணிவிழாத்தம்பதியினருக்கு எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வைபவத்தையொட்டி சிவாச்சாரியார்களுக்கு நன்கு பயன்பட வல்லதொரு கிரியை சார்ந்த விளக்கங்களுடன் கூடிய நூல் ஒன்றினை சிவஸ்ரீ இ.கமலநாதக்குருக்கள் வெளியிடுவது சாலப்பொருத்தமாகும். "ஆலயக்கிரியை மரபில் ஸ்பரிசாகுதி" என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல் இவர் எனது வழிகாட்டலில் மேற்கொண்ட ஆய்வுக்கட்டுரையாகும்.

சிவஸ்ரீ இ.கமலநாதக்குருக்கள் சிறந்ததொரு சிவாச்சார்ய பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் புகழ் பூத்த சிவாச்சாரியாராக விளங்கிய நயினை பிரதிஸ்டாபூஷணம் அமரர் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் அவர்களது பேரனாவார். அவரது வழியில் குருத்துவத்தில் புலமைத்துவம் பெறும் வகையில் தென்னிந்தியாவில் பிள்ளையார் பட்டியலில் குருத்துவப்பயிற்சி பெற்றுள்ளதோடு யாழ்- பல்கலைக்கழகத்திலும் இந்து நாகரீகத்தைச் சிறப்புப் பாடமாக என்னிடம் பயின்று முதலாம் பிரிவில் சித்தியடைந்து பட்டம் பெற்றவர். குருகுலப்பயிற்சியும் பல்கலைக்கழக கல்வியும் பெற்ற வகையில் இவர் எமது சமயத்துறையில் சிறந்ததொரு சிவாச்சாரியாராக மேலை நாட்டில் பணி புரியும் வாய்ப்பை பெற்றுள்ளமை பெருமைக்குரியதாகும்.
சிவாச்சாரியர்கள் சிறந்து புலமையாளராக மிளிர வேண்டும் என்பது எனது உறுதியான கொள்கை. அதற்கியைய சிறந்து புகுலமைத்துவம் பெற்ற சிவாச்சாரியராகவும் பட்டதாரியாகவும் விளங்கும் சிவஸ்ரீ கமலநாதக்குருக்கள் ஏனையோருக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் இவரது இந்த சாதனை அவரது குருவாகிய எனக்கு மிக்க மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகின்றது. இவ்வகையில் எனது குரு ஆசி அவருக்கு எனறென்றும் உண்டு.

தனது தந்தையின் ஷஷ்டியத்த பூர்த்தியின்போது தமது பெற்றோருக்கு சமர்ப்பணம் செய்யும் வகையில் இந்நூலை வெளியிடுவது மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும். சிவஸ்ரீ கமலநாதக்குருக்கள் சிறந்த குருபக்தி மிக்கவர். சமஸ்கிருதத்தில் நல்ல புலமைத்துவம் உள்ளவர்.திருக்கோயில் கிரியைகளின் விதி முறைகளை விஸ்தாரமாக அறிந்தவர். இக்காரணங்களால் இவர் கும்பாபிசேகத்தின் முக்கிய அங்கமாகிய ஸ்பரிசாகுதி பற்றி எழுதும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். ஸ்பரிசாகுதி என்னும் கிரியை பறந்றிய விளக்கும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் தேவையானதொன்று. யாகத்தில் உள்ள மூர்த்தி மூர்த்தீஸ்வரன் மூர்த்தீஸ்வரி தத்துவம், தத்துவதிபதி, தத்துவேசி, மந்திரம், ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்புபடுத்துவதே இக்கிரியைகளின் முக்கிய அம்சமாகும்.

இதன் மூலம் மூர்த்தியில் உன்னதமான தெய்வீக சாந்நித்தியம் ஏற்படும். விசேட திரவிய ஹோமம் நிகழ்ந்த பின் யாகசாலையில் நிகழும் கிரியை ஸ்பரிசாகுதி ஆகும். கும்பம், அக்னி, மூர்த்தி ஆகிய மூவரையும் தொடுக்கும் நாடி சந்தானம் செய்தல் முக்கிய அம்சமாகும். இக்கிரியையின் தத்துவத்தைப் பற்றி பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் தமது சைவத்திருக்கோயில் கிரியை நூலில் பின்வருமாறு தரும் விளக்கத்தை இங்கு தருவது பொருத்தமாகும்.

"இக்கிரியையின்போது குண்ட சமீபத்தில் வலப்பக்கத்தில் அரிசி பரப்பி அதன் மேல் சாந்தி கும்பம் வைத்து ஆசன மூர்த்தி மூலம் சிவனை ஆவாகித்து பாசுவதாஸ்திர கும்பங்களையும் அந்தந்தக்கு ண்டங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வைத்தல் வேண்டும்.

குண்டத்தில் பரமேஸ்வரனையும் மேகலையில் நிவிருத்தி முதலிய நாலு கலைகளையும், நாபியில் கிரியாசக்தியையும், ஒஷ்டத்தில் நாதத்தையும், பூஜித்து கும்பம், அக்னி, மூர்த்தி ஆகிய மூவரையும் தொடும்படி நாடிசந்தானம் செய்தல் வேண்டும்.

முதலில் குண்டத்தில் ஆத்மத்துவத்தை பூஜித்தபின் அஷ்டமூர்த்திகளையும் மூர்த்தியதிபர்களையும் பூஜித்து சம்பாதஹோமம் நிகழ்த்தல் வேண்டும். பின் மூர்த்திபர் எண்மரும் தத்தம் குண்டங்களில் ஆத்ம தத்துவத்தையும் அதற்கு அதிபரையும் தத்தம் மூர்த்திகளையும் மூர்தீஸ்வரர்களையும் பூஜித்து சாந்தி கும்பசம்பாத ஹோமம் பூர்ணாகுதியீறாக நிகழ்த்தல் வேண்டும். பின்னர் ஆசார்யகனும் மூர்த்திகளும் சாந்திகும்பத்தில் ஜபித்து ஜபசங்கியையால் ஹோமம் செய்வர். ஆசார்யர் சிருக்கில் ஆத்ம தத்துவத்தையும் தத்வாதிகளையும், மூர்த்தி மூர்த்தீஸ்வரர்களையும் பூஜித்தல் வேண்டும். மூர்த்திபர்கள் தத்தம் மூர்த்தி மூர்த்தீஸ்வரரை அவ்வாறு பூஜித்தல் வேண்டும். பின் பூர்ணாகுதிக்கு உரியவாறு ஆயத்தம் செய்து ஆத்மதத்துவாதிபதியாகிய பிரம்மனுக்கு ஹோமம் செய்தல் வேண்டும். மந்திரத்தின் இறுதியில் வரும் ஸ்வாஹா என்பதில் ஸ்வா வை மட்டுமே உச்சரித்து சிருக்கில் சிறிது நெய் எஞ்சும்படியாக பூர்ணாகுதி செய்தல் வேண்டும். எஞ்சிய நெய் இருக்கும் சிருக்சுரவங்களுடன் சாந்தி கும்பத்தைப் பரிசாரகர் கொண்டுவர மூர்த்திபர்கள் பின்தொடர லிங்கத்தையடைந்து பின் எல்லோரும் தத்தம் தானங்களில் நின்று லிங்கத்தின் பிரம்மபாகத்தை தர்ப்பையினால் தொட்டு ஹோம சங்கியையளவு ஜபிப்பர்.

மூர்த்தியின் ஆத்மதத்துவத்தையும் அதிபரையும் பூஜித்து மீதியாக இருக்கும் நெய்யுடன் கூடிய சிருக்கு சுரவத்தை எடுத்து முன்கூறிய ஸ்வாவை விட எஞ்சியிருக்கும் ஹா என்பதை உச்சரித்து அவ் எஞ்சிய நெய்யை பிரமகாதத்தில் ஆகுதி செய்தல் வேண்டும். இப்படியே விஷ்ணுபாகத்திற்கும் அதன்பின் ருத்ரபாகத்திற்கும் தனித்தனி உரிய மந்திரங்களால் ஸ்பர்சாகுதி நிகழ்த்துதல் வேண்டும்"

ஸ்பரிசாகுதி பற்றிய இச்சசிறப்புமிக்க விளக்கத்திற்கு ஏற்றவாறு ஆலயங்களில் கும்பாபிசேகங்கள் நடந்தேறி வருகின்றன. இக்கிரியையின் முக்கியத்துவத்தைக்கருதியே சிவஸ்ரீ கமலநாதக்குருக்கள் சுருதி யுக்தி அனுபவ வாயிலாகவும் சிவாகமங்களின் வழி நூல்களாக விளங்கும் பத்ததிக்கிரமங்களை அநுசரித்தும் திரிகண்ட, நவகண்ட, சரிசாகுதி கிரியை பற்றிய விளங்கங்களை இந்நூலில் தருகின்றார்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய இக்கிரியை பற்றி வளர்ந்து வரும் இளம் சிவாச்சாரியார்கள் நன்கு தெரிந்து கொள்ளும் வகையிலும் ஏனையோர் தமது ஐயங்களுக்கு தெளிவு பெறக்கூடியவாறும் இந்நூல் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை சிவாச்சாரிய உலகம் உவந்து வரவேற்கும் என்பது எனது துணிபு.

சிவஸ்ரீ கமலநாதக்குருக்கள் இதுபோன்ற ஆக்கபூர்வமான நற்பணிகளைத் தொடர அவருக்கு அனைத்து நலன்களும் கிட்டும் வண்ணம் எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பாரமேஸ்வரன் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்தி ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவரது இந்த நற்பணியினால் ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும் இவரது பெற்றோர் மன நிறைவும் மகிழ்ச்சியும் அடைவர் என்பது திண்ணம். மணிவிழாத்தம்பதியினர் நீடூழி காலம் தமது சுற்றத்துடன் இனிதே வாழ எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருள் துணை நிற்பதாகுக.

யாழ்ப்பாணம்
10.07.2005

ப. கோபாலகிருஷ்ண ஐயர்
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்

அதிபர்,
" சிவாகமஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.



T.MAHADEVAKURUKKAL,
DHARMASASTA KURUKULAM,
INUVIL, CHUNNAKAM.
T.P: 021 222 2660.

ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவ்யாலயம்,
இணுவில்,
சுன்னாகம்.

திகதி:....................

## ஆசியுரை

தாயகத்தில் நடைபெறும் கும்பாபிசேகங்களில் தனிச்சிறப்பு வகிப்பது ஸ்பர்சாகுதியாகும். ஸ்பர்சாகுதிக்கு திரிகண்ட சோதனம், தத்வ சோதனம், மூர்த்தி சமயோஜனம் பச்சிம சந்தானம் என்று பல பெயருண்டு. தமிழ் நாட்டிலும் சரி இலங்கையிலும் சரி மற்றெல்லா கும்பாபிசேக கிரியைகளிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியிருந்தாலும் ஸ்பர்சாகுதி மட்டில் தேசத்திற்கு தேசம் வித்தியாசமானதான பிரயோகமாக நடைபெறக் காணலாம். பத்ததிகளும் வித்தியாசமான பிரயோகங்களை காட்டுகின்றன.

தமிழ் நாட்டில் வாமதேவ பத்ததி கூறுகின்ற தத்துவ சோதனமே பெரும்பாலான மகாகும்பாபிசேகங்களில் கையாளப்படுகின்றது. (அதாவது சிறுக்சிருவத்தைக் கொண்டு செல்லாமல் சாந்தி கும்ப பிரதானியமாக சாந்தி கும்ப தீர்த்த ப்ரோட்சணத்துடன் தத்துவ சோதனத்தைச் செய்வது.) இலங்டகையில் எல்லா ஆலயங்கயிலுமே அவசிஷ்டாஜ்ய சிறுக்சிருவத்தோடு பிம்ப சமீபம் சென்று ஆச்சியத்தை பிம்பத்தில் சேர்த்து ப்ரார்த்திப்பதே வழக்கினில் இருக்கின்றது.

இப்படியாக தேசாசார வித்தியாசத்துடன் நடைபெறும் ஸ்பரிசாகுதியின் சிறப்பு மென்மேலும் அறிந்து கொள்ளற்பாலதாகும். ஆகவே "ஆலயக்கிரியை மரபில் ஸ்பரிசாகுதி" என்னும் நூல் இப்பொழுது வெளிவருவது சாலச்சிறந்ததொன்றாகும். அதுவும் சிறீனிவாச ரகுநாதக்குருக்களின் ஷஷ்டியத்த பூர்த்தி சாந்தி விழாவில் இம்மலர் வெளிவருவது வரவேற்கத்தக்கது.

தாயகத்தில் ஒப்புவமையில்லாமல் ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் ஆகமக்கிரியைகளை ஆற்றிய சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்கள் அவர்களுடைய மருகராகிய சிவஸ்ரீ சிறீனிவாச இரகுநாதக்குருக்கள் தனது வாழ்நாள் முழுவதும் சமயத்தொண்டாற்றுகின்ற பெருமை உடையவர்

அவருடைய ஷஷ்டியத்த பூர்த்தி சாந்தி விழாவில் அவர் தம் மைந்தனாகிய கமலநாதக்குருக்களினால் வெளியிடும் இம்மலரானது பலாச்சுளைக்கு தேன் கலந்த இனிப்போடும் சிறப்போடும் மலர் வெளியீடு சிறப்புற திருவருள் துணை நிற்க பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
மதுரையம்பதி
அருள்தரு மீனாட்சியம்பாள் சமேத
சோமசுந்தரேஸ்வர (சிவன்) தேவஸ்தானம்
Mathurayampathy
Arul Tharu Meenadchi Ampal Sametha
Somasuntharesvara (Sivan) Thevasthanam

Punguduthivu-3.
JAFFNA,
Sri Lanka.

புங்குடுதீவு-3,
யாழ்ப்பாணம்,
ஸ்ரீ லங்கா.

## வாழ்த்துரை

எமது மூத்த சகோதரனாகிய சிவஸ்ரீ சிறீனிவாச இரகுநாதக்குருக்கள் அவர்களின் ஷஷ்டியர்த்த பூர்த்தி விழாவில் "ஆலய கிரியை மரபில் ஸ்பரிசாகுதி" என்னும் நூல் வெளியிடுவதை எண்ணி மகிழ்கின்றோம். மணி விழாக்காணும் சிவஸ்ரீ சிறீனிவாச இரகுநாதக்குருக்கள் நாதரூபி தம்பதிகளுக்கு சகோதர சகோதரிகள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்விழாவில் அண்ணாவின் மூத்த மகனின் ஆய்வுக்கட்டுரையாக வெளிவரும் இம்மலர் அனைத்துச் சிவாச்சாரியர்களுக்கும் அடியவர்களுக்கும் பேருதவியாக இருக்கும்.

ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிசேக கிரியைகள் கலாகர்ஷணம், ஸ்பரிசாகுதி என்பன முக்கிய கிரியைகளாகும். ஸ்பரிசாகுதி திரிகண்ட ஸ்பரிசாகுதி, நவகண்ட ஸ்பரிசாகுதி என இரு வகைப்படும்.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என பிம்பத்தை மூன்றாக வகுத்து அஷ்ட மூர்த்திகளைப் பூஜித்தும் ஹோமம் செய்தும் பிம்பத்தில் ஒடுக்குவது திரகண்ட ஸ்பரிசாகுதி ஆகும்.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் மகேஸ்வரன், சதாசிவன் நாதம் விந்து சக்தி சிவன் என ஒன்பது பாகம் பண்ணி மூர்த்தி மூர்த்தீஸ்வரரைப் பூஜித்தும் ஹோமம் செய்தும் கும்பத்தில் ஆவாஹிக்கப்பட்ட மூர்தடதியை மூலஸஜ்தான பிம்பத்தில் சேர்ப்பது நவகண்ட ஸ்பரிசாகுதி எனப்படும்.
நவகண்ட ஸ்பரிசாகுதி 9, 17, 25, 33, ஆகிய கும்பாபிசேகத்தின் போது செய்யப்படுகின்றது. ஆலயக்கிரியா மலரில் ஸ்பரிசாகுதி என்னும் இம்மலர் எல்லோருக்கும் பணன்ட அளிப்பதாக அமைய வேண்டுமென எல்லாம் வல்ல மீனாட்சி சுந்தரேஸ்வரப்பெருமான் திருவடிகளை பணிந்து எனது நல்லாசிகளைகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவஸ்ரீ ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி)
ஆதீன கர்த்தா
சிவன் தேவஸ்தானம்
புங்குடுதீவு - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**சிவஸ்ரீ கிரியா கலாபமணி நா. சோமஸ்கந்தக்குருக்கள்** **முத்தமிழ்குருமணி நா.சர்வேஸ்வரக்குருக்கள்**

பெருமையும் அறிவும் நிறைந்த பலசிவாச்சாரியப்பெருமக்களைத் தன்னகத்தே கொண்டது புங்குடுதீவுப்பதியாகும். அவ்வரிவையில் இறுப்பிட்டி சிறீனிவாசகக்குருக்கள் அவர்கள், நயினை சுவாமிநாதக்குருக்களிடம் முறைப்படி வேத சிவாகமங்களைக்கற்றவர். அவரது புதல்வர்களையும் சிறப்புடைய குருமாராக மிளிர வைத்தவர்.

இவரது மூத்த மகனாராகிய சிவஸ்ரீ ரகுநாதக்குருக்கள் (ரகுமணிக்குருக்கள்) இளமையிலேயே தந்தையாரிடத்தும், புங்குடுதீவு ப்ராசீன சமஸ்கிருத பாடசாலையில் கோண்டாவில் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகளிடமும் இவரது மாமனாராகிய சிவஸ்ரீ ஐ. ஐகலாசநாதக்குருக்களிடடும் கல்வி கற்று ஆமகம், சோதிடம், ஆயாத நிர்ணயம் , குண்ட மண்டல வேதிகா லட்சணங்கள் ஆகியவற்றில் முன்னோடியான தேர்ச்சி உடையவர்.

அவருக்கு அகவை 60 ஆகி இன்று மணி விழா நிகழ இருப்பது அனைவருக்கு மகிழ்ச்சி தருவதாகும் நல்ல கல்வி சிறப்பும், குலாசாரமும் மேலோங்கிய புத்திரர்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகளைப்பெற்ற இவரது இவ்விழாவானது சிறப்புற்று அவரும் தர்ம பத்தினியும் அபிஜித் பிரகாச தம்பதிகளாக எமக்கு அருளாசி புரிய பணிந்து போற்றுகின்றோம்.

மேலும் இவரது மூத்த புதல்வர் சிவஸ்ரீ ரகுநாத கமலநாதக்குரக்கள் அவர்கள் இவ்வைபவத்தை ஒட்டி ஒரு அரிய ஆய்வு நூலொன்றை வெளியிட இருப்பது சாலப்பொருத்தமே. இந்தியாவில் பெற்ற குரு குல கல்டவியையும் பின் யாழ் பல்கலைக்கழகத்தில் பெற்ற இந்து நாகரீக சிறப்புப் பட்டதாரிக்கல்வியையும் பல குருமார்களுடன் கலந்து சிறப்பித்த அனுபவத்தையும் ஆதார நூல்டகளின் பிரமாணங்களையும் ஒருங்கு கூட்டி ஆலயக்கிரியை மரபில் ஸ்பரிகாசுதி என்னும் பச்சிம சந்தான விளக்கத்தை தமிழில் கட்டுரையாக வெளியிட உள்ளார்.

மகன் தந்தைக்கு ஆற்றும் இப்புகழ்ப்பணி உலகிற்கும் உதவிடக்கூடயதாகும். கும்பாபிசேவகக்கிரியைகளில் பிரமதானமானதும் ஜீவாத்மாவால் பரமாத்மாவை புரிந்து உணர்டந்து பிருதிவி முதல் பூதங்கள் புவனங்கள், தத்துவங்கள், பதங்கள், கலைகள், மந்திரங்கள், அனைத்தையும் கடந்தும் அவற்றில் செறிந்தும் உள்ள இறைமையை விக்கிரகத்தில் உறைந்தருளச்செய்யும் உயரிய கிரியையே ஸ்பரிசாகுதி ஆகும்.

இவ்வரிய கருத்துக்களை விரிவாக அறிந்திருபப்து கிரியை செய்யும் குருமார்களதும் தரிசிக்கும் அடியார்களதும் கடமையாகும். இக்கருத்தை நோக்கமாகக் கொண்டு சிவஸ்ரீ ரகுநாத கமலநாதக்குருக்களின் இவ்வரிய ஆய்வு நூல் கிரியை முறையில் நல்ல விளக்கத்தையும் வழிபாட்டில் ஈர்ப்பு நிலையையும் நிச்சயம் தரும்.

இவரது பணிக்கு நாம் நன்றிப்பாடுடையோம். சிவஸ்ரீ ரகுநாதக்குருக்களின் மணிவிழாவும் இந்நூல் வெளியூடும் சிறப்புற எல்லாம் வல்ல சொர்ணாம்பிகா சமேத பொன்னம்பலவாண சுவாமியை துதி செய்து போற்றி என்றும் பல காலம் நீடூழி வாழப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்
கதிரமலை சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி
Enfield Nagapooshani Ambaal Temple
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
61-65 Church Lane, Edmonton, London N9 9PZ. Tel : 020 8884 3333



# வாழ்த்துரை

எமது ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கமலநாத இரகுநாதக்குருக்கள் அவர்களின் பெற்றோராகிய சிவஸ்ரீ சிறீனிவாச இரகுநாதக்குருக்கள், நாதரூபி அம்மா தம்பதிகளின் மணிவிழா சிறக்கவும், தம்பதிகள் பல்லாண்டு காலம் தம் சுற்றம் சூழ சீரும் சிறப்போடும் வாழ வேண்டும் என்றும் எம் குல தெய்வமான என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

எமது ஆலய பிரதம குருவின் முயற்சியால் வெளிவரும் "ஆலய கிரியை மரபில் ஸ்பரிசாகுதி" என்னும் மலர் வெளியீடு சிறப்பாக அமைய வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம். இந்நிகழ்வு எமக்கும் பெருமையளிப்பதாகும்.

இம்மலரானது அனைவருக்கும் பயன்படத்தக்க ஓர் மலராக அமையுமென்பது எமது அவா. சிவஸ்ரீ கமலநாத இரகுநாதக்குருக்கள் அவர்கள் தொடர்ந்தும் பல ஆக்கபூர்வமான சமய நூல்களை
புலம் பெயர் மண்ணில் வெளியிடவேண்டும் என்றும் அம்பாளின் பெருங்கருணை என்றென்றும் அவருக்குத் துணை நிற்கும் என்றும் வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயம்
தொலைபேசி: 020 8884 3333

இந்து தமிழ் கலாச்சார சங்கம(என்பீல்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயப்புரை

சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ பா.சர்வேஸ்வரக்குருக்கள் (வசந்தக் குருக்கள்)

பிரதிஷ்டையில் இடம்பெறும் பல கிரியைகளுள் ஸ்பரிசாகுதி என்பது ஒரு உயிர்நாடியான கிரியையாகும். மஹோற்சவங்களிலும் படப்பிரதிஷ்டை செய்யும்பொழுதும் இக்கிரியை பிரதான இடம பெறுகின்றது. எனவே ஸ்பரிசாகுதி பற்றிய விளக்கத்தை சைவ மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தில் கமலநாதக்குருக்கள் அவர்கள் தனது தந்தையாரது மணி விழா நன்னாளில் ஒரு சிந்தனை நூலாக வெளியிடுவது நயந்து மகிழ்ந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவரதும் விருப்பமாகும்.

ஸ்பரிசாகுதி உயிர்நாடியான கிரியை என்று குறிப்பிட்டதற்கும் காரணம் உண்டு. இது நாடி சந்தானத்துடன் தொடர்புடையது. உடலுள் எல்லாத் தொடர்புகளையும் நாடி மூலமே பகிர்ந்து கொள்கின்றோம். அது போன்று யாக வழிபாடு அன்கி காரியம் கும்ப வழிபாடு இவை எல்லாவற்றையும் 36 தத்துவங்களாக்கி நாடி சந்தானம் மூலம் மூல விம்பத்திற்கு பகிர்ந்து கொள்ளுவது தான் ஸ்பரிசாகுதி. அக்னி காரியத்தில் ஆஜ்ய சம்ஸ்காரத்தில் மூன்று நாடிகளான இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய நாடிகள் பூஜிக்கப்படுகின்றது. இதே பிரயோகம் ஸ்பரிசாகுதியின் ஆரம்பத்திலும் மூன்று நாடிகளையும் பூஜிக்கும் முறை குறிப்பிடப்படுகின்றது. உடலிலும் இம்மூன்று நாடிகள் பிரதானமானவை.

"இடை, பிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி" என ஔவையார் குறிப்பிடுகின்றார்.

உயிருக்கு நாடித்துடிப்பு போன்று கும்பாபிசேகக் கிரியைக்கு உயிர் நாடியாக ஸ்பரிசாகுதியும் விளங்குகின்றது. இது திருகண்டம், நவ கண்டம் என இருவகைப்படும். ஆன்ம, விதயா சிவ தத்துவம் என
மூன்றாக வகுத்துச் செய்வது திரிகண்டம். இவை மேலும் ஒன்பது பிரிவுகளாக செய்வது நவகண்டம். இவற்றுள் 36 தத்துவங்களும் 8 மூர்த்திகளும் அடங்குவர்.

"சிவம், சக்தி, நாதம், விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தரு ருத்திரன், றான், மாலயனொன்றி னொன் றாய்
பவந்தரு மருத நாலின் குருவாலும் பயமொன்றா
நவந்தரு பேத மேகநாதனை நடிப்பர் என்பர் என்பது சிவஞானசித்தியார்.

இவ்வாறு ஒன்பது பிரிவுக்குள் அடக்கிச்செய்யும் ஸ்பரிசாகுதி நவகண்டம்.

இவற்றையெல்லாம் முறையான விளக்கத்துடன் தனது தந்தையாரின் மணி விழாவில் கமலநாதக்குருக்கள் அவர்கள் குறிப்பிட்டு விளக்கியுள்ளபார். இவரது ஆய்வுப்பணி அனைவருக்கும் பயன்பட வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எமது தாய்தந்தையரின் மணிவிழாவில் இம்மலரை அவர்களது பாதங்களில் சமர்ப்பித்து வெளியிடுவதில் அகமகிழ்வு கொள்கின்றோம். புங்குடுதீவு மேற்கு அரியநாயகம் புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம் பெரியபுலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம், பட்டையகாரன் வளவு, ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் பெருக்கடி புவனேஸ்வரி அம்மன் ஆலயம், வவுனியா கோயில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில் ஆகியனவற்றின் பிரதம குருவும் தமிழ் சமஸ்கிருத நிபுணத்துவம் பெற்றவரும், சோதிடக்கலை, ஆலயப் பிரமாணம் குண்ட மண்டல வேதிகா லட்சணம் ஆகியவற்றின் பாண்டித்தியம் மிக்கவருமான எமது தந்தையாராகிய சிறீனிவாச ரகுநாதக்குருக்கள், எமது தாயாராகிய நாதரூபியம்மா தம்பதிகளின் மணிவிழாவில் வெளியிடும் இம்மலர் சிவாச்சாரியப்பெருமக்கள் அறிஞர் பெருமக்கள் சைவப்பெருமக்கள், ஆலய தர்ம கர்த்தாக்கள் மாணவர்கள், அனைவருக்கும் பயன்படத்தக்க ஓர் மலராக அமையுமென்பது எமது நம்பிக்கையாகும்.

எமது பெற்றோரின் இம்மணிவிழாவின் காலத்தின் தேவை கருதி இவ்வாய்வுக்கட்டுரையை வெளியிடுகின்றோம்.ஆலயக்கிரியா நிகழ்வுகளில் ஸ்பரிசாகுதி என்னும் கிரியை அதி முக்கியமான தொன்றாகும். எனவே இக்கிரியை பற்றி ஒரு வரலாற்றுப்பின்னணியோடு சான்று ஆதாரங்களோடும் சிவாச்சாரியப்பெருமக்களின் மறைஞான அனுபவத்தோடும் எமது இருவழிப்பேரர்களான அமரர்கள் சிவஸ்ரீ நா. சிறீனிவாசகக்குருக்கள், சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் கையெழுத்து பிரதித்துணையோடும் இந்நூல் ஆய்வு செய்யப்பட்டு வெளியிடுகின்றோம். மேற்குறிப்பிட்ட இரு சிவாச்சாரிய பெருந்தகைகளும் கிரியைகளின் பால் கொண்ட ஈடுபாடு யாவரும் அறிந்ததே.

அவர்களின் ஆவலையும் இம்மலர் பூர்த்தி செய்யும் என எண்ணுகின்றோம். விண்ணுலகில் இருந்து அவர்களின் ஆசியும் எமக்கு கிடைக்குமென நம்புகின்றோம். மஹோற்சவம் முதல் கும்பாபிசேகம் உள்ளிட்ட கிரியைகளில் ஸ்பரிசாகுதி உன்னத இடம் வகிக்கின்றது. ஸ்நபனாபிகேசம் முதல் ஆகமம் சார்ந்த அனைத்துக் கிரியைகளிலும் நாடி சந்தானம் மிக முக்கியம்.

இது பற்றி ஆகம் கூறுவது

"ஊர்னா தந்து நிபாம்நாடிம்
உமிதேன வினிர்கதாம்
அனுதிதே விசந்தீந்தாம்
நிர்க்கதாம் உதிதேநச
ஆத்மநா சோதிதேனைவ
விச்ந்தம் சிந்தையேய்ததா

சிலந்தி தன் வாயில் உள்ள உமிழ் நீர் மூலம் அறுகோணம் அல்லது எண்கோணம் அமைத்து அவ்வலையில் எங்கோ ஓர் மூலையில் வாழும். அவ்வலையில் எந்த ஒரு பகுதியில் உணவு கிடைத்தாலும் அதற்குத் தெரிந்து விடும். உடனேயே அவ்விரையை உட்கொள்ளும். அதுபோலவே யாகசாலையில் எப்பாகத்திலும் நிகழ்கின்ற மந்திரங்கள் ஆகுதிகள், அனைத்தையும் கும்பம், விம்பம், அக்னி ஆகியவற்றை ஒருங்கே இணைப்பது நாடி சந்தானமாகும். இவ்வளவு முக்கியம் வாய்ந்த ஸ்பரிசாகுதி பற்றிய இந்நூல் அனைவருக்கும் பயன்பட எம்குலதெய்வங்களைப் பிரார்த்தித்து எம் தாய் தந்தையரின் பாத கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என்னைப்பெற்றெடுத்து ஆளாக்கிய எனது தாய் தந்தையரின் பாத கமலங்களில் பணிந்து மணிவிழா நன்னாளில் யாழ் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரீக சிறப்புக்கலைமாணி இறுதி ஆண்டுத் தேர்வுக்காய் எனது ஆசானும் பேராசிரியருமான பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களின் வழிகாட்டலில் சமர்ப்பிக்கப்பட்ட எனது ஆய்வு நூலான "ஆலயக்கிரியை மரபில் ஸ்பரிசாகுதி" என்னும் ஆய்வுக்கட்டுரையை மலராக வெளியிடுவதில் அகமகிழ்வு கொள்கின்றேன்.

இவ்வாய்வுக்கட்டுரையை மலராக வெளியிடுவதற்கு அனுமதியளித்த இந்து நாகரீகத்துறைத் தலைவருக்கும் பேராசிரியர் அவர்களுக்கும் எனது நன்றிகள். இம்மலர் ஆய்வு செய்யும் காலத்தில் என்னை நெறிப்படுத்திய பேராசிரியர் அவர்களுக்கும் துறைசார் விரிவுரையாளர்களுக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றேன். இக்காலத்தில் ஆய்வுக்கான மூலாகமங்கள் பத்ததிகள் தந்துதவிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

இம்மலரை வெளியிட எண்ணியபோது ஆசியுரை வழங்கிய பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், மகாதேவக்குருக்கள், வாழ்த்துரை வழங்கிய எமது சிறிய தந்தையார், முத்தமிழ்க்குருமணி, நயப்புரை வழங்கிய வசந்தன் அண்ணா அவர்களுக்கும, வாழ்த்துரை வழங்கிய என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலய இந்து தமிழ்கா கலாச்சார சங்கத்தினர்க்கும் (ஐ.இ),

இம்மலரின் முன்பக்கம் முதலாக அனைத்து அச்சக வேலையை சிறப்பாக குறுகிய காலத்துள் ஆற்றித்தந்த ஜே ஆர் அச்சகம் இலண்டன் ஊழியர்கள் அதன் உரிமையாளர் எனது நண்பர் கவிஞர் திரு பாலரவி அவர்களுக்கும் என் சார்பிலும் என் குடும்பம் சார்பிலும் நன்றிகள் உரித்தாகுக.

மேலும் இம்மலரின் ஆய்வுக்காலத்தில் ஆக்கமும் ஊக்கமும் நல்கிய என் சக தர்மினிக்கும் பால்ய பருவம் முதல் எனக்கு குருவாக விளங்கிய அனைத்து ஆசியப்பெருந்தகைகளுக்கும் தமிழகத்தில் ஐந்து வருட காலம் வேதாகமக்கல்வியை முறைப்படி கற்பித்த என் குருநாதன் டாக்டர் கே.பிச்சைக்குருக்கள் அவர்களுக்கும் நன்றிகள்.

எமது தாய் தந்தையரும் ஷஷ்டியப்த பூரத்தி விழாவினை நடாத்தி வைத்த விப்ர சிரேஸ்டர்கள் சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் இணுவில் டாக்டர் சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள் தமிழகம் பிரம்மஸ்ரீ சிறீனிவாச சாஸ்திரிகள் , தமிழகம் பிரம்மஸ்ரீ விஸ்வநாராணய சர்மா, கொழும்பு அவர்களுக்கும் எனது நன்றிகள்.
இமம்ணி விழா சிறக்க உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

நிறைவாக என்குல தெய்வம் அரியநாயகம்புலம் வீரகத்தி விநாயகர் திருத்தாளிலும் எம்மை எம்முள் ஆளும் என்பீல்ட் நாகபூஷணி அம்பாளின் திருத்தாளிலும் பணிந்து எனது கன்னி முயற்சியைச் சமர்ப்பிக்கின்றேன்.

அன்புடன்
சிவஸ்ரீ இரகுநாத கமலநாதக்குருக்கள் BA·(Hons)
பிரதம குரு, என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயம்
இங்கிலாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

இந்துப்பண்பாட்டு மரபின் மூல இலக்கியங்கள் என போற்றப்படும் வேதாகமங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது சைவசமயத்தவரது ஆழ்ந்த நம்பிக்கையாகும். இவை நாதனுரை முதல்வன் நூல் எனப் போற்றப்படுவன. வேதாகமங்களின் சமய மரபுகளும், பண்பாட்டு மரபுகளும் குறிப்பிடப்பாலன. மக்களது ஆன்மீக வாழ்வை வளம்படுத்த உதவும் கிரியைகளை இவை காலங்காலமாக வகுத்துத் தந்துள்ளன. வேதகாலந் தொட்டு நிலவிவரும் கிரியை மரபானது ஆகமமரபிலும் தொடர்ந்து வருகின்றன.

இந்துசமய மரபின் கிரியை சார்ந்த அம்சங்களைக் கூறும் இலக்கியங்களாக வேதங்களும், ஆகமங்களும், இதிகாசபுராணங்களும், தர்மசாஸ்திரங்களும் இந்துக்களது தலைசிறந்த மேம்பாட்டு இலக்கியங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் வேதங்கள் தொடர்பான ஆய்வுகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆகமங்கள் தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிவடையக்கூடிய வாய்ப்பும் தேவையும் உள்ளன.

தென்னாட்டிலும் இலங்கையிலும் அமைந்து விளங்கும் திருக்கோயில்களில் பெரும்பாலானவற்றில் நிகழும் கிரியைகளெல்லாம் ஆகமம் கூறும் முறையினுக்கமைய நிகழ்த்தப்படுவன. இவை காட்டும் சமயவழிபாட்டு மரபுகளும், தத்துவ சிந்தனைகளும், ஆன்மீக வழிகாட்டல்களும், நன்கு மனங்கொள்ளத்தக்கன. ஆகமங்கள் கூறும் கிரியைகள் தனிச்சிறப்பு வாய்ந்தன. ஆகமங்கள் காட்டும் வழி தனி வழி. இவற்றால் ஆகமங்கள் சிறப்பு நூல்களெனப் போற்றப்படுவன.

ஆலயங்களில் நிகழும் கிரியைகள் ஓர் ஒழுங்கான அமைப்பைக் கொண்டவை. கிரியைகள் மக்களின் தேவையை ஒட்டியோ மக்களுக்கு விளக்கம் ஏற்படுவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டோ காலத்திற்குக் காலம் சூழ்நிலைக்கேற்ப வேறுபடுத்தி அமைக்கப்படுவனவல்ல. எனவே ஆகமங்கூறும் முறைப்படி கிரியைகளை அவதானித்து அவற்றை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டுவதேயன்றி காலப்போக்கினை ஒட்டி மக்கள் விளங்கும் வகையில் அவற்றை மாற்றியமைக்க இந்தியப் பண்பாடு இடந்தராது என பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் கூறுவது சிந்தனைக்கரியது. மேலும் கிரியைகள் எல்லாம் நிகழ்த்துவதற்கே உரியன. நிகழும் கிரியைகளைப் பக்திக் கண்ணால் கண்டு கண்குளிரும் பேற்றைப் பெறுவதுடன் திருப்தியடைவார்கள் அடியவர்கள். எனவே விளக்கம் பெறவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுவதில்லை. எனினும் புத்திபூர்வமான அறிவையே கொண்டு மட்டிடும் இன்றைய சூழ்நிலையில் மக்கள் விளக்கங்களையே மதிக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு மக்கள் அறிந்து கிரகிக்கும் விளக்கங்கள் இக்காலச் சூழ்நிலைக்கேற்ப எழுதப்படுவதிற் தவறேதும் இல்லை. கிரியைகளின் விபரங்களைக் கூறுவதுடன் நின்றுவிடாது விளக்கங்கள் கூறும் முறையையும் பழைய வைதீக கிரியை நூல்களாகிய பிராமணங்கள் முதன்முதலாக மேற்கொள்ளக் காண்கின்றோம். இம்மரபு தொடர்ந்து பிற்காலக் கிரியை நூல்களில் எல்லாம் காணப்படுவனவே. எனினும் அவற்றைத் தொகுத்துச் சுவைப்பட வாசிக்கத்தக்கவாறும் விடயங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ளக்கூடியவாறும் வரலாற்று முறையாக எழுதப்பட்ட நூல்கள் இதுவரை தோன்றவில்லை. ஆகமங் கூறும் சைவக்கிரியைகளைப் பற்றிய அளவில் இந்நூலே முதன்முதலாக எழும் வரலாற்று நூல் எனலாம்" எனவும் குறிப்பிடுகின்றார்.

இவ்வகையில் ஆகமங்கள் கூறும் கிரியை சார்ந்த விடயங்கள் அளப்பரியன. காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள 28 ஆகமங்களுள் சில மட்டும் இன்று கிடைப்பன. இவைகூறும் விதிகளனைத்தையும் பிரமாணமாக கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக்கூறும் நூல்கள் பல இவ்வாகமங்களை அடுத்துத்தோன்றின. இவற்றினை பத்ததிகள் என வழங்குவர்.

சிவாகமங்கள் கூறுகின்ற சமய மரபிலே ஆலய கிரியைகளை நெறிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நூல்களுள் பத்ததிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆகமங்கள் ஒரு குறிப்பிட்ட ஒரு தெய்வத்தைத் தாபிக்க வேண்டிய இடம், அத்தெய்வத்திற்கு பிரதிஷ்டைக்குரிய முக்கிய அம்சங்கள், அத்தெய்வத்திற்குரிய நித்திய நைமித்திய வழிபாட்டு மரபு, வழிபாட்டின் பயன் ஆகியவற்றை மிகச்சுருக்கமாகக் கூறுகின்றன. குறிப்பிட்ட ஒரு தெய்வத்திருவுருவத்தின் தெய்வீக வரலாற்றை அறிவதற்கு புராணங்கள் உதவுவது போல ஆகமங்கூறும் கிரியை மரபுகளை வகுத்தும், விரித்தும் கூறும் வகையில் பத்ததிகள் சிறப்புப் பெறுகின்றன. ஆகமங்கள் இவ்வாறு விரித்துக்கூறும் விதிகள் அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறைகளை ஒழுங்குபடுத்துவன என்ற வகையில் பத்ததிகள் சிறப்புப் பெறுகின்றன..

ஆகமக் கிரியைகள் மிகப்பரந்தன என்ற காரணத்தினால் பத்ததிகளின் துணையின்றி கிரியைகளைச் நெறிப்படுத்துவது கடினம். அடர்ந்த காட்டில் செல்பவனுக்கு ஒற்றையடிப்பாதை உதவுவது போல பரந்த கிரியைகளை உள்ளடக்கிய ஆகம மரபை நடைமுறைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவருவதற்குத் தொன்மைக் காலம் முதல் பத்ததிகள் உதவி வருகின்றன.

பத்ததிகளை உருவாக்குவதில் ஒரு சிவாச்சார்ய மரபு உருவாகியது. ஆகம கிரியை மரபுகளை ஒழுங்கு படுத்தி பத்ததிகளாக வெளியிட்ட பெருமை பதினெண் பத்ததி சிவாச்சாரியர்களுக்கே உரியதாகும். உக்ரஜோதி, சத்தியஜோதி, ராமகண்டர், வித்யாகண்டர், நாராயணகண்டர், விபூதிகண்டர், ஸ்ரீகண்டர், நீலகண்டர், சோமசம்பு, ஈசானசம்பு, ஹிருதயசிவன், பிரம்மசம்பு, வைராக்கியசிவன், ஞானசம்பு, திரிலோசனசிவன், வருணசிவன், ஈஸ்வரசிவன் மற்றும் அகோரசிவன் எனப் பெயர் பெற்ற சிவாச்சாரியர்கள் இப்பத்ததிகளை உருவாக்கி பெரும் தொண்டு ஆற்றினர்.

ஆகம மரபு காலத்தால் சிதைந்து போகாவண்ணம் பாதுகாத்த பெருமை குருபாரம்பரியத்திற்கு உரியதாகும். இவர்கள் குருகுலத்தின் வாயிலாக குருவின் வழிகாட்டலிலும் இந்த அறிவைப் பெற்று சிவாலய மரபில் பேணிவந்துள்ளனர். தந்தை மகனுக்குக் குருவாக இருந்து இப் பத்ததி மரபு பேணப்பட்டு வந்துள்ளது. பெரும்பாலான சிவாச்சாரியர்கள் அவ்வத் தெய்வத்திற்குரிய பிரதிஷ்டை, மகோற்சவம் ஏனைய நைமித்தியக் கிரியைகளை இயற்றுவதற்கு இப்பத்ததி மரபு துணைபுரிகின்ற காரணத்தால் அவற்றைப் பரம்பரை பரம்பரையாக பேணிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகமங்கூறும் விதிமுறைகளை அறிவியல் ரீதியாக அறியலாமே ஒழிய நேரடியாகப் பிரயோகிக்க முடியாது. ஆகவே பிரயோக காரணத்தைக் கொண்டே பத்ததிகள் உருவாகின. இவ்வகையிலேதான் கி.பி. 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சைவ நூலாசிரியரும் உரையாசிரியருமான அகோரசிவாச்சாரியார் அவர்களின் பத்ததி குறிப்பிடத்தக்கதாகும்.

அகோரசிவாச்சாரியாரின் பத்ததியை (சிவப்பிரதிஷ்டாகாரியை) அடிப்படையாகக் கொண்டு மூலாகமங்களிலும் கூறப்பட்ட விடயங்களையும் அணுகி ஆலயக் கிரியை மரபில் ஸ்பர்சாகுதி ஆய்வு செய்யப்படுகின்றது. இவ்வகையிலே அகோரசிவாச்சாரியாரின் பத்ததி மொழிநடை தனித்துவம் வாய்ந்தது. கிரியை செய்கின்ற சிவச்சாரியாருக்கும், கிரியைகளை மேற்பார்வை செய்கின்ற சர்வபோதகாச்சாரி யாருக்கும் கிரியைகள் என்னென்ன வகையில் செய்யவேண்டும் என்பதை நன்கு நெறிப்படுத்தித் தருகின்றது.

ஏனவே ஆகமமரபில் பத்ததிகளின் உரைநூல் எனும் வகையில் கிரியாஞான பாதங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அகோரசிவாச்சாரிய பத்ததியில் நன்கு காணமுடிகிறது. தென்னாட்டையும் இலங்கையையும் பொறுத்த வரை அகோரசிவாச்சாரியர் பத்ததியே தலையாய பத்ததியாக விளங்குகிறது. சோமசம்பு பத்ததியும் பயன்பாட்டிலுள்ளது.

யாழ்ப்பாணத்திலே இன்று ஆலயங்களிலே நடைபெறும் நித்திய நைமித்தியக் கிரியைகள் பற்றி சிவாச்சாரியர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் அவ்வப்போது ஐயங்கள் ஏற்படும் வேளை ஆகமங்கள் கூறும் ஒழுங்கு யாது அல்லது ஆகம சம்மதம் எத்தகையது என ஆராய்ந்து ஏற்படும் ஐயங்களுக்குத் தெளிவு பிறப்பித்துக்கொள்ள வேண்டிய தேவையும் இருந்து வருகின்றது. இந் நிலை தவிர்க்கமுடியாததொன்றாகும். சிற்சில வேளைகளில் ஒரு சிலரது கவனக்குறைவினாலும், அக்கறையின்மையாலும் ஆகம நெறிமுறைகளில் நெகிழ்ச்சி ஏற்படுமிடத்தும் ஆகமங்கூறும் ஒழுங்கில் ஆலயக்கிரியைகளை நெறிப்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கை சிவாச்சாரியர்களிடையேயும், சைவசமயிகளிடமும் நிலவி வருகின்றன. எனவே யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் ஆகம அறிவும் அது கூறும் கிரியை விடயங்களையும் ஆய்வு செய்தல் அவசியம் என எமது துறைத்தலைவர் அடிக்கடி கூறும் இக் கருத்தையும் மனதில் கொண்டே இக் கட்டுரை எழுதப்பட்டது.

ஆகமங்கள் தொடர்பான ஆய்வுகள் பல்கலைக்கழகக் கலாநிதிப்பட்டம் வரையிலும் விரிந்து செல்கின்றன. குறிப்பாக பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் "பூனா" பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட ஆகம மரபுசுவறிய தென்னிந்திய சைவத்திருக்கோயில்களில் நிகழும் கிரியைகள் பற்றிய ஆய்வுகள் ஈண்டு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகள் "சிவாகமங்களும் சிற்பநூல்களும் சித்திரிக்கும் சிவவிக்கிரகவியல்" என்பனவும் போன்ற ஆய்வுகள் ஆகமங்களிலேயே மேற்கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடற்பாலது. பல்கலைக்கழகத்தில் இன்றும் ஆகமம் தொடர்பான விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டும், ஆகமங்கள் தனியான பகுதிகளாகவும் சிறப்பான பகுதிகளாகவும் முக்கியம் கொடுக்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருவதும் நோக்கற்பாலன.

அதேபோல தேவகோட்டை சிவாகம சங்கத்தாரின் பதிப்புக்களும் தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தின் பதிப்புக்களும் குறிப்பிடப்பாலன. சிறப்பாகப் புதுச்சேரியிலுள்ள பிரான்ஸ் தேசத்து ஆராய்ச்சிக் கழகத்தினரின் ஆகமங்களினதும், பத்ததிகளினதும் ஆய்வுகளும், பதிப்பு முயற்சிகளும் நன்கு மனங்கொள்ளப்பாலன. அத்துடன் சென்னை குப்புஸ்வாமி சாஸ்திரியின் ஆய்வு நிறுவனம் கொழும்பு ஸ்ரீ முத்துவினாயகர் வேதாகம ஆய்வு நிறுவனம் என்பனவும் வேதாகம ஆய்வுகளை மேற்கொள்கின்றன. தென்னாட்டிலும் ஈழத்திலும் அமைந்த குருகுலங்களும் ஆகம அறிவை விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருகின்றன. இந்த நூற்றாண்டில் அச்சுவேலி குமாரசாமிக் குருக்களின் "சிவலிங்க பிரதிஷ்டாவிதி" "சிவாகம சேகரம்" என்பனவும் நயினை ஐ.கைலாசநாதக்குருக்கள் அவர்களின் "ஆகமாமிர்த வர்ஷிணி" என்பனவும் குறிப்பிடப்பாலன. தற்போது யாழ்ப்பாணத்தில் சேர். பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் ஆய்வுகளை நடத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனம் தற்போது குருகுலம் ஒன்றை யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் நிறுவி செயலாற்றி வருகின்றது. இவ்வகையில் ஆகம மரபைப் பின்பற்றி நிகழும் ஆலய கும்பாபிஷேக கிரியைகளில் ஒன்றாகிய ஸ்பர்சாகுதி எனும் கிரியையை கருவூலமாகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. இக்கிரியையில் காணப்படும் விடயங்களை எடுத்து விளக்கிக் கிடைத்த ஆகமங்களிலும், பத்ததிகளிலும் ஓரளவு ஒப்பிட்டுக்கூறப்பட்ட விடயங்களை அனுசரித்து இக்கட்டுரை அமைகின்றது.

இக்கட்டுரை ஐந்து பகுதிகளாக அமைந்து விளங்குகிறது. முதல் இயலில் ஆலயங்களும் கிரியை மரபும் என்ற தலைப்பில் சிவாலயப் பெருமை, சிவலிங்க வழிபாட்டின் அவசியம், ஆகமங்கள் கூறும் கிரியை மரபு என்பன ஓரளவு கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதி வைதீக மரபும் ஆகம மரபும் என்ற தலைப்பிலுள்ளது. இந்தக்கிரியையில் வைதிகம் ஆகமம் இவற்றின் ஒற்றுமை வேற்றுமை என்பன கூறப்பட்ட ஆலயத்தில் நிகழும் ஸ்பர்சாகுதி கிரியை மரபில் இவை இரண்டும் இணைவதைச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அடுத்து மூன்றாம் பகுதியே இக்கட்டுரையில் பிரதான விடயமான ஸ்பர்சாகுதி செய்யப்படும் ஒழுங்கமைப்பை அகோரசிவாச்சாரியாரின் பிரதிஷ்டா காரிகையின்படி கூறப்பட்டுள்ளது. ஸ்பர்சாகுதிக்கு முன் பின்னாக நடைபெறும் கிரியைகள், அஷ்டமூர்த்தி, மூர்த்தீசர், தத்வம் என்பன கூறப்பட்டுள்ளது. கட்டுரையின் விரிவுக்கஞ்சி முக்கியமான பிரயோகங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவற்றிற்கான ஏனைய விபரங்கள் மேலதிக விபரங்களுக்காக சில படங்களும், சில அட்டவணைகளும் இடம்பெற்றுள்ளன.

அடுத்த நான்காம் பகுதியில் ஸ்பர்சாகுதி கிரியை மரபில் காணப்படும் சமய தத்துவ சிந்தனைகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்யப்படுகின்றது. தத்துவ நூல்கள் கூறும் இறைவன் பற்றிய தத்துவ சிந்தனைகள், ஆகமங்கூறும் ஸ்பர்சாகுதி கிரியையில் எவ்வாறு சுவறியுள்ளன என்பதையும், அக் கிரியை எவ்வாறு நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டும் வகையில் இவ்வியல் அமைகின்றது.

ஐந்தாம் இயலாக அமையும் கிரியைகளில் ஞானபாத சிந்தனை கிரியையில் ஈடுபடும் சிவாச்சாரியர் தன்னை சிவோஹம் பாவனையாக மாற்ற முயற்சிக்கும் கிரியைகளையும் அவற்றிலுள்ள ஞானபாத சிந்தனைகளையும் கிரியைகள் எவ்வாறு ஞானபாதத்திற்கு இட்டுச் செல்கின்றன என்பதையும் அகோரசிவாச்சாரியார் பத்ததியையும் சிவஞானசித்தியார், திருமூலர், திருமந்திரம் என்பனவற்றோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இயல் ஆறில் நிறைவுரையாக ஸ்பர்சாகுதி கிரியையின் சிறப்பையும் ஞானபாத மேன்மையையும், இறைவனுக்கு வழங்கப்படும் உபசார வகைகளும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு "ஆலயக் கிரியை மரபில் ஸ்பர்சாகுதி ஓர் ஆய்வு" எனும் கட்டுரைக்கு மற்றைய ஒவ்வொரு பகுதிகளும் ஒவ்வொரு அம்சங்களாகவே அமைகின்றன.

ஆகமம் கூறும் ஒவ்வொரு கிரியைகளும் தனித்தனியாக ஆய்வு செய்யத்தக்க வகையில் அமைவன. ஆலய வழிபாடு செய்வோரும் ஆன்மார்த்த வழிபாடு செய்வோரும் கிரியைகளில் காணப்படும் உட்பொருள் என்ன என்பதைச் சிந்தித்துப்பார்த்தால் அவையனைத்தும் ஞானபாத நுட்பங்களை உள்ளடக்கியவையே என்பதனை தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். ஞானபாதம் என்பது கிரியைகளை நன்கு கண்டு அவற்றின் உட்பொருளை அனுபவித்து அனுபவரீதியாக ஞானத்தை அடையலாம் என்பது ஓர் தெளிவான விடயம். "கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என சிவப்பிரகாச நூல் தரும் விளக்கம் ஆகமக் கிரியைகளைப் பொறுத்தவரை நன்கு பொருந்துவதாகும்.

ஆய்வாளன்

**சிவசிறீ ரகுநாத கமலநாதக்குருக்கள்** B.A(Hons)

பிரதம குரு

என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயம்

இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஒன்று

## திருக்கோவிற் கிரியை மரபு

இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாய் விளங்குபவை ஆலயங்கள் ஆகும். எங்கும் பரந்து வியாபித்துள்ள இறைவன் சாந்நித்தியமாக உறையுமிடம் ஆலயங்களே என்ற நம்பிக்கை இந்துக்களிடையே தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. .இவ்வாலயங்களில் நிகழும் கிரியை ஒழுங்கு, வழிபாட்டு மரபு, நிர்மானிக்கும் நெறிமுறைகள், குற்றங்குறை ஏற்படுமிடத்து மீண்டும் நிறைவுறச் செய்யும் வழிமுறைகள் ஆகிய இன்னோரன்ன விடயங்களைக் கூறுவதற்கு சில ஒழுங்கு முறைகள் பேணப்பட்டு வந்துள்ளன. தொன்மைக்காலம் முதல் பேணப்படும் வழக்க முறைகளை மரபு என்று அழைப்பர்.

இந்துக்கள் தமது வாழ்வைச் சமயம் மற்றும் கலைத்துறை சார்ந்த நிலையில் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறப்பாக ஆலய வழிபாட்டைப் பொறுத்தமட்டில் சிற்சில மரபுகளுக்குட்பட்டு தமது பண்பாட்டை வளர்த்து வந்ததால் அவர்களது வழிபாட்டு மரபில் தொன்மைக் காலம் முதல் பல சிறந்த விழுமியங்கள் பேணப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. இறை வழிபாட்டிற்குரிய வழிமுறைகளைக் கூறும் நூல்கள் ஆகமங்கள் எனப் போற்றப்படுகின்றன. ஆகமங்கள் தொன்மைக்காலம் முதல் இற்றை வரைக்கும் ஆலய வழிபாட்டு நெறிகளை வகுத்தும் தொகுத்தும் கூறும் இலக்கியங்களாகும்.

### 01.2 ஆலயங்களின் மேன்மை

ஆலயப் பண்பாட்டின் மூல நூல்களாக விளங்கும் ஆகமங்களை முதன்மையாகக் கொண்டு எழுந்த வாஸ்துசாஸ்திரங்களும், சிற்ப சாஸ்திரங்களும் ஆலய வளர்ச்சிக்கு உதவின. இந்து நாகரிக வளர்ச்சிக்கு ஆலயங்களே பெரும் பங்காற்றின. ஓர் நாகரிகத்தின் மேன்மைக்கு அடிப்படையாக விளங்குவன பண்பாடாகும். பண்பாடு மனித வாழ்வின் ஆணிவேர். நிலத்தை நல்ல முறையில் மற்றவர்களுக்குப் பயன்கொடுக்கும் வகையில் பண் படுத்துவது போன்று மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில் பயன்படுத்துவது பண்பாட்டின் பாற்படும். "ஓர் இனத்தின் பண்பாடு இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல் முதலியவற்றின் மூலம் விளக்கமுறுகிறது".

சமய இலக்கியம் என்ற வகையில் சமயம், கலை ஆகிய அம்சங்களின் கருவூலம் என்ற வகையிலும் சிறப்புப் பெற்ற ஆகமங்களை மூலமாகக் கொண்டு சமய நிறுவனமாக எழுச்சி பெற்ற ஆலயம் மக்களது உளப்பண்பாட்டிற்கு வழிவகுத்தது. கோவில் வழிபாட்டிற்கும் மற்றைய சடங்கிற்கும் வேண்டிய மந்திரங்களைப் பற்றிக் கூறுபவையே சிவாகமங்கள் என்று பெரும்பாலானவர்கள் கருதுவர். சிவாகமங்கள் மந்திரங்கள் பற்றிக் கூறுபவை என்பது உண்மை எனினும் அவை அவ்விடயம் பற்றி மட்டும் கூறுகின்றன என்று கருதுதல் பொருந்தாது. தனிமனித மேம்பாட்டிற்கும் சமுதாயம், கிராமம், நாடு இவைகளின் உன்னத நிலைக்கும் எவையெவை அவசியமோ அவையனைத்தையும் சிவாகமங்கள் மிக விரிவாக எடுத்துக்கூறுகின்றன. தனிமனிதனது நல்வாழ்விற்கும் நாட்டினது மேன்மைக்கும் ஆலயங்களே உறுதுணையாக விளங்கி வந்துள்ளன என்பதனை அப்பர் சுவாமிகளும்

"திருக்கோவில் இல்லாத திருவியல் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவியலூரும்
பருக்கோடிப் பக்திமையிற் பாடா ஊரும்
பாங்கினொரு பல தளிகள் இல்லாவூரும்
விரும்போடு வெண்சங்கமூதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே"

என்ற பாடல் மூலம் கிராமங்கள் அல்லது நகரங்களின் சிறப்பிற்கு ஆலயங்களே காரணமென விளக்குகின்றார். மேலும் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள் "பசுவினுடைய உடம் பெங்கணும் பரந்தோடும் குருதி பக்குவமடைந்து பாலாக பரிணமிக்கும் பொழுது அதை வெளியேற்ற முலைகள் அமைந்து விளங்குவது போல் உலகெங்கணும் பரந்து விளங்கும் பரமன், ஆன்மாவின் ஈடேற்றம் கருதிக் கருணை மேலீட்டால் உருவந்தாங்கி எழுந்தருளி இருக்கும் இடம் கோவில்" என விளக்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் சாந்நித்யம் கொண்டு அருள் சுரக்குமிடம் ஆலயம் என்று பெயர் பெறுகிறது. மற்ற இடங்களில் வழிபடுவதைக் காட்டிலும் ஆலயத்திலேயே சென்று வழிபடுதல் சிறப்புடையது என்பதனை ஔவையாரும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று கூறுகிறார். ஆலயமென்பதை ஆ + லயம் என வகுக்கலாம். உயிர்கள் இலயித்தற்குரிய இடமே ஆலயம் என சிறப்புப் பெயர் வழங்கப்படுகிறது. மனிதன் பண்புள்ளவனாக விளங்க உள்ளத்தின் வளர்ச்சியும், பக்குவமும் இன்றியமையாதவை. மனம் ஒருநிலைப்பட்டு மெய்மறந்து தியானத்தில் மூழ்கவும் ஆலய வழிபாடு உதவுகிறது. அதேபோல கோவிலென்ற பதமும் ஆலயத்திற்கு வழங்கப்படுகிறது. கோ என்பது அரசன் எனவும் இல் என்பது வீடு எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. அப்பரும்

"பெருக்காறு கடைக்கனிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்
கருப்பதில் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோவில் சிவனுறையும் கோவில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சும் தீவினைகள் தீருமன்றே"

இவ்வாறாக கோயில் வகைகளைக் கூறி நிற்கின்றார். அது போல் சாஸ்திர நூல்களில் "விமானம்", "பிராசாதம்" எனவும் கூறப்படுகிறன. விமானம் எனின் விசேடமாக அளந்து அமைக்கப்பட்டது எனும் கருத்தைச் சுட்டிநிற்கின்றது. இறைவன் பெருமையினை அளத்தற்கு சிறந்த கருவி என்பதால் இதற்கு விமானம் என அழைக்கப்பட்டது. தம் அழகினால் தேவர்களினதும், மனிதர்களினதும் உள்ளத்தைக் கவர்ந்து மகிழ்விக்கின்ற காரணத்தினால் கோவிலுக்கு பிராசாதம் என்ற பெயர் வழங்கப்படுவதாக சில்பரத்தினம் எனும் நூல் கூறும். ஆலயங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களின் பெருமை பற்றி அப்பர் சுவாமிகள்,

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்சொல் புகாதே" எனவும்

இக் கருத்தை சிவஞான சித்தியாரும்,

"திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னை
சிவனெனவே கண்டவர்க்கு சிவனுறைவானங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையுமவர்க்கும்
முளனெங்கு மில்லனிங்குள னென்பார்க்கும்
இருப்பாய வடிவாகுயிந்தனத்தினெர்போல்
மந்திரத்தின் வந்துதிப்பனிருஞ் சுரப்பிக்கெங்கும்
உருஞ்சானா வொண்ணாத பால்முலைப்பால் விம்மி
உருகுவதுபோல் வெளிப்பட்டருறுவானன்பர்க்கே"

எனவும் மெய்கண்டதேவரும்,

"ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

எனக் கூறுவதன் மூலம் ஆலயத்தின் தொன்மையும் மேன்மையும் புலனாகின்றது. மேலும் இந்துக்கள் இயற்கைச் சூழலை நன்கு பயன்படுத்தினர். ஆலயப் பண்பாட்டினைப் பேணிவந்துள்ளமை இந்து நாகரிக வரலாற்றில் மற்றொரு சிறப்பம்சமாகும். ஆலயம் உருவாகும் பூமியே புனிதமானதாகவும் பூசைக்குரியதாகவும் ஆயிற்று. இத்தகைய இயற்கைச் சிறப்புமிக்க இடங்களில் இறைவனுக்கென ஆலயங்கள் எழுப்பவும் தலயாத்திரை மேற்கொள்ளவும் வழிபடவும் செய்தனர். மிகப் பழைய நூல்களில் ஒன்றாகிய பிருஹத் சம்ஹிதை ஆலயங்களைக் குறிப்பிடுமிடத்து

வனோப்பாந்த நதீசைல நிர்ஜரோ பாந்தபூமிஷு
ரமந்தே தேவதா நித்யம் பூரேஷு த்யான வத்சுச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோலைகள், ஆறுகள், மலைகள், ஊற்றுக்கள், பூங்காக்கள் நிறைந்த இடங்களில் தெய்வங்கள் உறைகின்றன" என இந்நூல் குறிப்பிடுகின்றது. தெய்வீகத்தை உணர்த்தும் இத்தகைய இடங்களே ஆலயங்கள் அமைப்பதற்கு ஏற்றவையாகக் கொள்ளப்பட்டன. ஆலயம் அமைய வேண்டிய இடம் பற்றி தந்திர அமுச்சயம் என்ற பிறிதொரு நூல்.

தீத்தாந்தே தடிநீதடே ஜலநிகே ஸ்தீரே ஸரித் சங்கமே
சைலக்ரே "அ" த்திதடே மனோபவன யோஸ்த்யானதேசே ததா
சித்தாத்யாய தனேஷு வா குருவரோ க்ராமே பூரே புத்தனே
தேசே (அ) ந்யத்ர மனோ ரமே சுரசமிஜாயாயம் க்சிதிம் கல்பயே"

"தீர்த்தக்கரை, ஆற்றங்கரை, கடற்கரை, ஆறுகள் சங்கமமாகும் இடம் மலையுச்சி, மலைச்சரிவு, வனம், பூங்கா, பூந்தோட்டம், சித்தர்களின் இருப்பிடம், கிராமம், நகரம் மற்றும் வனப்புமிக்க இடம் ஆகியவற்றில் ஒன்றினைக் குருவானவர் தேர்ந்தெடுக்க வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் ஆலயங்கள் ஆகமமரபிலேயே அமைந்துள்ளன என்பதனை தமிழ்மந்திரம், தமிழ்ஆகமம் என்று போற்றப்படும் திருமூலரின் திருமந்திரத்தில் நாம் காணலாம். கோயிலின் வழிபாடு பற்றியும், அமைப்புப் பற்றியும் மிகத்தெளிவாக கூறுகின்றார். திருக்கோவில் அமைப்புப் பற்றி,

" தூயவிமானமுந் தூலமதாகுமால்
ஆய சதாசிவ மாகு நற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய ஆரணியை ஆய்ந்து கொள்வார்கட்கே"

எனவும் சைவசமய நெறியில்,

"தூலலிங்கமாந்தூபி சூக்குமா முள்ளிலிங்கத் மேலும் பலிபத்திரம்"

எனவும் கூறுகிறது. திருமூலர் சிவாலய பூசைபற்றிக்கூறுமிடத்து

"முன்னவனார் கோயில் பூஜைகள் முட்டின்
மன்னர்க்கு தீங்குள வாரி வளல்குன்றும்
கன்னல் களவு மிகுந்திடுதல் காசினி
என்னருந் நந்தி எடுத்துரைத்தானே"

இவ்வாறாக ஆலயங்கள் ஆகமமுறையில் நடைபெறுகின்றன என்பதும் அங்கே பூஜைகள் நடைபெறாதவிடின் ஏற்படும் தீமை பற்றியும் திருமூலர் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். திருமூலர் தரும் இக்கருத்துக்களின் அடிப்படையில் சில விடயங்கள் தெளிவாகின்றன. கோயில்கள் ஆகமமரபில் நடைபெற வேண்டுமென்பதும் கோயில்களில் கடமை புரியும் சிவாச்சாரியார் ஆகமத்தில் ஆழ்ந்த அறிவுடையவராயிருத்தல் வேண்டுமென்பதும் வற்புறுத்தப்பட்டுள்ளது. எனவே திருமூலர் கூறும் ஆகமங்களின் பெயர்களைக் கொண்டு ஆகமகால ஆய்வின் முடிவினை ஓரளவு ஏற்க முடிகிறது.

## 3. ஆலயத்திற்கும் ஆகமங்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை விளக்கும் சான்றுகள்

ஆகமங்களின் காலத்தைச் சரிவர நிர்ணயிப்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எனினும் ஆகம காலத்தை வரையறுக்க முயன்ற அறிஞருள் விண்டர் நீட்ஸ், ஸ்கோமெரஸ், ஃபகுவார் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவார். ஆகமங்களைப்பற்றி ஓரளவே அறியக்கூடியதாயினும் அதன் கால எல்லையை வரையறுப்பது முடியாததாகும் எனக்கூறும் விண்டர் நீட்ஸ் ஏனைய ஆசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஆகம காலத்தைக் குறிப்பிட முனைகிறார். ஸ்கோமெரஸ் கி.பி 1ம் அல்லது 2ம் நூற்றாண்டுகளில் திருமூலரும் ஏனைய தமிழ்ப் புலவர்களும் ஆகமங்களைப் பெருமளவில் பயன்படுத்தியிருப்பர் எனக்கொண்டு ஆகமங்கள் கிறிஸ்துவுக்கு முன்னைய காலங்களில் நிலவியிருந்திருக்கலாமென்கிறார். ஆனால் திருமூலர், மாணிக்கவாசகர் ஆகியோரது காலத்தை கி.பி.8ம் 9ம் நூற்றாண்டாகக் கொள்ளும் ஃபர்குவார் கி.பி 7ம் 8ம் நூற்றாண்டுகளை ஆகமத்தின் பின் எல்லையாகக் கொள்வார். இவ்விருவரது கருத்துக்களிலும் ஃபர்குவாரது கருத்துக்களையே விண்டர் நீட்ஸ் ஏற்கிறார். திருமூலர் மாணிக்கவாசகர் ஆகியோரது கால நிர்ணயத்தில் நிலவும் கருத்துவேறுபாடுகளுக்கு மத்தியில் இவ்விருவரது காலமும் ஆகமகாலத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மைல்கல்லாக அமைவதை நாம் மறுப்பதற்கில்லை. கர்மாகார் என்ற அறிஞர் ஆகமங்களின் காலம் பற்றிக் குறிப்பிடுமிடத்து சுவேதாஸ்வர உபநிடதமும் பகவத்கீதையும் எழுதப்பட்ட ஓரிரு நூற்றாண்டுகளையடுத்து ஆகமங்களும் இலக்கிய வடிவம் பெற்றிருக்கலாமென்பர். மகாபாரதத்தில் ஆகமங்கள் பற்றிய குறிப்புக்களை எடுத்துக்காட்டி அதைச் சான்றாகக் கொண்டு மகாபாரத முடிவில் அதாவது கிறிஸ்துவிற்கு முற்பட்ட 2ம் நூற்றாண்டில் மகாபாரதம் முழுநூல் வடிவம் பெற்ற காலத்தில் ஆகமங்கள் எழுத்துவடிவம் பெற்றிருக்கலாமென்பதே இவரது கருத்தாகும்.

தென்னாட்டில் வளர்ச்சி பெற்ற சைவத்திற்கு சிவாகமங்கள் பெருமளவில் உதவியுள்ளன. புராணங்கள், ஆகமங்கள் கூறும் திருவுருவங்களிற்குரிய தெய்வீக விளக்கக் கதைகளையும் ஐதீகங்களையும் கூறுவன வடமொழி புராண கருத்துக்களும் ஆகமமரபும் தென்னாட்டுச் சைவத்தில் முக்கிய இடம் பெற்றன. தென்னாட்டில் ஆகமங்களும் அவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த நூல்களும் சமஸ்கிருத மொழியில் குறிப்பாக கிரந்த வடிவிலேயே எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வரிவடிவ முறையின் தொடக்க காலத்தைக் கொண்டு ஆகமங்கள் தமிழ்நாட்டில் எழுத்து வடிவம் பெற்ற காலத்தை நாம் ஓரளவு ஊகிக்கமுடியும். பல்லவ காலத்தில் எழுதப்பட்ட லிபிக்கு "பல்லவ கிரந்தம்" என்ற பெயர் வழங்கப்பட்டது.

தென்னிந்தியாவில் பல்லவ காலத்தில் இரண்டாம் நரசிம்மனின் காலம் (கி.பி.700-728) ஆனது சமயத்தைப் பொறுத்தமட்டிலும் ஆகம மரபு பேணப்பட்ட வகையிலும் குறிப்பிடத்தக்க காலமாகும். இம்மன்னன் சிறந்த சிவபக்தன். சைவ சித்தாந்த நெறியில் ஈடுபாடுடையவன். காஞ்சிகைலாசநாதர் கோவில் உட்பட பல கோயில்களை எழுப்புவித்தவன். இவன் பெற்ற பட்டங்கள் இவனது சமய உணர்வினை வெளிப்படுத்துகின்றன. ஆகமங்களைப் பிரமாணமாக ஏற்று அம்மரபைப் பேணியமைக் கான அகச்சான்றுகளை அவனது கல்வெட்டுக்களில் காணலாம். "ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்" (ஆகமப்பிரமாண) "ஆகமத்தைப் பின்பற்றுபவன்" (ஆகமானுசாரி) "ஆகமம் கூறும் உயர் ஞானமாகிய சைவசித்தாந்தத்தையே தனது வழியாகக் கொண்டவன்" (சைவசித்தாந்தமார்க்க) ஆகிய பெயர்கள் பொருத்தமாக அமைகின்றன. இச்சான்றுகளிலிருந்து இம்மன்னன் காலத்தில் ஆகமமரபில் அமைந்த பண்பாட்டு நிலை சிறப்பாகக் காணப்பட்டிருக்கலாமென்பதை உணரமுடிகிறது.

நாயன்மார்கள் ஆகமங்களைப்பற்றி தமது பதிகங்களில் பாடியுள்ளமை கவனிக்கத்தக்கது. சம்மந்தர் (ச.தேவாரம் 111 23-6) "தொகுத்தவனருமறை அங்கம் ஆகமம் வகுத்தனன்" எனவும்
(ச.தே 111 39-2) "ஆகமத்தோடு மந்திரங்கள் அமைந்த சங்கதம்" எனவும் அப்பர் சுவாமிகள் (அப்பர் தேவாரம் 15-4) "பனையிலாகமஞ் சொல்லுந்தன் பால்நிற்கே" எனவும் சுந்தரர் (சுந்தரர் தேவாரம் 84-8) "அண்டர் தமக்காகமநூல் பொழியும் ஆதியை" எனவும் (சு.தே 96-6) "அம்மானே ஆகமசீலர்க்கருள் நல்கும் பொம்மானே" எனவும் பாடுகின்றார். சிவனோடு தொடர்புபடுத்திய நிலையில் அவர்கள் ஆகமங்களைக் குறிப்பிடுகின்றபடியால் அவர்களது காலத்தில் ஆகம கருத்துக்களும் மரபும் நன்கு அறிமுகமாகியுள்ளன என்பது தெளிவு.

மேலும் சேக்கிழாரும் ஆலயங்களிற்கும் ஆகமங்களுக்குமிடையே
உள்ளதொடர்பை

பொங்குமாமறை புற்றிடம் கொண்டவர்
எங்குமாயிருந்தவர் பூசனைக்
கங்கள் வேண்டு நிமந்தமாராய்ந்துள்ளான்
துங்கவாகமஞ் சொன்ன முறைமையால்

எனவும்

எய்திய சீராகமத்திலியம்பிய பூசனைக்கேற்ப
கொய்த மலரும் புனலு முதலான கொன்னைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர் சிவகோசரியார்

எனவும் கூறுகிறார். இன்னும் இறைவனுக்கும் ஆகமத்திற்கும் உள்ள தொடர்பை மாணிக்கவாசகரும் "ஆகமமாகி நின்றண்ணிப்பான்தாள் வாழ்க" எனவும் கூறுகிறார். அதேபோல் இறைவனை அடைய சுலபமான வழி எதுவென சத்யஜோதிசிவாச்சாரியார் "எளிமையான உபாயங்களால் ஆன்மாக்களுக்கு முத்தியைக் கொடக்கின்றமையால் சைவசாத்திரங்களான ஆகமங்களே கைக்கொள்ளத்தக்கன" எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றார். இவ்வடிப்படையில் சைவசமயத்தில் "உயிர்க்கூட்டங்கள் முத்தியடைய வேண்டும் என்ற காரணத்திற்காகவே இறைவன் சாத்திரங்களைப் படைத்தான். சாத்திரங்கள் மூலம் சாதனைக்குரிய வழிகளைக் காண்பித்து அவற்றால் முத்தி அருள்வதே இறைவனின் நோக்கம்" என கிரணாகமம் கூறுகிறது. இவ்வாறாக இந்துக்கள் மத்தியில் ஆலயங்கள் "இறைவன் சாந்நித்தியம் பெற்று ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள்பாலிக்கும் இடமாகிய ஆலயம்". ஆலய சேவைபற்றி விரிவாக அறிதற்குரிய ஆதார நூல்கள் சிவாகமங்கள் ஆகும்.

ஆகமங்களும் தந்திரங்களும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. சைவம், வைஷ்ணவம், சாக்தம். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவாகமம், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைஷ்ணவாகமம், சக்தியை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சாக்தாகமம் (தந்திரங்கள்) இவை 64 ஆக வகுக்கப்பட்டுள்ளன. இவை தட்சிணம், வாமம் எனவும், வைஷ்ணவாகமங்கள் பாஞ்ச ராத்திரம், வைகாசை எனவும் கூறப்படுவன. பாஞ்சாராத்திராகமங்கள் 219 அல்லது 223 ஆனால் அவற்றிலே சில ஆகமங்கள் கிடைத்துள்ளன. சைவ ஆகமங்கள் நான்கு வகைப்படும். கபால, காளமுக, பாசுபத, சைவம் என்பனவாகும். சைவம் காஷ்மீரசைவம், சித்தாந்த சைவம் என வகுக்கப்படுகின்றது. காஷ்மீரசைவம் வடஇந்தியாவில் பின்பற்றப்படுகின்றது. சித்தாந்தசைவம் தென்னிந்தியாவில் மட்டும் பின்பற்றப்படுகின்றது. சித்தாந்த அடிப்படையில் 28 ஆகமங்கள் உண்டு. ஒவ்வொரு ஆகமமும் உபாகமங்களைக்கொண்டு விளங்குகிறது. அவை 207 ஆகும். பரமசிவனின் சதாசிவ முகூர்த்தத்திலிருந்து 28 அகமங்களும் உருவாகின. முதல் பத்தும் சிவபேதம் எனவும் ஏனைய 18 ம் உருத்திரபேதம் எனவும் கூறப்படுகின்றன. தந்திராவதார படலம் ஒவ்வொரு ஆகமத்தின் விபரம், உபாகமங்கள் அவற்றைப் பரப்பிய ஆசிரியர்கள் சிஷ்ய மரபு போன்ற விபரங்களைத் தருகின்றன. ஆகமத்தின் பிரதான அம்சம் தெய்வவழிபாடு. சிறப்பாக உருவ வழிபாடு, கோயில் சார்ந்த ஏனைய விடயங்களையும் அவை மட்டுமன்றி சைவசித்தாந்த தத்துவம், தனிமனித, சமூக கடமைகள், மரபுகள் என்பனவற்றைத் தெளிவாகக் கூறுகின்றன.

சிற்சில உட்கருத்துக்களின் அடிப்படையில்தான் ஆலயங்கள் கட்டப்படுகின்றன என்பதை எல்லா ஆகமங்களும் கூறுகின்றன. ஆலயம் என்பதற்கு எல்லாம் ஒடுங்குமிடம் என்று பொருள். எல்லோரும் ஒருங்கேகூடி கடவுளை வழிபடுவதற்கு இடமாகவுள்ளது ஆலயம். பசுவாகிய ஆன்மா தனது மும்மலங்களிலிருந்து நீங்கி இறைவனிடம் ஒடுங்குவதற்கு இடமாகவுள்ளது ஆலயம். இறைவனுக்குரிய இடமாகத் திகழ்வது எனக்கூறும் விளக்கமும் உண்டு. உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு உயிர் விளங்குவது போன்று ஆலயத்தை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டவன் விளங்குகிறார். தோல், குருதி, இறைச்சி, எலும்பு, மஜ்ஜை, மேதஸ், சுக்கிலம் எனப்படும் ஏழுவகை தாதுக்களால் உடம்பு அமைக்கப்பட்டிருப்பது போல் ஆலயமும் செங்கல், வெண்கல், கருங்கல், நீறு, மணல், நீர், காரம் எனப்படும் ஏழுவகைப் பொருட்களால் கட்டப்பட்டுள்ளது. ஆலயத்தை ஒரு மனித வடிவ மாகக் கொண்டால் கர்ப்பக்கிரகம் என்பது சிரசு, அர்த்தமண்டபம் கழுத்து, மஹாமண்டபம் மார்பு, யாகசாலை நாபி, கோபுரம் பாதம் எனவும் மற்றொரு வகையில் ஆலயம் என்பது உடலாகக் கொண் டால் கோபுரம் வாய், நந்தி நாக்கு, கொடிமரம் உள்நாக்கு, தீபங்கள் பஞ்சேந்திரியங்கள், கர்ப்பக் கிரகம் இதயம், சிவலிங்கம் உயிர் எனக்கருதப்படும். இதே கருத்தைத் திருமூலர்

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே"

எனவும், அப்பர் சுவாமிகளும்

"காயமே கோயிலாக கடிமனப் பொய்கையாக" எனப்பாடுகின்றார்.

கர்ப்பக்கிரகத்தை அடுத்துள்ள பிரகாரம் அர்த்தமண்டபம், அதற்கடுத்த பிரகாரம் அந்தர்ஹாரம் எனவும், அதற்கடுத்தது மத்தியஹாரம் எனவும், அதற்கடுத்து மார்யாதா எனவும், அதற்கடுத்து மஹாமர்யாதா எனவும் மஹாமாயாதா முதற்கொண்டு அர்த்தமண்டபம் வரை 5 பிரகாரங்கள் எனக் கணக்கிடுவர். அர்த்த மண்டபத்தை நீக்கி கர்ப்பக்கிரகம் வரை 5 பிரகாரங்கள் எனக் கருதுவதுண்டு. காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம், சூக்குமசரீரம், ஸ்தூலசரீரம் என ஆன்மாவிற்கு ஐந்துவித உடல்கள் உண்டு. காரணசரீரம் ஆனந்தமயகோசம், கஞ்சுக சரீரம், விஞ்ஞானமயகோசம், சூக்கும சரீரம் பிராணமயகோசம், குணசரீரம் மனோமயகோசம், ஸ்தூலசரீரம் கன்னமயகோசம் எனப்படும். ஐந்தாவது பிரகாரத்தை நோக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது பிரகாரம் நுண்மயமானது. அவ்வாறே அண்மைய கோசத்தை நோக்க பிரணமயகோசம் நுண்மயமானது. இவ்வாறே மற்றைய பிரகாரங்களையும் கோசங்களால் ஒப்பிடலாம்.

காரணசரீரமாகிய ஆனந்தமயகோசம் மிக நுண்மையானது. இவ்வாறே கர்ப்பக்கிரக விவரண மும் மிக நுண்மையானது. எனவே சரீர தத்துவமே ஆலயதத்துவம் என்பது நன்கு புலனாகிறது. மூன்று பிரகாரம் மட்டும் உள்ள ஆலயம் தூல, சூக்கும, காரண சரீரங்கள் எனும் மூன்றையும், இரண்டு பிரகாரங்கள் உள்ளவை ஸ்தூலம், சூக்குமம் எனும் உப சரீரங்களையும் ஒரே பிரகாரம் உள்ளதில் ஐந்து சரீரங்களும் அடங்கும்.

ஓர் ஆலயத்தில் ஐந்துவகை லிங்கங்கள் உண்டு என பரமேஸ்வர ஆகமம் கூறுகின்றது. விமானதூலலிங்கம், கர்ப்பக்கிரகம் சூக்குமலிங்கம், பலிபீடம் அதிசூக்குமலிங்கம், துவஜதம்பம் காரணலிங்கம், மூலலிங்கம் மஹாகாரணலிங்கம். இவ்வாறாக சைவாகமங்களில் உயரிய நோக்கம் மனிதனைத் தெய்வீக நிலையாக ஆக்குவதே அடிப்படைக்குறிக்கோளாக கொண்டனவாகும். சைவாக மங்கள் சைவசித்தாந்த உயர் ஞானத்திற்கு ஆதார நூல்களாகத் திகழ்வதைப் பெரும்பாலான அறிஞர்களின் மரபுரீதியாகவும் ஆராய்ச்சிமூலமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சைவசித்தாந்த சாத்திரத்திற்கே அவற்றின் அறிவு இன்றியமையாததாக வேண்டப்படுவதாகும்.

சைவசித்தாந்தம் குறிப்பிட்டுப் பேசும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்கள் திருக்கோயி லுள்ள அமைப்போடு தொடர்புபடுத்தப்படுகிறது. சிவலிங்கம் பதி எனவும், நந்தி பசு எனவும், பலிபீடம் பாசம் எனவும் கொள்ளப்படுகிறது. வேதாகமங்களும் சித்தாந்த நூல்களும் குறிப்பிடும் இம்முப்பொரு ளைக் கோவிலில் இவ்வாறு உயர்த்தி நிற்பதைக் காண்கிறோம். விக்கிரகங்களை ஆழ்ந்த வட்டமாக அமைந்த திருவாசி பிரணவமேயாகும். சிவனை மறைத்து நடுவே இடம்பெறும் திரைச்சேலை மாயை யாகும். திருவருள் எனும் சக்தியே துணைநாடி. அதை அகற்றி அறிவு எனுங்கண்கொண்டு வழிபடுப வர்கள் சிவதரிசனப்பேறு பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெறுவர். இதுபோலவே காரணாகமமும் துவஜஸ்தம்பம் பதி எனவும், கொடிக்கயிறு திருவருட்சக்தி, கொடிச்சீலையில் வரையப்பட்ட ரிஷபம் பசுவையும் தர்ப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்குமென்று கூறுகிறது.

ஆலய தரிசனத்தால் ஆன்மாக்கள் பக்குவமடையும் முறையினையும் சிவாகமங்கள் தெளிவாக விளக்குகின்றன. ஆலயத்திருக்குளத்தில் மூழ்குதல் சக்திநிபாதம் என்பதைக் குறிக்கும். அதாவது திருவருள் வீழ்ச்சியைப் பெற்று மேலும் பக்குவமடைதலைக் குறிக்கும். பிரகாரங்களை வலம் வருதல் தத்தவங்களைக் கடந்து சிவத்தை அடைதல் என்பதை உணர்த்தும். பலிபீடம், நந்தி, கொடிமரம் ஆகிய இவற்றின் தரிசனத்தால் ஆன்மா பாசம் பசு பதி எனப்படும் முப்பொருள் உணர்ச்சிபெற்று பலிபீடத்தருகே வீழ்ந்து வணங்குவதால் வினைநாட்டமும் பாசநீக்கமும் அடையும். ஆலயத்திலுள்ள மண்டபங்களை கடத்தலால் மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களைக் கடந்து அதிகார நந்தியின் இடத்தை அடைவதால் அதிகார முக்தனாகி பின்பு சிவலிங்க தரிசனத்தால் அபரமுக்தன் எனும் நிலையை ஆன்மா அடைகிறது.

**சிவலிங்கம்**

"ஆகமம் கூறும் கிரியை யாவும் திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தவை யாகும். திருவுருவ வழிபாடு இன்றேல் ஆகம வழிபாடு இல்லை" என சைவத்திருக்கோயில் கிரியை நெறியில் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் (பக்கம் 125) குறிப்பிடுகின்றார். எனவே திருவுருவ வழிபாடு பற்றித் தனி அம்சமாக கொண்டவர்க்கும் ஆகமக்கிரியை பற்றி அறிவதற்கு திருவுருவங்கள் பற்றிய அறிவு முக்கியம் என மேலும் குறிப்பிடுகின்றார். திருக்கோயில் வழிபாடு தனிமனிதனுக்கென்று உருவாகவில்லை. மக்கள் அனைவரும் சென்று வழிபடுவதற்காகவே தேவாலயங்கள் உருவாகின. இம்மக்கள் பெருந்தொகையினர், இவர்களுட் பெரும்பாலானோர் அறிவு நிலையில் அடித்தளத்தை யேனும் அணுகாத நிலையினர். எனவே வழிபடும் முறை இவர்கட்கு ஏற்றவாறு எளிதாய் அமைய வேண்டிய நிலையினை ஒட்டியே வழிபடும் சாதனங்களும் அமைந்துவிடுகின்றன. இவ்வாறு எளிதாய் அமைய வழிசெய்வது விக்கிரகங்களாகும். விக்கிரக வழிபாடு சைவத்திற்கன்றி வைஷ்ணவம் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களிற்கும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. பிம்பம், விக்கிரகம், மூர்த்தி, பேரம், பிரதிமை முதலிய பல்வேறு பெயர்களும் திருவுருவத்தைக் குறிக்கச் சிற்ப நூல்க ளில் பலவாறாகக் காணப்படுகின்றன. குணங்குறியற்ற இறைவனை குணங்குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் அகப்படுத்திப் புறத்தோற்றம் கொடுத்து எமது கட்புலனுக்குள் அடங்கச் செய்யும் முயற்சியின் விளைவே நாம் வழிபட நிறுவும் விக்கிரகம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவமற்ற இறைவன் ஆன்மாக்கள் உய்யவேண்டிய கருணை மேலீட்டால் உருக்கொள் கிறான். அவன் பல நிலைகளை மேற்கொண்டு அருள்பாலித்ததினால் உருவங்கள் பலதிறத்தன. இந்திரியங்களாற் கிரகிக்கமுடியாத இறைவனையறிய வகையறியாது தடுமாறும் தரங்குறைந்தவர் களுள் விவேகமும் பக்குவ மும் மிக்கவர்களுக்கு உரியது சிவலிங்கத்திருமேனியாகும். இதைக் கிரகித்து உணர மாட்டாதோருக்கே கை கால் முதலிய உறுப்புக்களை பொருந்திநிற்கும் இதர தோற்றங்கள் ஆகும்.

லிங்கம் என்பதற்குரிய பொருளைக் காரணாகமம், கிரணாகமம், சுப்ரபேதம், வாதுளம், காமிகம் முதலிய ஆகமங்கள் அழகாகவும் தெளிவாகவும் கூறுகின்றன. "எந்த இடத்தில் பிரளயகாலத்தில் சேதன, அசேதன பிரபஞ்சங்கள் அனைத்தும் லயம் அடைந்தும் பின் படைப்புக் காலத்தில் எதிலி ருந்து உற்பத்தியாகின்றனவோ அதுவே லிங்கம் என்பது "லிங்" என்பது லயத்தையும் (ஒடுக்குதலையும்) "கம்" என்பது தோற்றத்தையும் குறிக்கும் என்றும் சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் பிரபஞ்சத்தைச் சித்தரிக்கின்றதால் சிவலிங்கம் எனப் பெயர்பெற்றது" என்று "வருணபத்ததி" எனும் நூல் விளக்கம் தருகின்றது.

சிவபெருமானுக்கு மூன்றுவித திருமேனிகள் உண்டு.

1. அருவத்திருமேனி (இது வடிவமில்லாததால் குறிப்பிட்ட வடிவத்தால் சுட்டிக்காட்ட முடியாது)

2. உருவத்திருமேனி (இது வடிவம் கொண்டு விளங்குவது, சோமாஸ்கந்த வடிவம் முதலியன அடங்கும்).

3.. அருவுருவத்திருமேனி (இதுவே சதாசிவ வடிவம் ஆலயத்திலுள்ள சிவலிங்கம் சிவபெருமானின் திருமேனியையே இதுகுறிக்கும்). ஓர்வடிவம் கொண்டு விளங்கியதால் உருவம் என்றும், இன்ன வடிவம் என்று குறிப்பிட்டுக் கூறமுடியாததால் அருவம் என்றும் லிங்கவடிவத்தை அருவுருவம் என்றும் உருவத்திருமேனி முதலான மூன்றும் நிஷ்களம், சகளம், சகளநிஷ்களம் என ஆகமங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றையே சில ஆகமங்கள் தத்துவம், மூர்த்தி, பிரபாவம் என வேறு விதமாக குறிப்பிடுகின்றன.

அவ்யத்தலிங்கம், வ்யக்தலிங்கம், வ்யக்தாவ்யக்தலிங்கம் என சிவலிங்கம் மூன்று வகைப்படும். இவற்றுள் அவ்யத்தலிங்கம் என்பது நிஷ்களலிங்கம் தத்துவங்களுக்கெலல்லாம் அப்பாற்பட்டு விளங்கும் சிவபெருமானே அவ்யக்தவடிவில் உள்ளார். இரண்டாவது வ்யக்தலிங்கம் மகேஸ்வரரிடமிருந்து தோன்றிய இருபைத்தைந்து வடிவங்களும் ஆகும். வ்யக்தம் என்பது கை, கால், முகம் முதலான அங்கங்களுக்கெல்லாம் வெளிப்பட்டு விளங்குதல் ஆகும். வ்யக்தாவ்யக்தலிங்கம் என்பது அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கமாகும். வ்யக்தாவயத்தமான சிவலிங்கம் சுயம்பு, தைலிகம், திவ்யம், ஆருடம், மானுடம், ராஸசம், பானம் எனப் பலவகைப்படும். சுயம்புலிங்கம் என்பது தானாகத் தோன்றியதாகும். பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதிசேடனின் அளவற்ற சிரசுகள் ஒருமுறை அசைந்ததால் காலாக்னிருத்திரருடைய கோபாக்கினியிலிருந்து மூன்று தீப்பொறி கள் உண்டாயின. அந்தத் தீப்பொறிகளே சிவலிங்கங்களாக மாறின. இவை நிர்மூல, சமூலம், பார்த்திவம் என மூன்று வகைப்படும். நீர்மூல சுயம்புலிங்கம் நீருக்குள் இருப்பது. சமூல சுயம்பு லிங்கம் மலையிலிருப்பது. பார்த்திவ சுயம்புலிங்கம் மண்ணுக்குள் இருப்பதாகுமென இவ்வாறு சுயம்பு லிங்கம் பற்றிக் காமிகாமம் கூறுகிறது. பாரமேசுவராகமம் இன்னொரு வகையில் சுயம்புலிங்கம் பற்றிக் கூறுகிறது.

கூத்தப்பெருமான் தமது ஜடாபாரம் அவிழ்ந்து அலைய பெருங்கூத்து நிகழ்த்திய போது ஜடாமகுடத்திலிருந்து திவ்விய கங்கையின் நீர்த்துளிகள் உலகெங்கினும் சிதறின. அவ்வாறு சிதறிய நீர்த்துளிகள் சிறுலிங்கவடிவம் பெற்றன. இவையே சுயம்புலிங்கமாகும். உமாபதிசிவாச்சாரியார் தமது "குஞ்சிதாஸக்ரிஸ்தவம்" எனும் ஸ்தோத்திரநூலில் இக்கருத்தைக் குறிப்பிடுகின்றார். காரணம், வாதுளம், சூக்குமம், சுப்ரபேதம் எனும் நான்கு ஆகமங்களும் சுயம்புலிங்கத்திற்கு உரியனவாம்.

இதேபோல் சைவத்திருக்கோயில் கிரியை நெறியில் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் லிங்கம் உயரிய தத்துவங்கள் பலவற்றை உணர்த்தி நிற்பது. லிங்கம் என்ற சமஸ்கிருத சொல்லிற்கு "அடையாளம்" என்று பொருள். சிவனைக்குறியாக நிறுவப்பட்டதால் இது இலிங்கமாயிற்று. உபநிடதங்கள் இறைவன் பெருமையை எடுத்தோதுகின்றன. அவன் மக்களின் அறிவிற்கு எட்டாதவன். இந்திரியங்களுக்கு இவனைக் கிரகிக்குமாற்றலில்லை என்கிறது சுவேதாஸ்வதர உபநிடதம். கையால் தொடமுடியாதவனை கண்ணால் பார்க்க இயலாதவனை வாழ்த்திவணங்கும் பொருட்டு நினைக்கும் போதும் அவனை கிரகிக்க முற்படுவோருக்கு இலிங்கம் அவனைக்குறிக்கும் அடையாளமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலிங்கமானது அவனை உணர்த்துதல் கருவியாக விளங்குகிறது. இதுபற்றியே இதற்கு இலிங்கம் எனப் பெயர் ஏற்பட்டது.

வேதங்கள் யாகத்தில் வளரும் தீயைப்போன்றது. தூய்மை வாய்ந்த தெய்வீகத்தீயை நடுநாயக மாகக் கொண்டுதான் வேதகால வழிபாடு நிகழ்ந்தது. கட்புலனுக்கு அகப்படாத தேவர்கட்கு கட்புலனாகும் அக்னியே பிரதிநிதி. இவ்வக்கினி குளிர்ந்து நெருங்கி இறுகித் திரண்ட உருவங்கெண்டது. பொன்னிறமான தீ குளிர்ந்த நிலையில் கருநிறம் பெறுவது அனைவரும் அறிந்ததே, இவ்வாறு அக்கினி இறுகிய நிலையே லிங்கம். பிரமனும் மாலும் அடி முடி தேடும் வண்ணம் இறைவன் ஒளிவீசும் தீப்பிளம்பாய் தோன்றிய நிலையை நினைவூட்டுவதே லிங்கம். தேவரின் வேண்டுதலுக்கு தீப்பிழம்பு வடிவம் நீங்கி இலிங்க வடிவாயினன் என்பன சமய நூல்கள் இலிங்கம் குவிந்த தோற்றம் இவ்வுண்மையைத் தெளிய வைக்கிறது (பக் 117-118) என்று கூறுகிறார். இதற்குச் சான்றாக திருமூலரும்,

" பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன் மால் தங்கள் தம் பேதைமையாலே
பரமன் அணலாய் பரந்து முன்னிற்க
அரனடிதேடி அறற்றுகின்றாரே"

அடுத்து தைவிகலிங்கம் தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. காமிகம், விஜயம், சுவாயம்புவம், அனலம் எனப்படும் நான்கு ஆகமங்கள் இவ்லிங்கத்திற்குரிய திவ்யலிங்கம் என்பது தேவஇருடிகளால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கமாகும். இந்தியம், ஸஉறஸ்ரம், தீப்தம், அஜிதம் எனும் நான்கு ஆகமங்களும் இவ்விலிங்கத்திற்குரியன.

மானிட இருடிகளால் ஸ்தாபிக்கப்பட்ட இலிங்கம் மானுடலிங்கம் ஆகும். வீரம், விமலம், சந்திரஞானம், பிம்பம் எனும் ஆகமங்கள் இவ்விலிங்கதத்திற்குரியன. ராட்சஸர்களால் ஸ்தாபிக்கப் பட்ட லிங்கம் ராஷஸலிங்கத்திற்கு புரோகிதம், லலிதம், லலித்தம், ஸந்தானம் ஆகிய ஆகமங்கள் இதற்குரியனவாகும். பானன் எனும் அசுரனால் பூஜை செய்யப்பட்டு ஸ்ரீசைலம் நீலகண்டம் நேபாளம் முதலிய பல இடங்களிலும் காணப்படும் லிங்கம் பானலிங்கமாகும். இவ்விலிங்கம் பற்றி தனி ஆய்வே மேற்கொள்ளலாம். பரமேஸ்வரன், சர்வோக்தம், அம்சுமான், கிறனம் ஆகிய ஆகமங்கள் இவ்விலிங்கத்திற்குரியனவாம். இவற்றைவிட ரத்தினம், உலோபம், சளிகம் எனும் லிங்க வகைகளும் உண்டு. இவற்றை இடம்விட்டு இடம் மாற்றுவதால் சலலிங்கம் (சலம்-அசைவது) எனக்கூறுவர். சுயம்புலிங்கம் அசலம் எனப்படும் (அசலம்- அசையாதது) பாணலிங்கம், சலலிங்கமே. இவற்றைத்தவிர ஏகாசிலிங்கம் துவியகிரலிங்கம் எனவும் உண்டு. இவற்றைப் பற்றி கிரணாகம் கூறுகிறது (அசிரம் கோணம்).

வழிபாட்டின் பயனாகக் கிடைக்கக்கூடிய பேறுகள் பலவாக இருந்ததால் சிவலிங்க பேதங்களும் மிகப் பலவாகக் காணப்படுகின்றது. இவ்விதமான இலிங்கத்தை வழிபடுவதால் இன்ன பலன் என்பது போன்ற விபரங்களை எல்லாம் ஆகமங்கள் விரிவாக எடுத்துக்கூறுகின்றன. முகலிங்கம் என்று ஒருவகையுண்டு. சிவலிங்கப்பகுதியில் ஒன்று முதல் ஐந்து வரை முகங்கள் அமைக்கப்பட்டிருப்பது முகலிங்கம் எனப்படும். லிங்கத்தின் உச்சிப்பகுதி எந்த வடிவத்தில் உள்ளதோ அந்த வடிவத்தை யொட்டி ஆட்யம், ஆனாட்யம், சுரெட்யம், ஸர்வசமம் எனப்படும். இவற்றுள் சர்வசமம் எனும் லிங்கத் தில் மட்டுமே முகலிங்கம் அமைக்கலாம். ஏனைய மூன்றிலும் அமைக்கலாகாது.

இவ்வாறாக சிவலிங்கம் சைவவழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. இத்தகைய சிவலிங்க வகை களை "அடிமுடி தேடல்" (2ம் தந்) "இலிங்கபுராணம்" (2ம் தந்) "அண்டலிங்கம்" "ஆத்மலிங்கம்" "சதாசிவலிங்கம்" "சிவலிங்கம்" "பிண்டலிங்கம" (7ம் தந்) எனும் பகுதிகளில் மிகத் தெளிவாகத் தருகிறார். சைவசித்தாந்தம் கூறும் நவபேதமும் இவ்விலிங்கத்தினுள்ளேயே அடங்கி யுள்ளது என்பதற்கும். இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகிய சிவாகமங்களில் கூறப்படும் சிவலிங்க த்தில் செய்யப்படும் நவகண்ட ஸ்பர்சாகுதி பற்றிய சிந்தனைக்கும் சான்றாக திருமூலரின் திருமந்திர பாடல் ஓர் உயர் வழிகாட்டியாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலர்ந்த வயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சக்தி சிவன் வடிவாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தியாமே"

மாலின் கொப்புழில் தோன்றிய அயனும் அம்மாலாகிய அரியும் அரனும் ஆண்டானும் பயனுருவும் அருளாகிய ஐம்முகனும் மேலாம் விந்து நாதங்களும், நன்மையுறும் சக்தி சிவன் வடிவங்களும் நிறைந்த குறைவிலா இன்பப்பயனுக்கு வாயிலாகிய பாடிப் பரவிப் பணியும் பணியாம் நற்றவத்தைத் தந்தருளும் நந்தியைப் பெருமானே சிவலிங்கமுமாவான் எனக்கூறுவதன் மூலம் இவ்வாய்விற்கு ஓர் சான்றாக அமைகிறது.

பாரதநாட்டிலும் இலங்கையிலும் சரி சிவனுக்கென கோயில் அமைக்குமிடமெல்லாம் வழிபடுவதற்கு இலிங்கத்தையே முக்கிய விக்கிரகமாகக் கொள்ளப்படுகிறது. இந்தியாவில் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே காஷ்மீர் வரை லிங்க வழிபாடு ஒரேமாதிரியாகப் பரவியுள்ளது. வடக்கே வழிபடும் இடங்களெல்லாம் சைவர்கள் சிவலிங்கத்தை மட்டுமே நிறுவி வழிபடுவர். தென்னாட்டில் சிவனுடைய மூரித்தி பேதங்கள் நிறுவி வழிபடுதல் நிகழ்வதாயினும் இவ்வழிபாட்டில் இலிங்கத்திற்கே முக்கியத்து வமுண்டு. கோயிற் கருவறையில் நிறுவப்படுவது சிவலிங்கமேயாகும்.

இவ்வாறாக சிவலிங்கத்தில் சிவன் சாந்நித்தியமாக உறைகிறான் என்கின்ற நம்பிக்கை பாவனா முறையாக வழிபடுவதே சைவவழிபாட்டின் உயர் நோக்கம். சண்டிசராற் சிவலிங்கமாகப் பாவிக்கப் பட்ட மணற்குவியல் பேரருள் சுரந்தமை பாவனையின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. பாவனையின் ஆற்றலை உமாபதிசிவாச்சாரியார்,

"விட நகுல மேவினும் மெய்ப்பாவிகளின் மீறும்
கடலிருள் போதிவன்கண்"

எனக்குறிப்பிடுகின்றார். திருமூலரும்,

"உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆள் ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்படுமுனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற்றேனே"

இவ்வகையாக இறைவனின் அருள்வேண்டித் திருக்கோயில் கருவறைகளில் அன்பர்களால் வணக்கம் பெறும் சிவலிங்க வடிவத்தில் சதாசிவ வடிவத்தைப் பாவித்து வழிபடவேண்டும். சதாசிவ வடிவம் என்பது ஞானமயமான திருமேனியைக் குறிக்கும். நினைப்பாற்றல் (சங்கல்ப்பம்) ஒன்றினா லேயே இறைவன் காரியங்களை நிகழ்த்துகிறான் என்பது உண்மையேயெனினும் அவ்வாறு நினைப்ப தற்கு பரம்பொருள் ஒரு வடிவம் தாங்கியே ஆகவேண்டும். அவ்வடிவம் நம்முடைய தேகம் போன்று அசுத்தமாயையின் தொடர்பில்லாமல் மந்திரங்களால் ஆனதூயமேனியாக இருக்கும். இந்தத் திருமேனி யையே வித்யாதேகம் என காமிகாகமமும் (3.426) சப்தபிரம்மரூபம் என்று அஜிதாகமமும் (1:13-26) கூறுகின்றன. மிகவும் ஒளி பொருந்திய மந்திரமாயமான சதாசிவம் எனப்படும் சதாசிவப்பெருமானின் வடிவத்தை காமிகாகமம் (3:32-334) கூறுகின்றது. இக்கருத்தினை திருமூலரும் ( திருமந்திரம் 7ம் தந் 1700) கூறுகின்றார். சதாசிவர் ஐந்து திருமுகங்களும் பத்துத் திருக்கரங்களும் உடையவர். ஒவ்வொரு முகத்திலும் மூன்று திருக்கண்கள் ,வலக்கரங்களில் சூலம், வஜ்ரம், கத்தி, பரசு, அபயமுத்திரை என்பவற்றையும் இடக்கரங்களில் நாகம், பாசம், மணி, அக்கினி, அங்குசம் என்பவற்றையும் தாங்கியிருப்பர். பாம்பினைப் பூணூலாக அணிந்திருப்பர். மூன்றாம்பிறைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட ஜடாமகுடம் உடையவர். சாந்தமான தோற்றம் உடையவர். திருமூலரும்,

"அஞ்சுமுகமும் ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொடஞ்சு கரத லந்தானுள
அஞ்சுடன் அஞ்சாயுதமுள ஓம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே"

இவ்வாறாக பரிபூரணமாக அமைந்த சதாசிவப் பெருமானின் திருவுருவம் நம்முடைய சரீரம் போன்றது எனக் கருதல் கூடாது. கண்ணாடியில் பிரதிவிம்பம் போன்றும் ஆகாயத்தில் இந்திரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றும் ஈஸ்வரசரீரம் உள்ளது என அப்பையதீட்சிதர் அவர்கள் "சிவார்ச்சனா சந்திரிகை" எனும் நூலில் கூறுகின்றார். இவ்வாறாக மந்திரமயமான சரீரம் தாங்கி இறைவன் அருளாவிட்டால் தியானம், பூஜ முதலியன நடைபெற வழியில்லை. நாதங்களின் உற்பத்திக்குக் காரணமாக இருக்கும் கழுத்து முதலான தானங்களுக்கும் இடமில்லாமற் போகும். ஊயிர்க் கூட்டங்களுக்கு அருள் புரிவதற்காகவே வடிவில்லாத பரம்பொருள் வடிவுகொள்ள முந்துகிறது என கிரணாகமம் கூறும். இத்துணைச் சிறப்புவாய்ந்த சிவலிங்க பூஜா பலனை காமிகாகமம் சிறப்பாகக் கூறுகின்றது. சிவலிங்க வழிபாடு செய்வதால் ஏற்படும் பலன்களாவது அக்னிபூஜை, வேதங்கள் மிகுந்த தட்'ணையுள்ள யாகங்கள் இவையெல்லாவற்றையும் விட கோடி மடங்கு உயர்ந்ததாகும். ஒருமடங்கு கூட சிவலிங்க பூஜைக்கு சமமாகமாட்டாது. இவ்வாறான சிவலிங்கபூஜையை ஜனமடைந்த ஆன்மா த்ரோகியால் பூஜிக்கப்பட வில்லையோ அப்படிப்பட்டவன் வெகுகாலம் வரை துக்கக் கடலாகிய சம்மாரத்தில் சஞ்சரிக்கிறான். சிவபூஜையால் சிவபிரானை பூஜியாமல் புசிப்பதற்கு துணிவிரனாதல் வேண்டும் என்கிறது.

இவ்வாறான எங்கும்வியாபித்திருக்கும் இறைவனை திருக்கோவிலில் ஸ்தாபிக்கப்படும் சிவலிங்கம் அல்லது மூர்த்திபேதங்களில் சாந்நித்தியம் பெறச்செய்தலே கிரியை பல நிறைந்த கும்பாபி'ேகம் ஆகும்.

## ஆகமம் கூறும் கிரியை மரபுகள்

இந்துக்கிரியை மரபின் சிறப்பினை அறிய உதவுவன வேதசிவாகம இலக்கியங்களே ஆகும். வேதங்களும், ஆகமங்களும், சமயம். தத்துவம், கலை ஆகிய மூன்று அம்சங்களையும் இணைக்கும் சாதனங்களாக விளங்குகின்றன. சைவ வழிபாட்டின் மரபின் வளர்ச்சிக்கு இவற்றின் பங்கு அளப்பரியதாகும். வேதநெறி தழைத்து ஓங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் இவ்விரு முதல் நூல்களும் விளங்குகின்றன. சமயத்தைப் பின்பற்றுகின்ற ஒருவன் சாதனையில் ஈடுபட வழிவகுப்பன கிரியை ஆகும். சிவாகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் அகிய நான்கு பாதங்களைக் கடைப்பிடிக்க உதவுவன ஆலயங்களாகும். இவை நான்கும் ஒன்றினை ஒன்று தழுவி நிற்பன. இவற்றுள் கிரியையை நோக்கின் ஆலயத்தில் பூஜை என்ற பதத்திற்குள் அடங்குகின்றது.

பூஜை என்பதன் அர்த்தத்தில் நமஸ்யை, சுபசிறி, ஸபர்யை, தர்ஜனை, அர்ச்சனை, வரிவஸ்யை, அச்சனை, பரிபர்யை, உபாசனை என்பவைகள் ஒத்த சொற்களாக அமரகோசம் கூறுகின்றது. எல்லாக் கர்மாக்களையும் நிறைவுறும்படி செய்வதாலும் உபாசகனுக்கு ஒத்த ஞானத்தை கொடுப்பதாலும் பூஜை எனப்பெயர் பெற்றது. இதைத்தான் மெய்கண்ட சாத்திரங்கள் "கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்கின்றன. அன்றியும் "புண்ணியமானதும் நன்மையளிப்பதும் பாவத்தை அழிப்பதும், மாபாதங்களை நீக்கவல்லதும் எல்லா வகை வேள்விகளின் பயன்களையும் அளிப்பதே நித்தியார்ச்சனம்" என்று பூர்வ காரணாகமம் கூறுகின்றது. இத்தகைய பெருமையுடைய பூஜை ஆகமமுறைப்படி ஆத்மார்த்தம், பரார்த்தம் என இருவகையாக பகுக்கப்பட்டுள்ளது. தனக்கும் தன்னைச்சார்ந்தவருக்கம் நன்மையளிக்கும்படி வீட்டில் செய்யும் பூஜை ஆத்மார்த்தமாகும். குருவால் அளிக்கப்படா லிங்கத்திலே, ஸ்தண்டிலத்திலோ தனதான்மாவிலோ சோமயம் முதலான 'ஷணிக லிங்கங்களிலோ, மண்டபத்திலோ, ஜலத்திலோ ஆத்மார்த்த பூஜை செய்யலாமென காரணம், காமிகம், கூறுவன. கிராமத்திலோ, நகரங்களிலோ உள்ளவர்களின் நலன் கருதி தேவர், முனிவர், மனிதர் ஆகியோர்களால் பிரதிஷ்டிக்கப்பட்ட லிங்கங்களிலோ அல்லது சுயம்புலிங்கங்களிலோ, ஈஸ்வர அகழ் மூர்த்திகளிலோ ஆலயங்களில் செய்யப்படும் பூஜை பராத்தம் எனப்படும். இது எல்லோருக்கும் நன்மையளிப்பது மட்டுமன்றி செய்பவனுக்கும் நன்மையாயிருக்கும்.

ஆத்மார்த்த பூஜைக்கு எல்லோரும் அதிகாரிகள், பரார்த்த பூஜைக்கு "சிவதிவிஜகர்கள்" தாம் அதிகாரிகள் என்பது ஆகமங்களின் அபிப்பிராயம். மேலும் ஆத்மார்த்த பூஜையில் துவாரபூஜை, சண்டேசருக்கு நிவேதனம், ஆமந்தரணஹவிர்நிவேதனம், நித்யோற்சவம் பெரிய மணியடிப்பது, திரைபோடுவது சுத்த நிருத்தம் என்பன கிடையாது. போதுவாக பரார்த்த ஆலயங்களில் ஒரு ஆவரணம் முதல் ஐந்து ஆவரணம் வரையுண்டு. அஷ்ட, சோடச, த்வாத்ரிம்சத், (32) பரிவாரங்கள், அங்கலிங்கங்கள், கௌர்யாலயம் பக்தாலயங்களோடு அமைந்திருப்பது வழக்கமாகும். இத்தகைய பரார்த்த ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகள் ஆகமங்கள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என வகுத்துள்ளன.

இவற்றைமேலும் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி, உற்சவாந்தம், உற்சவாதி, பிராயச்சித் தாந்தம் என மூவகையாக கூறுவதுடன் இவையனைத்தையும் ஒன்றாக இணைத்து "காஷ்ணாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராயிச்சித்தாந்தம்" எனக்கூறும் மரபினை ஆகமங்களில் காணலாம். ஆகமங்கள் கூறும் முறைப்படி ஆலயம் உருவாவதற்குத் தகுந்த நிலத்தைத் தேர்ந்தெடுத்தல் அதனை எவ்விதம் புனிதப்படுத்தி ஆலயம் ஒன்றை உருவாக்கும் ஆரம்ப நிலைவரையுள்ள பகுதிகள் கர்ஷணம் எனப்படும்.

இதன் பின் முறைப்படி உருவாக்கப்பட்ட ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் எனப்படும் குடமுழுக்கு விழா நிகழ்த்தினால் தான் இறைவனின் சாந்நித்யம் (திருத்தோற்றம்) என்பது நிறைவாக இருக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன. நான்கு விதமான கும்பாபிஷேகம் பற்றி எல்லா அகமங்களும் அதன் வழிவந்த பத்ததிகளும் இயம்புவன,

1. அனாவர்த்தனம் - கோயிலே இல்லாமலிருந்து புதிதாகக் கோயில் கட்டி குடமுழுக்கு நிகழ்த்தினால் அது அனாவர்த்தனம் ஆகும்.
2. ஆவர்த்தனம் - வெகுகாலத்திற்கு முன்னர் கோயில் கட்டப்பட்டு பூஜையில்லாமலும் இடிந்து சீர்குலைந்து இருந்தால் அதனைச் சீர்திருத்தி தூய்மை செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துதல் ஆவர்த்தனம் ஆகும்.
3. புனராவர்த்தனம் - கர்ப்பக்கிரகம் விமானம் பிரகாரம் கோபுரம் பலிபீடம் கொடிமரம் தெய்வபடிமங்கள் ஆகிய இவற்றில் சேதம் ஏற்படின் விமானங்கள் வண்ணம் அழிந்திருந்தாலும் முன்னர் சாத்தப்பட்ட அஷ்ட பந்தனம் சிதைந்திருந்தாலும் பாலாலயம் செய்து எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தனம் ஆகும்.

**அந்தரீதம்**

கர்ப்பக்கிரகம் முதல் மர்யாதா எனப்படும் பிரகாரம் வரை உள்ள இடத்தில் எதிர்பாராதவிதமாக மரணம் ஏற்பட்டாலும் தீட்டு முதலிய தோஷம் உடையோர் கொடிமரம் தாண்டி பிரவேசித்தாலும் நாய், கழுதை, பன்றி, உள்ளே நுழைந்தாலும், தீபங்களில் வீழ்ந்து விட்டில் பூச்சி, ஈ, எறும்பு முதலிய மரணமடைந்தாலும் பிராயசித்தம் செய்து சாந்திசெய்வது அந்தரீதம் எனப்படும். எவ்வாறாயினும் பிரதிஷ்டை என்பது முதல் சொன்ன மூன்றுமே என்பதும் அந்தரீதம் எனும் பிராயச்சித்தம் பல வகைப்பட்டன, என வாமதேவ பத்ததி குறிப்பிடுகின்றது.

அனாவர்த்தன பிரதிஷ்டைக்குரிய அம்சங்கள் என, அவை முகூர்த்த நிரிணயம், சல்யஉத்தாரணம், த்ரவ்யலிபாகம், கர்ப்பநியாசம், கணேச பூஜை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரட்சோக்ணஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்துசாந்தி, நவக்கிரகஹோமம், மிருத்சங்கிரிஹணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், ஜலாதிவாசம், தான்யவாசம், நயனோன்மீலனம், கிராமபிரதட்சிணம், சயரோஹணம், அக்னிகார்யம், நாமகரணம். பிம்பசாந்தி, பிம்பபிரதட்ஷணம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்,சடத்துவநியாசம், சாங்கோபாங்கபிராயங்கநியாசம், யாகமுடிவில் ஸ்பரிசாகுதி, யாத்ராதானம், கும்பஉத்தாபனம், ஸ்தூபிஸ்தாபனம், துவாரம், மண்டபம், பிரகாரம், துவஜம், பலிபீடம் முதலியவற்றின் ஸ்தாபனம், இலிங்கத்திற்கு நவதனுகல்பனம், சகளீகரம், ஆவாஹனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரட்சாவிஜர்சனம், அவபிருதம், ஆசார்யோற்சவம், மண்டலபூஜை, மண்டலபூஜோதிஸவம், மண்டலபூர்த்தி என்பனவாகும். ஆவர்த்தன பிரதிஷ்டைக்கு சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தான்யாதிவாகம், நயனோன்மீலனம், புரபிரதட்ஷணம், சயனாரோஹணம், நாமகரணம், ஆகிய கிரியைகள் கிடையாது. புனராவர்த்தன பிரதிஷ்டைக்கு ஆவர்த்தன பிரதிஷ்டை போன்றே கிரியைகள் உண்டு. இதில் சாங்கோபாங்க பிரத்யங்கம் எனப்படும் மூவகை அனுக்ஞை உண்டு. அனுக்ஞை என்பது கிரியைகளை ஆற்றமுன்பு இறைவனிடம் அனுமதி பெறலாம். ஒன்று சாங்கம், மற்றது உபாங்கம், சிவனிடமும் உமையிடமும் அனுமதி பெறல் சாங்கம் ஆகும். உபாங்கத்தில்

கணேசன் சிவனாரின் வலக்கண்
முருகன் சிவனாரின் இடக்கண்
நந்தி சிவனாரின் மூக்கு
சண்டேஸ்வரர் சிவனாரின் காது
எனவே இம்மூர்த்திகளிடம் அனுமதி பெறல் உபாங்கமாகும், இதில் (ஆவர்த்தனம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனராவர்த்தனம்) பிரதிஷ்டைகளில் ஏற்கனவே தாபனமாகிய மூர்த்தியிருந்தே செய்ய வேண்டும். இதை விடுத்து ஏனைய மூர்த்திகளிடம் செய்யலாகாது என்பது ஆகமவிதியாகும்.

எவ்வெச்சமயங்களில் எவ்வெவ்வாறு பிராயச்சித்த வடிவமாக பிரதஷ்டை நடைபெறவெண்டுமோ அவற்றை உரியவாறு நிகழ்த்துதல் அந்தரீதம் ஆகும். இதற்கு சுபமுகூர்த்தம் கிடையாது. முதற் கூறிய மூன்று பிரதிஷ்டைகளுக்கும் சுபமுகூர்த்தம் பார்க்கப்படல் வேண்டும். அவ்வாறே கலாகர்ஷணம் எனும் கிரியை முதன்மூன்று பிரதஷ்டைகளிலும் நிகழல் வேண்டும். கலாகர்ஷனம் என்பது பூஜிக்கப் பட்ட லிங்கத்திலிருந்து இறைசக்தியை கும்பத்தில் ஆவாகித்தலாகும். உலக நன்மைக்காக செய்யப் படும் கும்பாபிஷேகத்தின் பொருட்டு பிம்பத்திலிருந்து கும்பத்திற்கு எழுக்தருளுமாறு குருவானவர் இறைவனை வேண்டி செய்வதே கலாகர்ஷணம் ஆகும். மீண்டும் கருவறையில் பிரதிஷ்டை காலங்க ளில் பிம்பஸ்தாபனம் செய்து இறைவனிடம் அங்க சக்திகளான சகளஷடத்துவ நியாசம் செய்து இறை சாந்நித்தியம் லிங்கத்தில் அல்லது பிம்பங்களில் சூர்யசந்திரர் இவ்வுலகில் நிலவும் வரை எழுந்தருளவேண்டும் என பிரார்த்தித்து செய்யப்படுவதே ஸ்பர்சாகுதி எனும் கிரியை ஆகும். இது திரிகண்ட ஸ்பர்சாகுதி (ஆன்மா, வித்யா, சிவ) எனவும் நவகண்ட ஸ்பாசாகுதி என இரண்டு விதமா கக் கூறப்படுகிறது. இவ்வாறு பிரதிஷ்டை நிகழ்ந்தபின் ஆலயங்களில் நித்தியபூஜை நிகழும். இதுவும் நித்யம், நைமித்திகம், காமிகம், என விரிவடைந்து நிற்பதைக் காணலாம். இவ்வாறாக இந்துப் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் ஆலயங்களும் அவற்றோடு தொடர்புடைய திருவுருவவழிபாடு, கிரியை வழிபாடு என்பவற்றை ஓர் ஒழுங்கான முறையில் சிவாகமங்கள் கூறி நிற்கின்றன.

### அடிக்குறிப்புக்கள்

01. இரா. ஜெயராமன், பாட்டும் பண்பாடும், 1978, பக்கம் 2
02. கலாநிதி. எஸ். பி. சபாரத்தினம், சைவாகமங்கள் ஓர் அறிமுகம் 1972, பக்கம் 31
03. திருநாவுக்கரசர் தேவாரம், தனித்திருத்தாண்டகம், 6 - 933
04. கா. கைலாசநாதக்குருக்கள், சைவத்திருக்கோயில் கிரியை நெறி 1992, 2ம் பதிப்பு, பக் 69
05. அப்பர் தேவாரம், அடைவுத்திருத்தாண்டகம் - 5
06. பேராசியர். கா. கைலாசநாதக்குருக்கள், சைவத்திருக்கோயில், கிரியை நெறி, 1972,2ம்பதிப்பு, பக் 68
07. தந்திர சமுச்சயம்., 1: 28
08. S.S Janaki, Siva Temple and Temple Retuals, 1988, p. 4
9. திருமந்திரம், 7: 1089
10. நாவலர், சைவசமயநெறி, 127
11. திருமந்திரம், 2: 501
12. Winternitz, A History of Indian Literature, 1963, p. 515
13. Ibid, p. 516
14. Karmakar - The Religious of India, p. 2787
15. பேராசிரியர். வி. சிவசாமி, தமிழ்மொழி சாசனமும் தமிழ் சாசனமும் சிந்தனைத்தொகுப்பு, இதழ் 1 தை 1978
16. கலாநிதி. ப. கோபாலகிருஷண ஐயர், இந்துப்பண்பாட்டு மரபுகள் 1992, பக் 27 - 29
17. கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர், சிவாகமங்களும் சிற்பநூல்களும் சித்திரிக்கும் சிவவிக்கிரகவியல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வேடு (பிரசுரிக்கப்படாதது) 1981, பக் 56
18. திருமந்திரம். 7 - 1992
19. மேற்படி. 2 - 358
20. மேற்படி, 7 - 1745
21. மேற்படி, 2 - 337
22. காமிகாகமம், 3 - 327 - 334
23. திருமந்திரம், 7 - 1706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Fig. 10. Śiva - liṅga and Tattvas

1. Square Brahma - portion
   (24 Ātma-tattvas)
2. Octoganal Viṣṇu-portion
   (7 Vidyā-tattvas)
3. Circular Rudra-portion
   (5 Śiva-tattvas)
4. Sadāśiva in ethereal space-
   Formless and beyond tattva

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Fig. 2 TEMPLE LAYOUT ILLUSTRATING HUMAN FORM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Fig. 1 DESIGN OF VIMANAM ILLUSTRATING FORM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் இரண்டு

## வைதிக மரபும் ஆகம மரபும்

இந்துசமய இலக்கிய வரிசையில் பொது நூலாகிய வேதங்களும் சிறப்பு நூலாகிய ஆகமங்களும் முதல்வனாகிய இறைவனால் அருளப்பட்டவை என்ற நம்பிக்கை இந்துக்களுடையே காலங்காலமாக நிலவிவரும் மரபாகும். இதனால் இவற்றை "முதல்வன் நூல்", நாதனுரை எனவும் அழைக்கப்படுகின்றன. இது பற்றி திருமூலரும்,

" முதலாகும் வேத முழுதாகமப்
பதியான ஈசன் பகர்ந்த திரண்டும்
முத்தான வேதமுறை மறையாலமர்ந்து
அதிகாதி வேதாந்த சித்தாந்தமே"

எனவும்,

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதுஞ்சிறப்பு பொதுவு மென்றுள்ளன
நாதன் உரையினை நாடில் இரண்டந்தம்
பேதம் என்ப பெரியோர்க் கபேதமே"

எனவும் சிறப்பாகக் கூறுகின்றார். இவை இரண்டும் சைவ பாரம்பரியத்திற்கு முதல் நூல்களாக விளங்குவதோடு கிரியை மரபுகளுக்கும் அடிப்படையாகவுள்ளன. வேதங்களிற்கும் ஆகமங்களுக்கு மிடையில் எவ்வித வேறுபாடுமின்றி அபேதநிலையில் போற்றி வந்துள்ளதாக திருமூலர் குறிப்பிடுகின்றார். இதேகருத்தை அருள்நந்திசிவாச்சாரியார் தமது நூலில் குறிப்பிடுவதைக் காணலாம். சைவத்திறன் உணர்ந்த ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் வேதாந்த சூத்திரத்திற்குரிய தமது பர்ஷ்யத்தில் "வேதசிவாகமங்களுக்கு பேதம் காண்கிலம் வேதமும் சிவாகமமும் ஒன்றே"

வயந்து வேத சிவாகம யோர் பேத நபஸ்யாமஹ
வேதோ(அ)பி சிவாகமஹ எனக்கூறுகின்றார்.

இக்கருத்தின் அடிப்படையிலேயே சைவசமயம் வைதீக சமயம் என அழைப்பது சிந்திக்கற்பாலது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடும் கருத்தும் இங்கு பொருத்த ஷமானதாகும். "நமது சமயம் வைதீகசமயம், வைதீகசம்பந்தம் சைவம், சிவ சம்பந்தம் வைதீக அறிவுநெறி வேதநெறி எனப்படும். அறிவு நெறியரிய வைதீகம் சைவத்திற்குச் சென்று முற்ற வேண்டும். அங்ஙனம் சென்று முற்றாத வழி அவைதீகமாம். சைவம் வேதநெறியாகிய வைதீகத்தின் வழிவருவது. அங்ஙனம் வராதெனின் அசைவமாம். வைதிகம் உடல் உடம்பாலாய பயனைப்பெறாது உயிர் பிரிந்த வழி அவ்வுயிர் என்னாம்" இக்கூற்றின் மூலம் வைதிக நெறியின் மூலமாகிய வேதங்க ளினதும் சைவநெறியின் மூலமாகிய சிவாகமங்களினதும் முக்கியத்துவம் உணரற்பாலது.

இன்று ஆலயங்களில் நடைமுறையிலுள்ள கிரியைகளைப் பகுத்துப்பார்த்தால் வேதமரபு, சைவமரபு, சார்ந்த கிரியைகள் இடம்பெறுவதைக்காணலாம். ஆகமங்கள் சிறப்பித்துக்கூறும் திருவுருவ வழிபாட்டை மேற்கொள்வதற்கு உருவாக்கப்படுகின்ற ஆலயத்தைப் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்படு வதாக இருந்தாலும் சரி அத்தகைய ஆலயங்களில் திருவுருவங்களை பிரதஷ்டை செய்வதாகயிருந் தாலும் சரி அதற்கு முன்னோடியாக அமைந்த கிரியை வைதீகம் சார்ந்ததாகும். வேதங்கள் கூறும் கிரியை அமைப்பில் யாகசாலை அமைத்து யாக குண்டங்கள் நிர்மாணித்து அக்குண்டங்களில் அக்கினியை எரியோம்பி அதன்வழியாக நீரைச்சின்னமாகவுடைய இறைவனிடத்தே (கும்பத்தில்) ஒடுக்கிப் பூமியின் அம்சமாகிய லோகம், மரம், கல் ஆகியவற்றின் ஒன்றில் அமைந்த விக்கிரகங் களில் இணைக்கும் வரை வைதீக கிரியை யாகசாலையில் இடம்பெறுகின்றன. எனவே சிவாகமங்களுக்கும் வேதங்களுக்குமிடையெயுள்ள நெருங்கிய தொடர்பு இதன்வழி உணரற்பாலது.

வேதம் கூறும் சமயம் இயற்கையைத் தெய்வமயப்படுத்தி வழிபடுவதாகும். அக்னிவழிபாடே அதிமுக்கியத்துவம் பெற்றது. அக்னிக்குக் கொடுத்த ஆகுதிகளை விட மற்றத் தெய்வங்கள் யாவற்றிற்கும் அக்னிமூலமே ஆகுதிகளை வேதகாலத்தில் வழங்கினர். அக்னியே கண்கண்ட தெய்வம். அவரை அளப்பரிய பெருமைப்படுத்தியும் ஒவ்வொருவர் வீட்டில் வளர்த்துப் போற்றப்படுவது பற்றியும் வேதப்பாடல்கள் ஆங்காங்கே கூறுகின்றன். அக்னியில் சமர்ப்பிக்கப்படும் ஆகுதிகள் கொடுத்தபின் சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் சாம்பராகி மறைந்து விடுகின்றன. அக்னிக்கு எல்லாப்பக்கங்களிலும் முகம் அதனால் எங்கு நடப்பதையும் அறியும் ஆற்றல் உண்டு. தேவர்கள் யாவர்க்கும் அக்னிமூலமே ஆகுதிகொடுக்கும் வழக்கம் நெடுங்காலம் நிலவி வந்தது. இது வேதகால சமய வழக்கு.

ஆகமங்கள் திருக்கோயில் வழிபாட்டை வகுத்துத்தந்த பெரு நூல்கள். இங்கு வேதகாலத் தைப் போன்று அக்னிக்கு முக்கியத்துவம் கொடக்கப்படவில்லை. ஆகமங்கள் வேதங்களில் மறைந்து கிடக்கும் தெய்வங்களை எவ்வளவிற்கு அண்மையில் கொணர்ந்து கண்ணுக்குத் தெரியாத தெய்வங் களை உருவங்களாக ஓரளவு தெரியவைத்தன. இதனையே மாணிக்கவாசகரும் "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க" எனப் பாடுகின்றார். கோயில்களில் வழிபாட்டிற்காக நிறுவப்பட்ட தெய்வங் களின் வடிவங்கள் கண்ணுக்குத் தெரிவன. இத்திருவுருவங்கள் தனித்தனியே நேரே கொடுக்கும் எங்களுடைய தேவைகளை நேரடியாகச் சொல்லிப் பெறவும் வாய்ப்பு உண்டாக்குகின்றன.

"பரோட்சப்ரியா இவஹிதேவா" என்ற வேத வாக்கியத்திற்கேற்ப கண்ணுக்கே என அறிவுக்கண் ணுக்கு புலனாகாத தெய்வங்களான சிவன், உமை, கணபதி, சுப்ரமணியர் முதலிய தெய்வங்களை கேபயில்களில் நிறுவி ஆகமங்கள் காட்டும் வழிபாட்டு முறைக்கமைய மக்கள் வழிபாடு நிகழ்த்தி வருகின்றனர். இந்திரன், அக்னி, யமன், வருணன், வாயு, சோமன் முதலிய தெய்வங்களின் நிலை கோயில் வழிபாட்டில் வேறுபடக் காண்கிறோம். வேதகாலத்தில் ஆகுதிகளை கொடுத்த(ஹவிஸ்) அவி தெய்வங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் நிவேதனமாயிற்று. அவ்வத் தெய்வத்திற்குகந்ததாக நூல்கள் கூறும் பொருட்களே நிவேதனமாகப் படைக்கப்படுகின்றன. "ஸ்வாஹா" என்பது வேதமந்திரங்களின் இறுதியில் வரும் ஒலி மறைந்து நம என்ற ஒலியே ஓங்கியிடம்பெறலாயிற்று. அவை ஆகுதிகள். இவை அர்ச்சனைகள். வைதீகக் கிரியை ஆகிய யாகங்களிலேயே வெளிவராது உருக்கரைந்து அக்னியில் மறைந்து நின்று நேரே பெற்றும் அக்னிமூலமும் அவ்வப்போது பெற்றும் திருப்தியடைந்து தெய்வங்கள் இங்கு கோயில்களிலே ஆகுதிக்கு இணையாக சமர்ப்பிக்கப்படும் நைவேத்திய பொருட்களை ஏற்று நிறைவுறுத்துகின்றன.

மறைந்த நிலையிலுள்ள தெய்வங்களின் வழிபாடு வேதவழிபாடு, மறைக்து கண்ணுக்கு அறவே தெரியாத தெய்வங்களிற்கு வடிவுதந்து உருவங்களை நிறுவி மறைந்த தெய்வங்களை ஓரளவுக்கு அண்மையில் நிறுத்தி நடத்தப்படும் வழிபாடு ஆகமமரபில் வந்த கோவில் வழிபாடாகும்.

நினைத்த மாத்திரத்திலே தேவையெழும் வேளைகளில் ஒரு வேதிகையையோ, ஸ்தண்டிலத் தையோ, யாகசாலையையொ நிறுவி தேவைக்காலத்தில் மட்டும் அக்னியை நிறுவி வழிபடுவது தொன்மை மிகுந்த வைதீக வழியாகும். இவ்வாறின்றி நிரந்தரமான கோயில் கட்டி கருவறையையும் மற்றைய உறைவிடங்களையும் உரிய இடத்தில் அமைத்து அவற்றில் அக்னியை நிறுவுவதை விட்டு அவ்வவ் மூர்த்திகளின் உருவங்களை நிறுவி வழிபட்டும், வழிபாடு முடிந்ததும் அவற்றை அழித்து ஒழித்துவிடாது அது என்றென்றும் சாந்நித்தியம் மிகுந்தவைகளாக விளங்கச்செய்து அங்கு எப்போதும் வழிபடுவது ஆகமம் காட்டும் மரபாகும்.

இந்நிலையில் கோயில் வழிபாட்டு முறையில் அக்னிக்கு இடமே இல்லை என்பது தெளி வாகத் தெரியுமிடத்தும் ஆகமங்கள் அக்னியையும் வளர்த்து வழிபடுவதற்கும் இடமளிக்கிறது. நாளடைவில் அக்னிவழிபாடு கோவில் வழிபாட்டோடு இணைந்து இன்றியமையாத அம்சமாயிற்று எனலாம். ஆகமங்கள் காட்டும் வழிபாடடு நெறியில் ஓர் உறுதியான, ஸ்திரமான அமைப்பு இடம் பெறக்காண்கிறோம். அவ்வப்போது யாகசாலை அமைத்து அங்கு அக்னியை அரண் எனும் கடைக் கோலினால் கடைந்தெடுத்து குண்டங்களில் நிறுவிக் குறிப்பிட்ட தினங்கள் மட்டும் ஆகுதி கொடுக்கப் படும். இக்காலங்களில் அக்னி அணைந்துவிடாமல் பாதுகாப்பதையும், அவ்வாறு நிகழின் அதற்குரிய பிராயச்சித்த விடயங்களும் காமிகம், காரணம், அஜிதம், சுப்ரபேதம் முதலிய ஆகமங்களிலும் வேத காலத்தைப் போன்று காணப்படுகின்றது. ஆகுதி கொடுத்து வழிபாடு முடிந்ததும் அக்னி வளர்க் கப்படும் யாகசாலையானது குண்டங்கள் இல்லாது அழிக்கப்படும் நிலைமாறி கோயில்களை அமைத்து அங்கே தெய்வங்களைப் பிரதிஷ்டித்து சூரிய சந்திர நட்சத்திரர்கள் இவ்வுலகில் நிலவும் வரை கோயில்களில் எழுந்தருளியிருந்து அனுக்கிரகிக்க வேண்டுமென வேண்டித் தெய்வங்களை நித்திய நைமித்திய கிரியைகளால் வழிபடுவதையே ஆகமங்கள் போதிக்கின்றன.

கோயில்களில் நித்தியம் நடைபெறும் வழிபாடு தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற நைமித்தியங்களாகவும் காமிகங்களாகவும் விரிவுறுகின்றன. இங்கு நித்திய கிரியைகளை விதித்துக் கூறி கோயில்கள் எனும் உயிர்மிக்க நிறுவனமாக எப்பொழுதும் விளங்கும் மரபை வகுத்துள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்கள். வைதிக மரபோ நித்தியத்தின்பாற்படும் கிரியைகளை வீடுகளிலே தட்சிணாக்கினி, கார்ஹபத்யாக்னி, ஆஹவநீயாக்னி என்று மூவகைப்படுத்தி வளர்த்தும் அதிலிருந்து எடுக்கும் அக்னியையே சமிதாதானம், ஔபாசனம் எனும் நித்திய கிரியைகளுக்கு பயன்படுத்தியும் நித்திய கிரியைகளை ஒழுங்குபடுத்தியது. யாகாதி நைமித்திக்கிரியைகளும் யஜமானன் என்ற வேட்பவன் ஒருவனின் நலம் கருதியே இயற்றப்படுகின்றன.

வேதம், ஆகமம் ஆகிய இரு மரபுகளிலும் நித்திய நைமித்திக் கிரியைகள் நிலவினும் இரண்டும் வெவ்வேறு அமைப்புக்களைக் கொண்டன. வெவ்வெறு முறைகளைக் கடைப்பிடிப்பன. கோயில் வழிபாட்டு மரபில் அமைப்பு விரிந்து சிறப்பாக அமையுமிடத்தும் இதில் அக்னி வழிபாட்டிற்கு இடமே இராது ஒதுங்கியருத்தலாகினும் அவ்வாறு நிகழவில்லை. அக்னிக்கு உள்ள இடம் விரிவாக கும்பாபிசேகம், உற்சவம், நித்யாக்னி என இடந்தரப்பட்டள்ளது. மேலும்

யாகாதிகளில் நிகழும் வேதமரபில் தெய்வங்களை அக்னியழைத்து வருவதாலும் சிலவேளை களில் ஆகுதிகளை ஏற்று அவர்களிடம் சென்று சமர்ப்பிப்பதாலும் அக்னியில் ஆவாஹனம் எனும் நிகழ்ச்சிக்கென கிரியை முடிந்ததும் வந்த இடத்திற்குத் திரும்பிப்போகச் செய்யும் விஜர்ஜனம் என்ற நிகழ்ச்சிக்கு இடமில்லை. ஆயின் ஆகமமரபில் தெய்வங்களை ஆவாஹித்து பிரதிஷ்டிக்கப்பட்ட விக்கிரகங்களில் என்றென்றும் சாந்நித்தியமாக இருப்பதால் அறவே வேறு காரணங்கள் பற்றி இங்கும் ஆவாஹனம், விஜர்ஜனம் என்பன கிடையாது. ஆனால் ஆகமக்கிரியைகளில் நிகழும் அக்னி வழி பாட்டில் ஆவாஹித்தல் அதை ஆகுதித்தல் வழிபாடு நிறைவேறிய பின் போகவிடுதல் (ஒடுக்குதல்) இடம்பெறுவன.

ஆலயங்களில் இடம்பெறும் பிரதி'டையெனும் கிரியையின் போது அக்னியே பிரதான இடம் வகிக்கப்படுகின்றது. ஏலவே குறிப்பிடப்பட்டது போன்று இயற்கை வடிவிலான லோகம், கல், மரம் முதலிய விக்கிரகங்களுக்கு சாந்நித்தியம் ஏற்படுவதற்காக செய்யப்படும் பிரதிஷ்டையில் அக்னிக்கு முக்கிய இடமுண்டு. ஆலயத்தில் வழிபடவுள்ள இறை மூர்த்தத்தை அக்னியில் ஆவாஹித்து இறைவனின் அஷ்டமூர்த்தங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய மூர்த்திகளை எட்டுக்குண்டங்களில் ஆவாஹித்து அவ்வவ்மூர்த்திகளை கர்ப்பக் கிரஹத்தில் அமைந்த திருவுருவத்தில் சேர்க்கப்படும் கிரியையாகிய ஸ்பர்சாகுதி எனும் கிரியையிலே தான் வைதிகமரபு, ஆகமமரபு இணைவதை நாம் காணலாம்.

வேதம் கூறும் சமயம் இயற்கையை தெய்வமாக வழிபடுவதாகும். யாகத்தில் உரிய தெய்வங்களை கூவியழைத்து அத்தெய்வங்களுக்குரிய அவிப்பொருட்களை அக்னிமூலம் கொடுத்து வழிபடுவது சிறப்பம்சமாகும். அதேபோல் ஓர் ஆலயத்தில் பிரதிஷ்டையின்போது நிகழும் கிரியைகளில் அங்கு எழுந்திருக்கச்செய்யும் வழிபாட்டில் யாகசாலையில் உள்ள அக்னிகுண்டங்களில் படிமுறையாக மேற்கொள்ளப்படுவது அம்மரபின் தொடர்ச்சியெனின் மிகையில்லை. வேதகாலத்தில் சிறப்பாக வழிபடப்பட்ட நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன் போன்ற தெய்வங்கள் ஆகமங்களில் குறிக்கப்படும் பிரதிஷ்டையின் போது குறிப்பாக இடம்பெறுவது நோக்கற்பாலது. வேதகாலங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் தெய்வங்கள் வகுக்கப்பட்டன. விண்ணைச்சார்ந்தவை, வெளியைச்சார்ந்தவை, மண்ணைச்சார்ந்தவை என வகுத்துவழிபட்டமை குறிப்பிடத்தக்கது. பஞ்சபூதங்கள் யாவும் தெய்வங்களாக வகுக்கப்பட்டன. விண்ணின் அதிதெய்வமான தியௌ சூரியன் போன்றவை. முண்ணுடன் தொடர்புடையவை அக்னி, சோமன், பிருதுவி போன்றவை. இடைப்பட்ட தெய்வங்களாக வாயு பர்ஜன்யன், நீர் தெய்வமாகிய அப்பு ஆகியனவும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், வருணன், பிருஹஸ்பதி போன்ற தெய்வங்களிலும் இத்தகைய பண்புகள் ஏற்றுக்கூறப்பட்டன. இவையாவற்றிற்கும் மேலாக பரம்பொருளை ஒளிவடிவில் போற்றப்படும் சிறப்பு வேதத்தில் காணப்படுகின்றது. அனைத்து வழியைக்காட்டவும் பேரொளி நிலைபெறு கெண்டுள்ள சிறப்பை இருக்குவேதம் கூறுகின்றது(9:5) சாமவேதம் ஒளியே தெய்வம் தெய்வமே ஒளி எனப்போற்றும். இவ்வைதீக பண்பு ஆகமம் வகுத்துக்கூறும் நைமித்யக்கிரியைகளில் உரிய இடம் பெறும் பிரதிஷ்டா கிரியைகளில் நாம் இச்சிறப்பம்சங்களை உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிசேகக் கிரியையின் போது குடத்தில் நிரப்பப்படும் புனிதநீரால் இறைவன் திருவுருவத்திற்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதலே சிறப்பம்சமாகும். இக்கும்பாபிஷேகக்கிரியை இறைவனை அகன்றபரப்பிலிருந்து வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலைநிற்கச்செய்யும் செயலைக்காட்டுகின்றது. பரம்பொருளை நாம் படிப்படியாக உணர முடிகிறது. இறைவன் சிறு அளவில் புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் புலன்களால் செவ்விதாகக் கிரகிக்கப்படமுடியாது. ஆகாயத்தைவிட வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் கட்புலனாகாத ஒன்றாகும். இதற்கடுத்து அக்னி கட்புலனுக்குட் பட்டது. எமது வழிபாட்டு முறையில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்றவல்லது. அக்னியைப் பேணிப்பாதுகாப்பதும் தொடர்ந்து வழிபடவதும் எளிமையான காரியமல்ல. இந்நிலையிலிருந்து சற்று எளிமையாக விளங்குவது நீர் என்னும் கிரகிக்கத்தக்கவாறு நீரை ஒரேநிலையில் நிலைபெறநிறுத்தி அங்கு இறைவனைக்கண்டு தொடர்ச்சியாக வழிபடுவது எளிதன்று.

இதுவரை கூறியவற்றிலிருந்து வேறுபடுவது மண். இதனிடமிருந்து இறைவனின் தெய்விக அம்சங்களை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாக கண்டு அவனைக் கிரகித்தல் ஓரளவு எளிதில் கைகூடும். இவ்வாறு அருவநிலையிலிருந்து இழிந்து ஆகாயம், தீ, நீர், மண் ஆகிய ஐந்திலிருந்து பரந்து விரிந்து நிற்கும் தன்மையை தைத்திரிய உபநிடதம்

"ப்ரம்மன ஆகாச சம்பூத:
ஆகாசாத் வாயு: வாயோரக்னி
அக்னேராப: அத்ப்யப்ருதவி"

எனக் கூறும் மரபினை ஆகமங்கூறும் கிரியைமரபில் நாம் காணலாம். இறைவனை வழிபட நிறுவப் படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண், ஆகிய ஐந்தினையும் இவற்றிற்குப் புறம்பாய் சூரியன், சந்திரன், யஜமானன் என அவாவி நிகழும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியைகளில் உயர்நிலைவகிக்கும் "ஸ்பர்சாகுதி" உணர்த்தி நிற்கின்றது. இறைவனிடம் அஷ்டமூர்த்தி பற்றி நாவுக்கரசரும் நின்ற தனித்திருத்தாண்டக திருப்பதிகத்தில்

"இருநிலனாய் தீயாகி நீருமாகி
மயமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறுமாகி
ஆகாசமா யட்ட மூர்த்தியாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமேலாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர் புண் சடையழகன் நின்றவாறே"

கும்பாபிஷேக கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாயவெளியில் அமைவது குறிப்பி டத்தக்கது.இங்கு அமைக்கப்படும் குண்டங்களில் அக்னியையும் வாயுவையும் ஒன்றிணைந்து விளங்கு கின்றன. யாகசாலை என்பது திருவருளையடைவதற்குரிய சாதனமாகும். அதாவது ஆன்மீக நிலைக்கு இட்டுச் செல்லலாகும். -யா- என்பது யாகத்தையும் -க- என்பது செல்லுதலையும் -சா- என்பது சாந்தி என்னும் எல்லையற்ற ஆனந்தத்தையும் -லா- என்பது லயம் எனும் ஒடுக்கத்தையும் குறிப்பனவாகும்.

யாகசாலையின் அமைப்பு அதை நிறுவவேண்டிய சூழ்நிலையை பொறுத்து மாறுபடும். சிவலிங்கம் அல்லது வேறு மூர்த்திகளின் பிரதிஷ்டை செய்தல், பெருந்திருவிழாக்கள்,பலித்தோற்சவம் (தூய்மைப்படுத்தும் கிரியை) விமானங்கள், கோபுரங்கள் இவற்றின் குடமுழுக்கு, தீட்சை பெறுதல் சூலம், தேர், வாஹனங்கள் இவற்றை நிறுவுதல், அஷ்டபந்தனம் மற்றும் முன்னோடி சடங்குகள், மற்றும் பிராயச்சித்தகாரியங்கள் இவற்றில் யாகசாலை உருக்கொடுக்கப்பட்டுக் கட்டப்படுகின்றது. கர்ப்பக்கிரஹத்தை மறைக்காமல் முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது பிரகாரத்தில் எட்டுத்திக்குகளில் எதையும் நோக்கி யாகசாலை அமைக்கப்படலாம்.

யாகமண்டபத்தின் நான்கு வாயில்களையும் குறிப்பிட்டுத் தோரணங்களால் அலங்கரிக்கும் முறையும் அங்கு பூஜிக்கப்படும் தேவதைகள், வேதங்கள், யுகங்கள், கிரகங்கள், புண்யநதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியனவும் விவரிக்கப்பட்டுள்ளன. திக்கஜங்களை குறிக்கும் வெவ்வேறு நிறங்கொண்ட எட்டுக்கொடிகள் எட்டுத்திக்குகளிலும் நிறுவப்பட்வேண்டும். பரிவார தேவதைகளில் எட்டுத்திக்குப் பாலகர்களும், எட்டு சே'த்திரபாலகர்களும் அடங்குவர். அப்ஸரஸ் பெண்கள் கொண்டுவரப்படுவதாக கருதப்படும் எட்டுவகை மங்களப்பொருட்களையும் வைக்கும் இடமும் 27 முக்கியமான குடங்களை வைக்கும் முறையும் குறிப்பிடப்பட்டுள்ளன. வேதகாலத்தில் உயர்நிலை பெற்ற இந்திரன், அக்னி, யமன், வருணன், வாயு முதலானோர் இவ்யாகசாலையில் பரிவார தெய்வங்களாக மாறுவதையும் காணமுடிகிறது. இவ் யாகசாலையில் நான்கு வாசல்களிலும் கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு எனும் திக்குகளில் முறையே ரிக், யஜுர், சாமம், அதர்வம் எனும் நான்கு வேதங்களிற்கும் தனித்தனியான கும்பங்கள் அமைக்கப்பட்டிருப்பதனையும் காணலாம்.(யாகசாலை விபரப்படம் இணைக்கப்பட்டுள்ளது)

சைவசித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவத்தையும் வேதாந்தத்தையும் குறிப்பாக யாகசாலை அமைந்துள்ளது. யாக மண்டபம் பஞ்சபூதங்களின் அமைப்பு என்னும் "மண்டபம்" எனும் சொல்லி லுள்ள எழுத்துக்களே அவற்றைக்குறிப்பன என ஸ்ரீ பஞ்சாட்ச'ர யோகிசைவ பூஷணத்தில் கூறுகிறார். "மண்டபம்" எனும் சொல்லில் உள்ள "ம" என்பது "பூமி" "ண்" என்பது "நீர்" "ட" என்பது "நெருப்பு" "ப" என்பது "காற்று" எனவும் "ம" என்பது "ஆகாசம்" எனவும் ஐம்பூதவடிவமே யாகசாலை என்கிறார். இவ்வைந்து பூதங்களாகிய தத்துவங்களைக்கொண்டே மற்றும் உள்ள முத்தியொன்று (31) (31+ 5 =36) தத்துவங்களின் குறிப்பாக யாகமண்டபத்தைக் கொள்ளமுடியும். மேலும் யாகசாலை சிவனைய டைவதற்கான மந்திரம், பதம், புவனம், வர்ணம், தத்வம், கலை ஆகிய ஆறு அத்வாக்களையும் ஐந்துவித கலைகளையும் குறிக்கின்றது. "யாகமண்டபமானது எல்லா தேவதைகளையும் கொண்டது. பரிசுத்தமானது எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுவது" என்று மகுடாகமம் கூறுகிறது.

### சர்வ தேவாத்மகம் சத்யம் மண்டபம் சர்வ காமிகம்

பிரமம் ஒன்றே என்பதையும் யாகசாலையிலும் கோவிலிலும் பூஜிக்கப்படும் எல்லாத்தெய்வங்களும் அந்த ஒரே பிரம்மத்திலிருந்து தோன்றியவையே என்பதனையும் சைவசித்தாந்தம் எப்போதும் கொண்டுள்ளது.

இவ்வாறாக ஆகமங்கூறும் யாகசாலையில் அமைக்கப்படும் குண்டங்களில் அக்னி முக்கிய இடம் வகிக்கின்றான். இங்கு கூறப்படும் அக்னியையும் வேதகால அக்னியையும் நாம் ஒப்புநோக்கின் வேதம் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கைத்தெய்வங்களை யாகத்தில் கூவியழைத்து அத்தெய்வங்களுக்குரிய அவிர்ப்பாகங்களையும் அளிப்பதாகும். அக்கினி வழிபடுவோனையும் தெய்வத் தையும் இணைக்கும் நிலையில் சிறப்புறுகின்றான். எனவே இத்தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு வேதகாலத்தில் சிறப்படைந்தது. அக்னியைத் தெய்வமாக வழிபடும் பாடலில் இடம்பெறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

"தீ வேள்வியின் முன்னிற்பவன் அவன் பருவங்களை வகுக்கும்
தேவன் அவன் வானவரை அழைப்பவன் அவனை வேண்டு
கின்றேன். நீயே நெறியிலோங்கும் வேள்விதனை நீ எப்
புறத்திலும் சூழ்ந்து காக்கிறாய் அ்.தே வானவரிடம் சேரும்
தீ வானவரை அழைப்பேன் புலமையுள்ள செயற்கைத்திறமையோன்"

இக் குறிப்பு அக்கினி வழிபடப்படும் தெய்வத்தை அழைப்பவனாக சித்தரிக்கின்றது. அக்னி தேவர்களில் முற்பட்டவனாகவும் முன்னோனாகவும் விளங்குபவன். அனைத்து செய்கைத்திறமை உயிர் வலிமை, பொலிவு, ஒளி, மாட்சி ஆகிய அனைத்தும் அக்னிதேவனுடைய விளக்கங்களாகத் திகழ்கின்றன.

**ஆகமங்கூறும் அக்னி பற்றி,**

ஸர்வதேவமயோ வன்னி சர்வ மந்த்ர மய ஸ்ததா
ஸர்வலித்யா த்மஹ ச்சாஸௌ சர்வ ஞான ஆத்மஹ ஸ்ததா
தஸ்மாத் ஸர்வேசு கார்யேசு த்யாத வ்யோ விதி மார்கதக
அக்னிபூஜாம் விநாயத்ர தத்ர வை நிஷ்பலம் பவேத்
அக்னி வத்ரே குனே ச்சைவ அக்னி ரூப ம் இதி ஸ்ம்ருதம்
விவாகாதி சுபே கார்யே கார்ஹ பத்யம் சமுத்ர க்ஹருதம்
பித்ர யுக்தேசு காதர்யேசு தட்சினாக்னிம் ப்ரகல்பயேத்
தேவாகார்யேசு சர்வேசு ஆஹவனிய்க்னிம் ததைவச"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தேவர்களின் வடிவிலும் எல்லா மந்திர வடிவினன் எல்லாவித கல்வியையும் எல்லா ஞானத்தையும் அறிந்தவன். ஆகவே எல்லாக் காரியங்களிலும் விதிப்படி அக்னிகாரியம் செய்க, அக்னி பூஜை இல்லாத காரியம் பயனற்றது. அக்னியின் முகத்தில் (ஜுவாலையில்) எல்லாத் தேவர்களும் பிரியமாக வசிப்பர். விவாகாதி சுபகாரியங்களில் கார்ஹபத்யமும் பிதிர்காரியங்களில் தட்சினாக்கினியை யும் விரிக்க தேவகாரியங்களில் ஆஹவநீயாக்னியைப் பூசிக்க.

வேதகாலங்களில் சிரௌத, கிருஹ்ய கிரியைகளிலும் அக்னி மாறுபடுவதைக் காணலாம். ஆலய வழிபாட்டில் பிரதிஷ்டையின் போது விருத்தாக்னியும் உற்சவதினங்களில் யௌவனாக்னியும் வாஸ்து சாந்தி முதலியவற்றில் பாலாக்னியும் செய்க என எல்லாவித ஆகமங்களும் கூறுகின்றன. இன்னும் காமிகம் அக்னிபேதம் பற்றி கூறுகையில்,

"அக்னிகாரியம் வைதீகம், மிச்ரம், சைவம் என மூன்று விதமாக
கூறப்படுகின்றது. வேதமந்திரங்கள் மட்டும் செய்வது வைதீகம்
வேதசைவ மந்திரங்களைச் செய்வது மிச்ரம், சிவமந்திரங்களை
கொண்டு மட்டும் செய்வது சைவம் என அக்னி உற்பத்திக்கிரமம்
சிவாகமங்களில் சொல்லப்படுகின்றது"
வேதங்களில் அக்னி சொரூபம்,

"இரண்டு முகங்கள் ஆறுகண்கள் இரண்டு மூக்குகள் ஏழநாக்குகள்
ஜடை யக்ஞோபவீதம் (பூணூல்) மூங்கிற் புல்லாலான அரை
ஞாண், ஏழு கைகள் மூன்று பாதங்கள் ஆடுவாகனம்"

இவற்றை உடையவராக வேதங்களில் அக்னிபகவான் கூறப்படுகின்றார். ஆகமங்களில்

" செவ்வண்ணம் ஐந்து முகங்கள் பதினைந்து கண்கள், ஏழுநாக்குகள்
பத்துக்கரங்கள், சிகப்பு ஆடை ஆபரணங்கள், தாமரைமலர்
இருக்கை, ரிஷபவாகனம்"

ஆகியவற்றை உடையவராகக் கூறப்படுகின்றார்.

ஹிரண்யை, கனகை, ரக்தை, கிருஷ்ணை, சுப்ரபை, அதிரக்தை பஹுரூபை என்பன அக்னியின் 7 நாக்குகள் வேதாக்னிக்கு மத்தியில் ஒன்றும் நான்கு திக்குகளில் நான்கும் தென் கிழக்கில் ஒன்றும் வடகிழக்கில் ஒன்றுமாய் ஏழுநாக்குகள் அமைந்திருக்கும். சைவாக்கினியில் மேல் முகத்தில் மூன்றும் கிழக்கு முதலான திசைகளை நோக்கும் நான்கு முகங்களில் நான்குமாக ஏழு நாக்குகளும் அமைந்திருக்கும்.

ஆலயக்கிரியைகளில் சிவாக்னி மிகச்சிறந்தது. வைதீகாக்னி மந்திரம் தனித்த வைதீகாக்னியில் சிவமந்திரங்களைச் சேர்க்கலாகாது. சிவாக்னியில் வைதீகமந்திரங்களையும் மற்றவைகளும் கூறப்பட்டுள்ளன. (காமிகாகமம் பூர்வக்னிகார்ய விதிபடலம்) இன்னும் அக்னியின் தாய் தந்தையர் பற்றியும் பிரதிஷ்டையில் உபயோகிக்கும் அக்னிபேதம் பற்றியும் காரணாகமம் கூறுகின்றது.

அதாதசம்ப்ரவஸ்யாமி அக்னி உற்பவம் உச்யசே
வாகீசீ அக்னி மாதா வா பிதா வாகீஸ்வரத்ததா
வாகீசீ சம்பவாத் கௌரி வாகீஸஸ்து மகேஸ்வரஹ
சதாசிவஸ்ய ஹ்ருதயே சக்தி சிவ ஹருதே சிவம்
உபயோ ரம் தரம்நாஸ்தி வாயு ரம்ப யோரபி
சிவசக்தி சமாயோகாசிவாக்னிஸ்து சமுத் பவஹ
சிவாக்னேஸ்து சகஸ்ராம்சாத் கார்ஹ பத்ய சமுத் பவஹ
கார்ஹ பத்ய சஹஸ்ர அம்சாத் தெட்சிணாக்னி சமுத் பவஹ
தட்சிணாக்னி சகஸ்ர அம்சாத் ஆகவனியாக்னி சமுத்பவஹ
கார்க பத்னி அன்கி த்ரயம் ப்ரோக்தம் பால யௌவன வ்ருத்தஹா

அக்னி உற்பவலட்சணம் அடுத்ததாக நன்கு கூறப்படுகின்றது. வாகீசீ அக்னியின் மாதா, வாகீஸ்வரர் தந்தையாகின்றார்கள். அவ்விதமே கௌரியிடமிருந்து வாகீசியும் மகேஸ்வரரிடமிருந்து வாகீஸ்வரரும் தோற்றம் பெற்றனர். சதாசிவனின் இருதயத்தில் சக்தியும் சிவனின் இருதயத்தில் இருந்து சிவனும் நீரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று விளங்குவது போல இருவருக்கிடையில் பிரிவு கிடையாது. சிவசக்தியின் இணைப்பினால் சிவாக்னியானது தோற்றம் பெற்றது. சிவாக்னியின் ஆயிரத்திலொரு பாகத்திலிருந்து கார்ஹபத்தி யாக்னியும், கார்ஹபத்தியாக்னியின் ஆயிரத்திலொரு பாகத்திலிருந்து தட்சணாக்கினியும், தட்சணாக்னியின் ஆயிரத்திலொரு பாகத்திலிருந்து ஆஹவனீயாக்னியும் தோற்றம் பெற்றன. கார்ஹபத்யாக்னியானது பாலம், யௌவனம், விருத்தம் என மூன்றாகக்கூறப்படுகின்றன. இவ்வாறாக சிவாக்னியானது யாகசாலையில் அமைக்கப்பட்ட எட்டுக்குண்டங்களிலும் முறையே கிழக்கில் ஆஹவநீயாக்னி, தெற்கில் தட்சனாக்னி, வடக்கில் கேவலாக்னி, மேற்கில் கார்ஹபத்யாக்னி, தென்கிழக்கில் விருத்தாக்னி, வடகிழக்கில் சாமான்னியாக்னி, தென்மேற்கில் யௌவனாக்னி, வடமேற்கில் பாலாக்னி என பூஜித்து அவற்றில்

இறைவனின் அஷ்டமூர்த்திகளை ஆவாஹிக்கப்படும். பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அஷ்டமூர்த்தி என சிறப்பிக்கப்படுகின்றான்.

இவ்வாறாக பிரதிஷ்டாகாலங்களில் இறைவனை அஷ்டமூர்த்திகளாகவும் நவபேதங்களாகவும் வழிபடுதலே உயர் நோக்கமாகும். பிரதிஷ்டா காலங்களில் ஒன்பது குண்டம் முதல் முப்பத்திமூன்று குண்டங்கள் வரை விரித்து இறைவனை அவற்றில் தத்வம், தத்வேசம், தத்வேசி, மூர்த்தி, மூர்த்தீஸ்வரர், மூர்த்தீஸ்வரி என பூஜித்து யாக இறுதியில் நாடிசந்தானம் வழியாக லிங்கத்தில் சாந்நித்யம் பெறும் வண்ணம் செய்தலே நவகுண்ட ஸ்பரிசாகுதியாகும். இங்கு பூஜிக்கப்படும் குண்டம் அக்னியாகுதி என்பன வைதீக மரபு சார்ந்த தொடர்ச்சியாகும். கும்பம், விக்ரகம், நாடி, சந்தானம் என்பன ஆகமம் சார்ந்த மரபின் தொடர்ச்சியாகும்.

கிரியைகளை பொறுத்தமட்டில் மேலே கூறப்பட்டவாறு வேதங்களும் ஆகமங்களுக்குமிடையே சில பேதங்கள் காணப்படுவது உண்மையே எனினும் கிரியைகளின் பயன் ஞானப்பேறு. சிவப்பிரகாசமும் இதனையே வலியுறுத்துகின்றது. "கிரியையென மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்கிறது. கிரியைகள் நேரடிமுத்தியை தரவல்லனவல்ல கிரியை நெறி ஞானத்தை கொடுக்க ஞானப்பெற்றாலேயே முத்திப்பேறு ஞானபாகத்தை பொறுத்தமட்டில் வேதாகமங்களுக்கிடையே முரண்பாடு இல்லை என்பது தெளிவு. ஆகையால் தான் அபேதத்தைக்காட்ட திருமூலரும் இவ்விரண்டில் ஞானபாதங்களை சுட்டிக் காட்டினார்.

வேதத்தில் கர்மகாண்டம் சிவாகமத்தில் சரியை கிரியை எனும் பாதங்களாகவும், வேதத்தின் ஞான காண்டம் சிவாகமத்தின் யோகம் ஞானம் எனும் பாதங்களாக விரிந்துள்ளது. பிரம்மபொருள், பிரணவம், திருவைந்தெழுத்து, பிரசாதம், முதலான மந்திர விளக்கங்கள் பதி, பசு, பாசவிளக்கம், லிங்கவழிபாடு, திருநீறு அணிதல் ருத்திராட்சம் அணிதல் இவைமுதலான கருத்துக்களெல்லாம் வேதங்களிலும் ஆகமங்களிலும், சமமாகக் காணப்படுகின்றன. என்று கூறி இவற்றின் பேதமின்னையை தமது பிரம்ம சூத்திபா'யத்தில் விளக்ககின்றார் ஸ்ரீகண்டன். ஸ்ரீகண்டரின் உரைக்கு "சிவார்ச்சன மணிதீபிகை" எனும் விளக்கவுரை எழுதிய அப்பையதீட்சதா் வேதத்திற்கும் ஆகமத்திற்கும் பொருள் ஒன்றே என்பதை விளக்கமாகக்கூறியுள்ளார். கா்மம் உபாசனை யோகம் என்ற நெறியில் சென்று ஞானத்தில் முடிகின்றது. வேதம் சரியை, கிரியை, யோகம் என்ற நெறியில் சென்று ஞானத்தில் முடிகின்றது ஆகமம்.

வேதங்களினதும் ஆகமங்களினதும் ஒற்றுமையை ஆரியபட்டர் சைவசித்தாந்த பரிபாஷை எனும் நூலில் விளக்குகின்றார். வேதம் ஒன்றோடொன்று மாறுபட்டமையங்களைச் சார்ந்தவர்களின் ஜயத்திற்கு இடமாதலால் வேதங்களின் பொருட்களை விளக்கவதற்காக தோன்றியவையே சிவாகமங்கள். வேதம் சூத்திரம் எனில் ஆகமங்கள் பாஷ்யம் எனக்கூறலாம். பாஷ்யம் என்பதற்கு மூன்றுவிளக்கங்கள் உண்டு. முதலாவதாக மூலநூலின் கருத்தை விளக்கவேண்டும். இரண்டாவதாக மூலநூலின் இலைமறையாகச் சொல்லப்பட்ட கருத்துக்களைத் தெளிவாகக் கூறவேண்டும். மூன்றாவதாகவே மூலநூலில் சொல்லப்படாத கருத்துக்களை மூலநூலுக்கு முரணாகாத வண்ணம் சேர்த்துக்கூறவேண்டும. இவற்றை முறையெ உக்தம், துருக்தம், அனுக்தம், என்பர் சமஸ்கிருத அறிஞர்கள். வேதத்தில் கூறப்பட்ட ஆன்மா, பிரமம் முதலியனவற்றை விளக்குகின்றன. வேதத்தில் இலைமறைகாயாகக் கூறப்பட்ட லிங்க (அடையாளம்) ட்சை' (சமஸ்காரங்கள்) முதலானவற்றை நன்றாக விளக்கிக்கூறி தெளிவுபடுத்தகின்றன. வேதத்தில் கூறப்படாத ஆலய அமைப்பு பிரதிமாலட்சணம் சிவாக்னி, இயற்கை வழிபாட்டை வேதங்கள் கூறிநிற்க அதனையே பின்பற்றி சிவாகமங்கள் அக்னிவழிபாட்டின் மூலம் பிம்ப வடிவிலமைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரஹ வழிபாட்டோடு இணைக்கும் ஸ்பரிசாகுதி என்பனவற்றை வேதநெறிக்கு முரணாகாதவண்ணம் கூறுகின்றன.

சூர்யபட்டர் கூறுவதுபோல வேதம் அனைவருக்கும் பொதுவாக மறைபொருளை கூறுவதால் பொது என்றும் ஆகமம் தீட்சை பெற்றோருக்கு மட்டும் அப்பொருளை விளக்கிக் கூறுவதால் சிறப்பு நூல் என்றும் கருதப்படுகிறது. வேதாந்த ஞானம் இல்லையாயின் சித்தாந்த சாத்திரமாகிய ஆகமத்தைப் பயின்றுணரும் தகுதி உண்டாவதில்லை. எதனாலெனின் சித்தாந்தம் என்பது வேதாந்தத்தின் சாரமாகவுள்ளதால் என சூர்யபட்டர் கூறுவதால் வேதம் ஆகமம் எனும் இரண்டின் பயிற்சியே முழுமையைக் கொடுக்கும் என்பது புலனாகிறது.

ஏற்கனவே கூறியது போன்று மற்றைய சாத்திரங்கள் நிரூபிக்கத் தவறிவிட்ட தத்துவங்களை ஆகமங்கள் நிரூபிக்கின்றன. வேதவழிப்பட்ட சாத்திரங்கள் பெரும்பாலும் பிருதிவிதத்வம் முதல் மஹத் எனப்படும் பிரகிருதி தத்வம் வரையுள்ள இருபத்திநான்கு தத்துவங்களையே கூறும். இவற்றிற்கு மேற்பட்ட சிவதத்வம் ஐந்தையும் பற்றி பிற சாத்திரங்கள் நினைத்தக்கூடப் பார்க்கவில்லை. சிவாகமங்கள் மட்டுமே பூமி முதல் நாதம் வரையுள்ள முப்பத்தியாறு தத்துவங்களை பற்றி விரிவாக ஆராய்ந்து கூறுகின்றன. காலாக்னி புவனம் முதல் அனாகிருதபுவனம் வரையுள்ள இருநூற்றி இருபத்திநான்கு புவனங்களைப் பற்றியும் சிவாகமங்கள் மட்டுமே கூறுகின்றன. ஆறுவிதமான தத்துவங்களைப்பற்றியும் ஆகமங்கள் கூறுவன. மற்றநூல்களில் இல்லாதனவற்றை சிவாகமங்களில் காண்க. சிவாகமங்களில் இல்லாதனவற்றை எந்தநூல்களிலும் காணமுடியாது என வித்தியாரண்ய மாமுனிவர் தமது சூதசம்மிதை உரையில் கூறுகிறார்.

பொதுநூலாகிய வேதங்களையும் ஆகமங்களையும் நன்கு அவதானித்தால் சிவபொதுத் தன்மைகள் இடம்பெறுவதைக்காணலாம். சிவத்தின் அங்கம் வேதம் எனின் சிவாகமங்கள் அங்கி எனப்படும். சிவாகமங்கள் துதி நூல்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஆகமங்களைக் கிரியைபற்றிய விதிநூல் எனக்கொள்ளலாம்.இவ்வாறாக வேதங்களும் ஆகமங்களும் ஒன்றினோடொன்று இணைந்து ஆலயகிரியை மரபில் இணைந்துள்ளன. ஆலயங்களில் இடம்பெறும் அஃடோத்திர சதநாம அர்ச்சனை, சகஸ்ரநாமம், இலட்சார்ச்சனை, கோடிஅர்ச்சனை என்பவற்றிற்கு மூலமாக யசுர்வேத சதருத்ரீயம் வழியமைத்தனவாகக் காணலாம். இவ்வாறாக ஆலய கிரியைகளில் உச்சரிக்கும் மந்திரம் உச்சாடனம் செய்து வழிபடும் முறைகள் இரண்டுமே சிறப்புற்று விளங்குகின்றது.

தோத்திரங்கள் கூறி வழிபடும் முறையும் பொதுவாகவுள்ளது. ஆகமமரபில் இசையுடன் பாடல்களைப்பாடும் மரபிற்கு சாமவேதம் முன்னோடியாயிருக்கலாம். மந்திரசப்தம் நித்தியமானது. அழிவில்லாதது. அத்தகைய மந்திர சப்தங்களே கிரியைகளுக்குரிய ஆதாரசுருதியாகும். இக்காரணம் பற்றி வேதமந்திரங்களின் உச்சாடனங்களை அறியவும் ஆகமகிரியைகளில் மந்திரப் பிரயோகங்களை உரியவாறு உணரவும் பயிற்சி இன்றியமையாததாக விளங்குகின்றது. சிவாச்சாரியார் என்ற ஆசாரிய தகுதிப்பாட்டினை ஒருவர் பெறுமுன்பு சற்குருவை நாடி மந்திரமரபு, உச்சாடனம் மற்றும் பிரயோக முறைகள் நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்து தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டியவராகவுள்ளார். தெய்வீக சக்தி பொருந்திய வேதாகம மந்திரங்களைத் திருக்கோயில் கிரியைகளின் போது உச்சரிக்கும் போது கல்லினாலும், உலோகத்தினாலும் உருவாக்கப்பட்ட விக்கிரகங்கள் தெய்வீக பொலிவு பெறுகின்றன. கிரியை நிகழும் இடத்தை தூய்மைப்படுத்துகின்றன. இவ்வகையில் வேதாகமங்களின் பெருமையை உணர்ந்த நல்லைநகர் நாவலரும், அவர் எழுதிவெளியிட்ட சைவதூஷணபரிகாரம் என்ற நூலில் ஸ்ரீவேதாகமோத்த சித்தாந்த சைவப்பிரகாச சாமாகீய விக்கியாபனத்தில் சைவசமயத்திற்கு வேதமும் ஆகமமும் மற்றும் திருமுறைகளும் திராவிட சித்தாந்தங்களும் பிரமாணம் என்பதை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துக்கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நூல்கள் எல்லாவற்றாலும் உணர்த்தப்படும் சைவமும் அச்சமய லட்ஷணங்களெல்லாம் குறைவற அமைந்த சத்திய சமயம் என்று சுருதியுக்த அனுபூதிகளாலே நிச்சயித்து ஆதிகாலந் தொட்டு பரதகண்டத்திலுள்ள நமது முன்னோர்களாகிய சகல மகான்களும் அதனையே அங்கீக ரித்துக்கொண்டு வந்தனர். அவ்வாறே நாமனைவரும் அந்த சைவமே சற்சமயம் என்று நிச்சயித்து அங்கீகரிக்கின்றோம். என்ற அவரது குறிப்பு சைவ சமய மரபிற்குரிய பிரமாணங்களாக வேதாகமங் கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதாகவுள்ளது. மேலும் அதே நூலில் பதிப்பிரகரணத்தில் வேதாகமங்களை "நாங்கள் மெய்நூல்களெனத் துணிந்து வேதாகமங்கள்" எனக்கூறுகிறார். இவ்வாறாக வைதீகமரபும் ஆகமமரபும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து சைவத்தை வைதிக சமயம் என்ற சிந்தனைக்குரிய கூற்றை நாம் தோத்திர நூல்களிலும் சாத்திரநூல்களிலும் காணலாம். திருமூலரது திருமந்திரமும் சேக்கிழாரின் பெரியபுராணமும் மெய்கண்ட சாத்திரங்களில் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் போன்றவையும் ஆகமங்களையும் வேதங்களையும் கூறுகின்றன. வேதங்கள் ஆகமங்கள் ஆகிய இரண்டும் பொது, சிறப்பு எனவும் இவற்றினையே வேறுபாடற்ற தன்மை உளதென்று திருமூலர் (8:15:35) எனவும் சித்தியார் "அருமறையாகம முதநூல்" எனவும் (8:14) சிவப்பிரகாசம் (1:1) 2பல்க லயாகமம் வேதம் யாவையினும் கருத்துப் பரி பசு பாசம் தெரிதலாம்" எனக்பறிப்பிடுவது வேதாகமங்களின் உட்பொருள் முப்பொருள் விளக்கமே என்பது தெளிவாகின்றது.


ஆகமங்கள் கூறும் கிரியைகள் சாதனைக்குரியவை, எனவே அவற்றின் நடைமுறை விளக்கங்க ளையும் ஒழுக்கங்களையும் அவற்றைப் பொறுப்பேற்று நடத்தும் சிவாச்சாரியர்களுக்கு எடுத்துக்கூறும் பத்திகள் எழுந்தன. இவ்வாறாக மந்திர சிறப்புடன்கூடிய ஆலயக் கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபி'ேகம் எனும் கிரியைகளில் வேதநெறியும், ஆகமநெறியும் கூறும் சமயமரபு சங்கமமாகின்ற உயர்நிலையை ஸ்பர்சாகுதி கிரியையில நன்கு அவதானிக்கலாம். அத்தோடு இயற்கை சக்திகளை தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல், அக்னிவழிபாடு, மந்திரஉச்சாடனம், அர்ச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களிலும் வேதங்களின் பங்களிப்பினை நன்கு உணரத்தக்கதாகும்

அடிக்குறிப்புகள்

| | |
|---|---|
| திருமந்திரம், | 8 : 2365 |
| மேற்படி, | 8 : 2358 |
| அப்பர் தேவாரம், | 6 : 919 |
| மகுடாகமம், | 111 : 11 |
| பூர்வகாரணாகமம், | 5 : 8 |
| காமிகாகமம், அக்னிகார்யவிதிபடலம் | |
| காரணாகமம், | 1 : 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## YAGA MAṆṬAPA




1. Brahma-pada — Śiva Kumbha and Vardhani Kumbha
2. Daivika-pada — Upa-Vedikā, Aṣṭa-maṅgala
3. Mānuṣa-pada — Fire-pits
4. Paiśāca-pada — for movements of paricārakas.
5. Rākṣasa-pada — for Kalaśas.

| | | |
|---|---|---|
| A1. | fire-pit | (caturaśra, square) |
| A2. | ,, | (yoni) |
| A3. | ,, | |
| A4. | ,, | (trikoṇa, triangle) |
| A5. | ,, | (Vṛtta, circular) |
| A6. | ,, | (Ṣaḍaśra, hexagonal) |
| A8. | ,, | (aṣṭa-koṇa, octogonal) |
| A9. | ,, | Pradhāna-kuṇḍa (vṛtta, ci… |

| | | |
|---|---|---|
| S. | Śāntitoraṇa | — east |
| BH. | Bhūtitoraṇa | — south |
| B. | Balatoraṇa | — west |
| A. | Ārogyatoraṇa | — north |

| | | | | |
|---|---|---|---|---|
| K1. | Nandi | Kalaśa | K14. | Ṛṣabha |
| K2. | Śānti | ,, | K15. | Nivṛtti |
| K3. | Mahākāla | ,, | K16. | Skanda |
| K4. | Indra | ,, | K17. | Varuṇa |
| K5. | Sūrya | ,, | K18. | Mahālak… |
| K6. | Agni | ,, | K19. | Vāyu |
| K7. | Bhṛṅgi | ,, | K20. | Gaṇeśa |
| K8. | Vidyā | ,, | K21. | Devī |
| K9. | Vināyaka | ,, | K22. | Pratiṣṭhā |
| K10. | Yama | ,, | K23. | Caṇḍeśa |
| K11. | Vāstu-Brahma | ,, | K24. | Kubera |
| K12. | Nirṛti | ,, | K25. | Sapta-G… |
| K13. | Viṣṇu | ,, | K26. | Īśāna |
| | | | K27. | Brahma |


### Directional flags

| | | | | |
|---|---|---|---|---|
| F1. | East | flag | Kumuda | Yellow |
| F2. | South-east | ,, | Kumudākṣa | red |
| F3. | South | ,, | Puṇḍarika | blue-lotus |
| F4. | South-west | ,, | Vāmana | smoky or |
| F5. | West | ,, | Śaṅkukarṇa | white |
| F6. | North-west | ,, | Sarpanetra | variegated |
| F7. | North | ,, | Sumukha | gold |
| F8. | North-east | ,, | Supratiṣṭha | crystalline |

### Daśāyudha

| | | | |
|---|---|---|---|
| D1. | Vajra | D6. | Kavac… |
| D2. | Śakti | D7. | Gadā |
| D3. | Daṇḍa | D8. | Śūla |
| D4. | Khaḍga | D9. | Padma |
| D5. | Pāśa | D10. | Cakra |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புவனங்கள் 225. ஆகவே புவனபதங்கள் இதில் உள்ளன    படம் 28

16 சூத்திர யாகசாலை (காமிகப்படி)

லிங்கஸ்தாபனத்திலும் உருவமூர்த்திகளின் ஸ்தாபனத்திலும் உற்சவத்திலும் ஸம்புரோக்ஷணத்திலும் தீக்ஷையிலும் பாலஸ்தாபனத்திலும் 16 சூத்திர (கலாசூத்திர) யாகசாலை அமைக்கவேண்டும். இதில் நவகுண்டங்கள் போடலாம். இதில் உள்ள பதங்கள் பின்வருமாறு: இதில் மத்திய பதத்தைவிட 7 பதங்கள் உள்ளன. இதில் 225 பதங்கள் உள்ளன. சிவ, சக்தி, நாத, பிந்து, சதாசிவ, மகேஸ்வர ருத்திர, விஷ்ணு என 8 பதங்களின் பெயர்களாம். சதாசிவபதத்தில் குண்டங்களையும், 32 தூண்களையும் அமைத்துக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காமிகம் 408–ம் பக்கம் முதல் படம் 32

## 33 குண்டங்கள் அமைந்த 44 சூத்திர ருத்திர சூத்திர யாகசாலை

இதில் 1849 பதங்களும் 21 ஆவரணங்களும் உள்ளன. சிவபதம் முதலாக ராக்ஷஸபதம் ஈருக 21 பதங்களுக்கும் பெயர்கள் உள்ளன. அவைகளுள் சதாசிவபதத்தில் 9 குண்டங்களும், ஆசாபதத்தில் 8 குண்டங்களும், கலாபதத்தில் 8 குண்டங்களும். பிரம்மபதத்தில் 8 குண்டங்களுமாக 33 குண்டங்கள் அமைக்கப்படவேண்டும். இங்குள்ள நான்கு மேடைகளிலும் உள்ளிருந்து முறையே அஷ்டவித்தியேசர் கும்பங்கள், நந்தி முதலியோரின் 8 கும்பங்கள், லோகபாலகர்களின் 10 கும்பங்கள், பின் தசஆயுதங்கள் இவைகள் வைக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் மூன்று

### 'ஸ்பர்சாகுதி'கிரியை ஒழுங்கும் நோக்கமும்

"ஸ்பர்சாகுதி" என்பது ஸ்பர்ச, ஆகுதி என வகுக்கலாம். ஸ்பர்சம் என்பது தொடுதல், ஆகுதி என்பது அக்னியில் ஆவி சொரிதல். ஆதாவது பிரதிஷ்டா காலங்களில் அக்னியில் ஆவாஹிக்கப்படும் இறைவனை கர்ப்பக்கிரஹத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிம்பத்தில் சாந்நித்தியம் ஆகும் பொருட்டு அக்னியில் பூஜித்து ஆகுதி வழங்கி எஞ்சிய நெய்யைப் பிம்பத்தில் விட்டு சாந்நித்தியம் பெறச் செய்தலே ஸ்பர்சாகுதியாகும்.

மேலும் பஞ்சபூதங்களில் ஆகாயத்திற்கு சப்தம் மட்டுமே குணம். வாயுவிற்கு சப்தம், ஸ்பர்சம் ஆகிய இரு குணங்களாகும். ஏனையவற்றிற்கு ஒவ்வொன்றாகக்கூடி பிருதிவிற்கு ஐந்து குணங்களாகவுள்ளது. எனவே பஞ்சபூதங்களில் பிருதிவி வடிவம் விக்கிரகம். நீர் வடிவம் கும்பம். அக்னி வடிவம் யாககுண்டத்தில் பூஜிக்கப்படும் அக்னி. ஏனவே வாயுரூபமாகவும் ஆகாயரூபமாகவும் விக்கிரகத்தில் இணையவேண்டும். யாகத்தில் உச்சரிக்கும் மந்திரம் ஆகாயத்திற்குரிய சப்தகுணம். ஏனவே இவையனைத்தையும் நாடி சந்தானம் வழியாக வாயுவின் உதவியோடு அக்னி, கும்பம், பிம்பம் ஆகியவற்றை இணைக்கும் முகமாக வாயுவின் குணமாகிய ஸ்பரிசத்தை அதாவது தொடுதல் எனும் இயல்பைக் குறிக்கும் மந்திரங்களை உச்சரித்து பிம்பத்தில் அந்தந்த இடங்களில் மூர்த்தி, மூர்த்தீசர், மூர்த்தீசி, தத்வம், தத்வேசர், தத்வேசி ஆகிய அமசங்களை சாந்நித்யம் ஆகும் வண்ணம் செய்தலே ஸ்பர்சாகுதி எனலாம்.

திசையறிகருவி திசையைக் காட்டுவது போன்று உண்மையான வாழ்க்கையின் திசையைக்காட்டும் கருவிதான் சமயம் எனின் மிகையில்லை. சமயவாழ்வில் மேன்மையடைவதற்குரிய கிரியைகள் இந்து சமய மரபிலே பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள பல்வேறு கிரியைகள் வகுக்கப்பட்ட காலங்காலமாகப் பேணப்பட்டவந்துள்ளன. இம்மை மறுமை ஆகிய இரு நிலைகளிலும் எமக்கு நன்மை பயக்கத்தக்க கிரியைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. உலகியல் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டே ஆன்மீகநிலையில் மேன்மையடைய ஒருவனுக்கு இன்றியமையாது துணைபுரிகின்றன. எனவே நியமமாக கைக்கொள்ளப்பட வேண்டிய கிரியைகள் பற்றியும் அவற்றின் உட்பொருள் பற்றியும் அவற்றை ஒழுங்காகச் செய்வதனால் எமக்குக் கிட்டும் பலன்கள் பற்றியும் நாம் அறிந்து தெளிவடையவேண்டியது அவசியமாகும்.

தன்னையும் அறிந்த தான் எடுத்த பிறவியின் நோக்கத்தையும் அறிந்து தன்னைப்படைத்த இறைவனது தாளினைப் பற்றும் வழிவகைகளை அறிந்து வாழும் போதுதான் மனிதன் இப்பிறவியின் முழுமையடைவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எமக்கு முன் வாழ்ந்த சான்றோர்களும் ஞானிகளும் அனுபூதிமான்களும் தாம் பெற்ற அனுபவப் பேறாக கிரியைகளினால நாம் பெறத்தக்க ஆன்மீக அனுபவத்தை எடுத்துக்கூறியுள்ளார்கள்." இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்காகும்.

இவ்வாறாக ஆன்மாக்கள் உய்யும் பொருட்டே இறைவன் சாத்திரங்களை படைத்தான் என்கிறது காரணாகமம். சைவசமயியின் வாழ்க்கையை வளம் படுத்துவதிலும் அவனது ஆன்மீக சாதனைக்கு நிலைக்களனாகவுள்ள ஆலயவழிபாட்டினை நெறிப்படுத்துவதிலும் ஆன்மாக்கள் இன்றியமையாத மூலங்களாக காலங்காலமாக விளங்கிவருகின்றன. வரலாற்று மூலங்களைக் கொண்டுபார்க்குமிடத்தும் திருக்கோயில்களின் பண்பாட்டிற்கு ஆகமங்கள் உதவியுள்ளமை நன்கு தெரியவரும். ஆகமங்களை உரியவாறு பேணுவதிலும் அவைகூறும் வழியில் வழிபாட்டுமுறைகளை ஒழுங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதிலும் சைவசமய சார்புடையோர் அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுவது இயல்பே. எமக்கு முன்னால் வாழ்ந்த சைவசான்றோர்கள் பலரும் இம்மத்தியில் வாழும் அறிஞர்களும் ஆகமம் தொடர்பான அறிவுப்பரம்பலுக்கு தம்மாலான பங்களிப்பினை நல்கியுள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

சைவசமய மரபைப் பேணத்துணைபுரிகின்ற ஆகமங்கள் பற்றி நாம் பல்வேறு பரிமாணங்களை அறிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு தரவுகள் உள்ளன. ஆகமங்கள் உண்மையில் திருக்கோயில் பண்பாட்டின் கருவூலங்கள். ஆன்மா கடவுளை அடைதலே பிறப்பின் நோக்கம். இந்த நோக்கத்தை இலகுவில் அடையக்கூடிய வழியைத் தன்னகத்தே கொண்டுள்ள சமயமே சைவசமயம் ஆகும். நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்சமமாகிய சைவசமயம் எனக்குறிப்பிடுகின்றார். சைவசமயத்தைப் பொறுத்தவரை இந்நோக்கத்தையடைவதற்கு இன்றியமையாததாகிய இறைவன் திருவருளைப்பெற உதவும் சாதனமாகவே ஆகமங்கள் கொள்ளப்படுகின்றன. கடவுள் ஆன்மாக்கள், கடவுள் வழிபாடு நல்வினை தீவினை, சைவவாழ்க்கை சைவஒழுக்கம், சைவத்தின் மேன்மை, சைவசித்திந்த அடிப்படை, ஆலயம், அங்கு இடம்பெறும் இறைவன் திருவங்கள், நித்திய நைமித்க கிரியைகள் ஆகியனபற்றிக் கருத்துக்களை சாஸ்திரரீதியில் உணர்த்தும் நூல்களாகவும் அவை விளங்குகின்றன. ஆகமத்தின் தெய்வீக சிறப்பைப்பற்றி சேக்கிழாரும் திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்தில்

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை எனவுரைத்தருள
அண்ணலார் தடை அர்ச்சனை புரிய ஆதரித்தான்"

எனக்குறிப்பிடுகின்றார். ஆகமத்தின் இயல்பினால் இறைவனுக்கெனச் செய்யப்படும் வழிபாடு அர்ச்சனை பூசனை ஆகியனவாகும். இவ்வழிபாட்டில் கிடைக்கும் அனுபவம் பக்தியோகம். திருமூலரும் ஆகமவிதி, ஆகமத்திறன், ஆகமத்தியல்பு, ஆகமஉண்மை போன்ற குறிப்புக்கள் மூலம் ஆகமத்தின் மேன்மையைச் சுட்டிநிற்கின்றார்.

இத்துணை சிறப்புமிக்க ஆகமங்கள் ஒவ்வொன்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு பாதங்களாக அமைந்து பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களை விளக்கிக் கூறுவன. இவற்றுள் யோகம், ஞானம் என்பன சிற்றறிவினரான ஆன்மாக்களுக்கு எளிதில் கைகூடுதல் இயலாது என்பதால் சரியை, கிரியை என்பவற்றை முதற்படியாக வகுத்தன ஆகமங்கள். கிரியை தொண்டுகளையும் கிரியை வழிபாடுகளையும் நிகழ்த்தி இறைவனை அடையும் இந்த மார்க்கங்களுக்கு சில தானங்களும் அவசியமாகின்றன. முன்னொருபோதும் கண்டறியாத பொருட்களை படங்கள் வரைந்து அதன்மூலம் விளங்கச்செய்வது போலவும் செய்முறை பரிசோதனைகள் மூலம் சில முடிவு களைப்பட்டறிவது போலவும் நாம் ஞாக்கண்ணால் கண்டறிய வேண்டிய இறைவனுக்கு சில உருவப் பிரதிமைகளை நமது ஊனக்கண்ணுக்குத் தெரியும்படி அமைத்து அத்திருவுருவங்களை வைத்துச் சில கிரியைகள் ஆற்றப்படுகின்றன.

எல்லா இடங்களிலும் எல்லா செயல்களையும் செய்ய இயலாத காரியம் அவ்வாறு செய்யின் உரிய சித்திகள் கிடைப்பது அபூர்வம். விஞ்ஞான பரிசோதனைகள் அதற்கென அடைந்த ஆய்வு கூடங்களிலேயே நிகழ்த்தப்படமுடியும் இது போலவே வழிபாடுகள் கிரியைகள் முறைப்படி நிகழ்த்த ஆலயங்கள் அவசியமாகின்றன.

பசுவின் உடம்பிலுள்ள பாலை அதன் மடியிலிருந்து மட்டுமே பெறமுடியும். உலகெங்கனும் வியாபித்திருக்கும் ஆண்டவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயமும் இவ்வாறே அவசியமாகின்றன. அதுமட்டுமன்றி பசுவின் மடியில் கைவைத்தமாத்திரத்தில் பால் சுரப்பதில்லை அதன் கன்றை சிறிது நேரம் ஊட்டும்படி விட்டபின்னர் நாம் முயற்சியுடன் கறந்தெடுத்தல் போல உரிய காலங்களில் உரிய முறைப்படி கிரியைகளை நிகழ்த்தி முயற்சியுடன் வேண்டிநின்றால் இறைவன் திருவருள் தானே சுரந்துவிடும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

பாலிலே மறைந்து தோன்றும் நெய்யை பிரித்தெடுப்பதற்கும் விறகிலே மறைந்து தோன்றும் தீயினை வெளிப்படுத்தவும் நாம் எவ்வளவு முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. இதேயளவு முயற்சியை இறையருள் நாட்டத்திலும் வைத்தால் நாம் வெற்றிபெறலாம் என்பதனை நாவுக்கரசரும்,

"விறகின்றீயன் பாலில் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியன்
உறவு கோல்நட்டு உணர்வுக் கைற்றினால்
முறுக வாங்கிக் கடையுமுன் நிற்குமே"

எனப்பாடுகின்றார். இவ்வாறாக இறையருளை எளிதிற் பெறவே ஆகமங்களும் கிரியை வகுத்தன. வடமொழியில் 'க்ரு எனும் வினையடி செய் எனும் கருத்துடையது. இவ்வினையடியிலிருந்தே கிரியை எனும் பதம் பிறந்தது. வடமொழியில் க்ரியா எனும் பதமானது எல்லா செயல்களை உணர்த்தினும் நடைமுறையில் சமயத்தொடர்பு கொண்டவையே கிரியை என வழங்கப்படுகிறது. "ஆகமங்களில் விதித்தவாறு சிவனை அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் வழிபடுதல் கிரியையாகும்". என தமிழ் சொற்பொருள் அகராதி குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய ஒவ்வொரு பாதத்திலும் சிறப்புற்ற பாதங்கள் மட்டும் வழங்கிவருவதைக் காணலாம். சரியாபாதங்கள் சமயாசாரங்களை எடுத்துக் கூறும் கிரியா பாதம் மந்திரங்களின் உத்திரம், சந்நியாவந்தனம், பூஜை, ஜபம், ஓமம் என்பவற்றை உபதேசிக்கும் யோகபாதம் பிராணயாமம் முதலிய அங்கங்களோடுகூடிய சிவயோகத்தையும், ஞானபாதம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றியும் உபதேசிக்கும். ஆகமம் கூறும் கிரியை பாதத்தில் ஆலயம், கோபுரம், விமானம், விக்கிரகஅமைப்பு, பிரதிஷ்டை, அங்கு நடைபெறும் கிரியைகள் ஆகியனபற்றி பிரமாணங்களைக்கூறும்.

ஆகமங்கள் எடுத்துக்கூறும் விதிகளனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக்கூறும் நூல்கள் பல இவ்வாகமங்களை அடுத்துத் தோன்றின. இவற்றினை பத்ததிகள் என வழங்குவர். பதினெண் பத்ததிகள் அவற்றினைச் செய்த ஆசிரியர்களின் பெயர்களை தாங்கிவெளிவந்த போது அகாரசிவாச்சாரியார் செய்த பத்ததியே சைவ உலகில் பெருவழக்கிலுள்ளதாகும். இதுமட்டுமன்றி ஒவ்வொரு ஆலயங்களிலும் அவ்வவ் ஆலய ஐதீகமரபிற்கேற்பவும் வழிபாடுகள் இடம்பெறுவதுண்டு.

சைவசமயத்தைப் பொறுத்தவரை அதன் கட்டுக்கோப்பை நிலைப்படுத்தி வைக்கும் சட்ட அமைப்பு போன்று இருப்பவை கிரியைகளும் அவற்றை ஒழுங்குபடுத்தி ஓர் அமைப்பில் கூறும் பத்ததிகளுமாகும். சிந்தனையளவில் சமயத்தை நிறுத்திவைக்காது நமது நாளாந்த வாழ்க்கையில் ஒட்டி உறவாடும் நெறிமுறையாக உணர்வுபூர்வமாக இணைந்து வாழ்வதற்கு உதவுபவை கிரியை களாகும்.

சைவசித்தாந்தக் கோட்பாடுகளை தெளிவுபடுத்தக்கூடிய வகையில் அவற்றின் தத்துவகருத் துக்களை விளக்கும் வகையில் நமது நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டுபவை கிரியைகளே ஆகும். ஆத்மஞானம் அடைவதே சைவர்களின் நோக்கு என்பதனை கிரியைகள் நன்குவிளக்கி நிற்பன. இவ்வாறாக ஆகமங்கூறும் கிரியை மரவில் பரார்த்த கிரியை ஆலயத்தில் நிகழ்வன. இவற்றை கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிரயாச்சித்தாந்தம் என வகுக்கலாம்.

இவ்வாறாக ஆலயமொன்றின் விக்கிரகத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வசாந்நித்யம் ஏற்படுத்த நிகழ்வதே பிரதிஷ்டையாகும். பிரதிஷ்டை என்பது ப்ர என்பது சிறப்பாக என்றும் நன்கு விளங்கும்படி எனவும் திஷ்டா என்றால் நிற்றல் எனப்பொருள்படும். எனவே விக்கிரகத்தில் இறைவன் நன்கு விளங்கும்படி சாந்நித்யம் கொள்ளச் செய்வதே பிரதிஷ்டை ஆகும். பிரதிஷ்டைக் கிரியை ஒழுங்கில் உச்சநிலையைக் குறிப்பதே கும்பாபிசேகம் ஆகும்.

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளை சிவாச்சாரியார் மந்திரபாவனை கிரியைகள் மூலமாக அக்னியிலும் கும்பத்திலும் ஆவாஹணம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப் பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலைபெற்றிருக்கும் ஆன்மாக்களுக்கு அருள்புரியுமாறு செய்தலே கும்பாபிசேகத்தின் உயரிய நோக்கமாகும்.

ஆகமமரபில் கும்பாபிசேகம் முக்கிய தத்துவம் பெறுவதினால் அது பல்வேறு ஒழுங்கில் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இவை அனாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரீதம் என நான்கு வகையாகும். மேலும் சித்தாந்த ஸாராவளியும், வருணசிவபத்ததியும், சிவபிரதிஷ்டை ஐந்து விதம் எனக்கூறுகின்றது.

பீடம் லிங்கம் உமாசிவ ஸ்ததயோ ர்யோகஹ  
ப்ரதிஸ்டோதிதா வித் யுக்தஹா பர த்ருக்  
க்ரியாத்ப தனு சாபஞ்சதை பொதிதா  
லிங்கே ப்ரும்ம சிலோத்திகே சிவயுதே  
பீடே ஸ்தித ஸ்தாபனம் பானே ஸ்தாபன மேவஜ  
பேவரமனு யச்சா ஸ்பனோ தாபனே

லிங்கம் ஞானசக்தி வடிவம், பீடம் க்ரியாசக்தி வடிவம். ஆதலால் அவ்விரண்டும் சிவனதிஷ்'டிக்கும் தேஹமாயிற்று. அவ்விரண்டையும் சிவசாத்திரப்படி சேர்ப்பது பிரதிஷ்டையாகும். அது முதல் ஆதாரசிலையைச் செய்து அதனடுவில் அவ்யக்தாதி லிங்கஸ்தானம் செய்வதில் பிரதி'டை எனும் அபின்னமான பீடமுள்ள படிகாதிலிங்கத்தில் மானஸ சம்காரமாக ஸ்தாபனம் செய்வதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திததாபனமென்னும் தாது ரத்மையமாய் அல்லது போஹமயமாயிருக்கும் பாணலிங்கத்தை ஐந்து பாகஞ்செய்து மூன்று பாகந்தன்னின் இரண்டு பாகத்திலாவது , மூன்று பாகஞ்செய்து இரண்டுபாகந்தள்ளி ஒருபாகத்திலாவது லிங்கத்தின் பாலாபலத்திற்கு தக்கபடி பிண்டிகையின் மத்தியத்திற் ஸ்தாபனஞ் செய்யில் ஸ்தாபனம் எனும் நான்கு ஹஸ்தப்ரமாணம் உள்ள லிங்கத்தையாவது வ்யக்தலிங்கத்தையாவது பிண்டிகையோடு ஸ்தாபனஞ் செய்யில் ஆஸ்தாபனம் என்றும் ஜீர்ணமான லிங்கத்தை மறுபடி யுத்தாரணஞ் செய்யின் உத்தாபனம் என்றும் ஐந்து விதமாக கூறப்படுகின்றது.

இவ்வாறு கும்பாபிஷேகம் பல பெயர்களால் வகுக்கப்பட்டபோதும் அவற்றில் கிரியைகளின் எண்ணிக்கையில் மட்டும் வித்தியாசமேயன்றி ஏனைய கிரியைகள் ஒன்றாகும் (அந்தரீதம் நீக்கலாக).

அநாவர்த்தன பிரதிஷ்டையில் சங்கோத்தாரணம் ஜலாதிவாசம் தான்யாதிவாசம் நயனோன்மீலனம் கிராம பிரதட்சணம், சயனாரோஹணம் நாமகரணம் முதலிய கிரியைகள் உண்டு. ஏனைய இரண்டு பிரதிஷ்டையில் இவை கிடையாது. பூரணமான ஒரு கும்பாபிசேகம் ஆனது அறுபத்தி நான்கு வகையான அங்ககிரியைகளைக்கொண்டது. எனவும் வேறுசில ஆகமங்கள் அதனைச்சுருக்கி ஐம்பத்தைந்து கிரியைகளையுடையது எனவும் கூறுகின்றன. கும்பாபிஷேக கிரியைகளின் வரிசைக் கிரமம் இயல் ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளமையால் இவ்வியலில் ஸ்பர்சாகுதி கிரியையும் அதற்குமுன் பின் கிரியைகளின் விபரம் தரப்படுகின்றது.

## ஸ்பர்சாகுதி கிரியை

பிரதிஷ்டா காலங்களில் ஸ்தாபிக்கப்படும் விக்கிரகங்களில் தெய்வசாந்நித்தியம் ஏற்படுவதற் காக யாகசாலையில் உள்ள ஒன்பது பதினேழு, இருபத்தைந்து, முப்பத்திமூன்று ஆகிய குண்டங்களி லும் மூர்த்த ிகும்பங்களிலும் பூஜிக்கப்பட்ட மூர்த்தி, மூர்த்தீஸ்வரர், மூர்த்தீஸ்வரி, தத்வம், தத்வேஸ்வரர், தத்வேஸ்வரிகளை யாகமுடிவில் விசேட திரவ்யஹோமம் நிகழ்ந்த பின் ஆகுதி வழங்கி மிஞ்சிய நெய்யுடன்(அவசிஷ்டாஜ்யம்) கும்பத்தை மூர்த்தியின் பக்கத்தில் வைத்து மூர்த்தியின் பிம்பத்தில் கும்பத்திலிருந்து சம்யோசித்து (கும்பத்திலுள்ள திருவருட்சக்தியை பிம்பத்தில் ஒடுக்கச்செய்து) அந்தந்தப் பக்கத்தில் கும்பஜலத்தை அபிஷேகித்து அவசிஷடாஜ்யத்தை அந்தந்த மூர்த்தீஸ்வர மூர்த்தீஸ்வரி சாந்நித்யமாகும் பொருட்டு "ஸ்வாஹா" எனும் மந்திரம்மூலம் அந்தந்தஸ்தானத்தில் விடவேண்டும். இப்படிச்செய்வதே நவகண்ட ஸ்பர்சாகுதி.

இதேபோன்று த்ரிகண்டஸ்பாசாகுதியும் உண்டு. இதுவும் விசேட திரவ்ய ஹோமம் நிகழ்ந்தபின் குண்டசமீபத்தில் வலப்பக்கத்தில் அரிசி பரப்பி அதன்மேல் சாந்திகும்பம் வைத்து ஆசனமூர்த்திமூலம் சிவனை ஆவாஹித்து பாசுபதாஸ்திர கும்பங்களையும் அந்தந்தக் குண்டங்களுக்கு அருகில் வைத்தல் வேண்டும்.

குண்டத்தில் பரமேஸ்வரனையும் மேகலையில் நிவிருத்தி முதலிய நாலு கலைகளையும், நாபியில் கிரியாசக்தியையும், ஒஷ்டத்தில் நாதத்தையும், பூஜித்து கும்பம், அக்னி, மூர்த்தி ஆகிய மூவரையும் தொடும்படி நாடிசந்தானம் செய்தல் வேண்டும்.

முதலில் குண்டத்தில் ஆத்மதத்துவத்தை பூஜித்தபின் அஷ்டமூர்த்திகளையும் மூர்த்தியதிபர்களையும் பூஜித்து சம்பாதஹோமம் நிகழ்த்தல் வேண்டும். பின் மூர்த்திபர் எண்மரும் தத்தம் குண்டங்களில் ஆத்ம தத்துவத்தையும் அதற்கு அதிபரையும் தத்தம் மூர்த்திகளையும் மூர்தீஸ்வரர்களையும் பூஜித்து சாந்தி கும்பசம்பாத ஹோமம் பூர்ணாகுதியீறாக நிகழ்த்தல் வேண்டும். பின்னர் ஆசார்யகனும் மூர்த்திகளும் சாந்திகும்பத்தில் ஜபித்து ஜபசங்கியையால் ஹோமம் செய்வர். ஆசார்யர் சிருக்கில் ஆத்ம தத்துவத்தையும் தத்வாதிகளையும், மூர்த்தி மூர்த்தீஸ்வரர்களையும் பூஜித்தல் வேண்டும். மூர்த்திபர்கள் தத்தம் மூர்த்தி மூர்த்தீஸ்வரரை அவ்வாறு பூஜித்தல் வேண்டும். பின் பூர்ணாகுதிக்கு உரியவாறு ஆயத்தம் செய்து ஆத்மதத்துவாதிபதியாகிய பிரம்மனுக்கு ஹோமம் செய்தல் வேண்டும். மந்திரத்தின் இறுதியில் வரும் ஸ்வாஹா என்பதில் ஸ்வா வை மட்டுமே உச்சரித்து சிருக்கில் சிறிது நெய் எஞ்சும்படியாக பூர்ணாகுதி செய்தல் வேண்டும். எஞ்சிய நெய் இருக்கும் சிருக்சுரவங்களுடன் சாந்தி கும்பத்தைப் பரிசாரகர் கொண்டுவர மூர்த்திபர்கள் பின்தொடர லிங்கத்தையடைந்து பின் எல்லோரும் தத்தம் தானங்களில் நின்று லிங்கத்தின் பிரம்மபாகத்தை தர்ப்பையினால் தொட்டு ஹோம சங்கியையளவு ஜபிப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியின் ஆத்மதத்துவத்தையும் அதிபரையும் பூஜித்து மீதியாக இருக்கும் நெய்யுடன் கூடிய சிருக்கு சுரவத்தை எடுத்து முன்கூறிய ஸ்வா வைவிட எஞ்சியிருக்கும் ஹா என்பதை உச்சரித்து அவ் எஞ்சிய நெய்யை பிரமகாதத்தில் ஆகுதி செய்தல் வேண்டும். இப்படியே விஷ்ணுபாகத்திற்கும் அதன்பின் ருத்ரபாகத்திற்கும் தனிதனி உரிய மந்திரங்களால் ஸ்பர்சாகுதி நிகழ்த்துதல் வேண்டும். சிவனுக்குரிய திரிகண்ட ஸ்பர்சாகுதியில் அஷ்டமூர்த்திகளின் விபரம் சிவலிங்க பிரதிஷ்டையில் உள்ளபடி தனி அட்டவணையாகத் தரப்படுகின்றது.(அட்டவணை 1)

பிரதிஷ்டையைப் போன்றே மகோற்சவ காலங்களிலும் த்வஜபிரதிஷ்டை (தம்ப) பலிபிட, அஸ்திரதேவர் பிரதிஷ்டை, விருஷப (கொடிச்சீலையில் வரைந்த) யாகம் எனப்படும் கிரியை மரபும் உண்டு. இங்கு கொடிச்சீலையில் வரைந்த ரிஷபம், மூஷிகம், மயூரம், சிம்மம் முதலான பசுக்கள் (ஆன்மாக்கள்) பசுந்தன்மை நீங்குதற்பொருட்டு ஸ்பர்சாகுதி செய்யப்படுகின்றது. இவற்றிற்கு அஷ்ட மூர்த்திகள் மூர்த்தீசர்கள் தனித்தனியேயுண்டு. (இவற்றின் அஷ்டமூர்த்தி விபரம் தனி அட்டவணையாக தரப்பட்டுள்ளது. அட்டவணை 2)

ஸ்பாசாகுதி கிரியை பற்றி அகோர சிவாச்சாரியார் பத்ததியில் அஜிதாகம அடிப்படையில் காணப்படகின்றது. ஸ்பர்சாகுதியின் விபரம் பற்றி அவர்,

ஸ்பரிசாகுதி த்ரிகண்ட நவகண்ட பேதேன
த்வீப்ரகாரஹ ப்ராயச்சித்தாதிவிஷயேசு த்ரிகண்ட
ஸ்பரிசாகுதிம் ப்ரதிஸ்டாதௌ நவகண்ட ஸ்பரிசாகுதிம் குர்யாத்
அந்நியதா க்ருதம்சேத் கர்த்தா போக்த விநஸ்யதி தத உத்தம் அஜிதே
ஸ்பரிசாகுதிஸ்து சம்புரோக்த திவிதா குருசதா
ப்ராயச்சித்தாதி விஷயே த்ரிகண்டம் வை சமாசரே
பிரதிஸ்டாதௌ குர்வீத நவகண்டாதி ஆகுதிம்
அந்நியதா யதிமோஹார்த்வா க்ருதம் சேத் கர்ம நிஷ்பலம்
ராஜ்ய நாசச்ச துர்பிட்சம் லோகோ உபத்ரவ காரணம்
கர்த்து போக்துச்ச நிதனம் யாயதே குரு புங்கவ
தஸ்மாத் சர்வ ப்ரயத்நேன உத்த மார்க்கேன காரயேத்
இதி உக்தவான் ப்ரதிஸ்டாதி பரதர்ம ப்ரயுக்த விசயேசு
நவகண்ட பரிசாகுதி ஏவ கர்த்தவ்யா

நவகண்டம் திரிகண்டம் என இரண்டுவித ஸ்பர்சாகுதி உண்டு. பிராயச்சித்த விடயங்களில் திரிகண்டமும் பிரதஷ்டாதிகளின் நவகண்டமும் செய்ய வேண்டும். மோகத்தால் இதற்கு விரோதமாகச் செய்தால் ராஜராஷ்டிநாசமும் அடையும் பலனும் இல்லாமல் போய்விடும். ஏனவே உத்தமமான நவகண்ட ஸ்பாசாகுதியே பிரதிஷ்டா காலங்களில் செய்யப்படல் வேண்டுமென அஜிதாகமம் கூற அதனைப் பின்பற்றி அகோரசிவாச்சாரியாரும் கூறுகின்றார்.

இவ்வாறாக பிரதிஷ்டா காலங்களில் யாக குண்டங்களிலும் மூர்த்தி கும்பங்களிலும் பூஜிக்கப்பட்ட இறைவனின் அஷ்ட மூர்த்திகளும் நவபேதங்களும் லிங்கத்தில் சாந்நித்யமாகும் பொருட்டு செய்யும் நவகுண்ட ஸ்பர்சாகுதிக்கு "லயாதிகார போகாங்க ஆவாஹணம்" என்ற அம்சமாக இவற்றின் அம்சமாக முக்கிய கிரியைகள் உண்டு. அவையாவன பிரசன்ன அபிடேகம், கடஸ்தாபனம், ஷடத்வநியாசம், கலாகர்ஷணம், அக்னிகார்யம், அக்னிவியஜனம், நவகண்டஸ்பர்சாகுதி லயாங்க ஆவாஹனம் யாக பூசைகள் பேரசலனம் (புதிய மூர்த்தியாயின் ஜலாதிவாசம் தான்யாதிவாசம், நயனோன்மீலனம், கிராம பிரதட்சணம், சயனாரோஹணம், நாமகரணம், ரத்னநியாசம்) யந்திரபிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், தைலாப்பியங்கள் பிம்பசுத்தி பிம்பரட்சாபந்தனம் மூர்த்திக்கு ஷடத்வநியாசம் நவகண்டஸ்பர்சாகுதி என இவையனைத்தும் ஒரு சமய தத்துவ சிந்தனைகளை உள்ளடக்கிய ஓர் உயரிய கிரியை அம்சமாகும். பிம்ப ஸ்தாபனத்தின் பின் ஸ்பர்சாகுதிக்கு முன் நிகழும் இக்கிரியை அம்சங்களை பூர்வ சந்தானம் எனவும் ஸ்பர்சாகுதிக் கிரியை பச்சிம சந்தானம் எனவும் அழைக்கப்படும். இன்னும் சில பத்ததிகள் தத்வசோதனம் எனவும் அழைப்பன.

இவற்றிற்கு முன்பாக அதாவது முதல்மூன்று பிரதிஷ்டைகளுக்கும் பாலாலயம் அவசியமாகும். பாலாலயத்தின் அவசியம் பற்றிக் காரணம், காமிகம், அஜிதம், சூஷ்மம், மகுடம், அம்சுமான் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களில் பாலாலயவிதி தனியாகக் கூறப்பட்டுள்ளது. அப்பர் பாடலில் காணப்படும் கோயில் வகைகளில் இளங்கோயில் எனப்படுவது பாலாலயமே என்றும் சில அறிஞர்கள் கருதுவர். காமிகாகமம் பாலாலயம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

அதவட்சியே விசேசேன பால கேஹஸ்ய லட்சணம்
பாலஸ்தானம் விநாவித்வான் மூலஸ்தானம் நகாரயேத்
பாலலிங்காதீனம் தூ மூலலிங்காதிகம் நஹி

பின்பு பாலஸ்தாபனம் விதி கூறுகின்றேன். வித்வானாவர் பாலஸ்தாபனமின்றி மூலஸ்தாபனம் செய்யலாகாது. பாலலிங்கம் முதலியவை குறைவுபடுமாயின் மூலலிங்கம் கிடையாது என்கிறது. இவ்வாறே ஏனைய ஆகமங்களும் பாலாலயம் இன்றி கும்பாபிஷேகம் செய்யலாகாது. என வகுப்பன புதிய லிங்கமாயினும் ஏற்கனவே பூஜித்த லிங்கமாயினும் பாலலிங்கம் அவசியம் இதே கருத்தை அசோரசிவாச்சார்ய பத்ததியும், வாமதேவ பத்ததியும் வலியுறுத்திக்கூறுகின்றன.

## கடஸ்தாபனம்

மூலலிங்கத்தின் முன் நெல், அரிசி, எள்ளு, பொரி நவதானியங்களால் தண்டிலம் செய்து தர்ப்பை பூ முதலியவற்றை உரிய மந்திரங்களுடன் படிப்படியாக பரவி அஷ்டதளத்துடன் தாமரை எழுதி பின் பொன் வெள்ளி பஞ்சலோகம் ஆகியவற்றில் ஒன்றால் அமைக்கப்பட்ட இடத்தினைச் சுத்தம் செய்து நூல் சுற்றி அதனுள் தூபங்காட்டி அதைக்கவிழ்த்து வைத்து பின் அதனை நிமிர்த்தி உள்ளே பவித்திரம் வைத்து நீர் நிறைத்து சந்தனம் முதலிய திரவ்யங்களை நிரப்பி அந்தச்கூர்ச்சம் வைத்து சுவர்ணத்திலான பிரதிமை நவரத்னம் மாந்தளிர் தேங்காய் முதலியவற்றைப் பொருத்திக் கும்பத்தை உருவாக்கிய பின் கும்பத்திற்குப் பட்டு பூணூல் வெளியே அலங்கரிக்கும் அலங்காரக்கூச்சம் சந்தனம் மாலை முதலியவற்றை சார்த்தி வர்த்தனீ கும்பத்தையும் அஷ்டலித்யேஸ்வர கும்பங்களையும் நிறைவுற உருவாக்குதல் வேண்டும். இவ்வாறு கும்பங்களை உருவாக்கும் போது தானியங்களைப் பரப்புவதிலிருந்து மாலையால் அலங்கரிக்கப்படும்வரை நிகழும் கிரியைகளுக்கு தனித்தனியாக மந்திரம் உண்டு. இக்கும்பத்தில் ஆவாஹணம் செய்யும் இறைவனுக்குக் குடமே மாமிசம், கும்பத்தில் நிறைந்துள்ள நீர் இரத்தம், கும்பத்தின்மேல் சுற்றப்பட்டிருக்கும் நூல் எழுபத்திரெண்டாயிரம் நாடிகள், கும்பத்திற்கு இடப்படும் மேலாடை தோல் தர்ப்பையால் அமைக்கப்பட்ட கூச்சம் கேசரம், மாவிலை ஜடை, மாதுளம்பழம் பற்கள், தேங்காய் சிரசு, ஆசார்யன் கூறும் மந்திரங்கள் பிராணன் எனக் கும்பலட்சணம் கூறப்படகின்றது.

## கலாகர்ஷணம்

கலாகர்ஷணம் செய்வதற்காக கும்பத்திலும் லிங்கத்திலும் ஷடத்துவநியாசம் செய்யவேண்டும். சிவபெருமானுக்கு ஷடத்வா அங்கமும் சிவபெருமான் அங்கியுமாகும் இந்த ஆறு அங்கங்களையும் பூஜித்தபின் அதிகாரங்க கலாகர்ஷணத்தின் பொருட்டு ஹோமத்தைச் செய்து கலாசங்கிரஹம் செய்தல் வேண்டும், ஷடத்வா எனும் ஆறு அத்வாக்கள் பரமேஸ்வரனாகிய இறைவனின் ஸ்தானத்தை அடையும் வழி என அஜிதாகமம் கூறும். இதில் வியாபகராயுள்ளவர் பரமேஸ்வரர் இந்த ஆறு அத்வாக்கள் சக்தியின் சொரூபம் பரமேஸ்வரர். சக்திக்கு அதீதர் சக்திக்கும் அத்தனுக்கும் பேதமில்லையால் அங்கமங்கி எனக்கூறப்படும்.

சக்தியினிடமிருந்து ஐந்துகலையும் கலைகளிலிருந்து தமதத்வங்களும், தத்துவங்களிலிருந்து (224) புவனங்களும், புவனத்திலிருந்து வர்ணமும், வர்ணத்திலிருந்து பதமும் (81) பதத்திலிருந்து மந்திரமும் (11) உண்டாயின. கலையின் தத்துவம் அடங்கியுள்ளதால் தத்வம் முதலிலும் மந்திரம் இறுதியுமாக ஒன்றிலொன்று அடங்கியிருந்து திரும்பப்பிரிந்து வந்ததாலின் இந்த ஷடத்வாக்களை பிம்ப கும்பங்களுக்குச் செய்யவேண்டும். இந்த ஷடத்வா செய்யாது ஆவாஹணம் செய்யலாகாது. கலாநி-யாசத்தால்சர்வஞ்ஞ சித்தியும், தத்வநியாசத்தால் நித்யதிருப்தி தத்தவமும், புலனநியாசத்தால் அனாதி போதததத்வமும், வர்ணநியாசத்தால் ஸ்வாந்திரத்துவமும், பதநியாசத்தால் அலுப்தசக்தித்வமும், மந்திர நியாசத்தால் அனந்தசக்தித்துவமும் சிந்திக்கப்பெறுமென காமிகம், அஜிதம் கூறுகின்றது. கலாகர்ஷணம் சைவம் சாக்தம் என இருபிரிவுகளையுடையது. தூதிகா நியாசமும் பிராணபிரதிஷடையும் ஜடத்துவபாவமுடையது. ஆதலால் சித்ஸ்வருபமான சிவனுக்கு செய்யலாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்களில் அறுபத்திநான்கு கலைகள் கூறியிருப்பதால் இவை அகார உகார மகார பிந்து நாதம் எனும் ஐந்து கலைகளாகும். அகாரகலையில் பத்துக் கலையும் உகார கலையில் பதினாறு கலைகளும் மகார கலையில் இருபத்தினான்கு கலைகளும் பிந்துவில் நான்கு கலைகளும் நாதத்தில் பத்துக் கலைகளும் ஆக அறுபத்தினான்கு கலைகள் இருக்கின்றன. அகார கலை பிரம்மபாகத்தினின்றும் உகார கலை விஷ்ணு பாகத்தினின்றும் மகாரகலை ஆவுடையாருக்கு மேலுள்ள ருத்ரபாகமாகும். இந்த ருத்ரபாகத்தை ஏழாகப் பங்கிட்டு மகார ருத்ரபாகம் இதன்மேல் பிந்துகலை என மூன்று பாகங்களில் ருத்ர, மகேஸ்வர, சதாசிவ, சதாசிவாதிகளையும் கற்பித்து இதற்கு மேல் நான்கு பாகங்களும் கலாதீதமாய்க் கொள்ளப்படும். இந்த நான்கு பாகங்களும் ஆவாஹணத்தால் சாந்நித்யம் அடையத்தக்கவைகள் இதே கருத்தை திருமூலரும்,

"விந்துவும் நாதமும் மேவு லிங்கமாம்
விந்துவ தேபீட நாத மிலிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாம்
வந்த கருவைத்துஞ் செய்யும் மனையைந்தே"

சிவபெருமான் ஒன்பது பேதமான அங்கமுடையவர். இவை பிரம்ம விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரர், சதாசிவம், பிந்து, நாதம், சக்தி, சிவம் என்னுமாம்,

சிவஸ்ய நவதா மூர்த்தி பாவ்யதே குருசத்தமம்
ப்ரும்மா வஷ்ணுச்ய ருத்யத்ய ஈஸ்வரச்ச சதாசிவ
பிந்து நாதஸ்ய சத்திச்ச சிவச்ச இதி ப்ர கீர்திதா
ஏஸா நவவிதா மூர்த்தி ஸ்துரா போகாதிகை ததா
ப்ரும்மா விஷ்ணுச்ச ருத்யத்ச போஹாங்க த்வேன கீர்த்திதா
அதிகார அங்க காவேதெள மகேஸ்வர சதாசிவெள
பிந்து நாதஹ சக்தி சிவெள லயாங்கத்வேன கீர்த்திதெள

பிரம்மா விஷ்ணு ருத்ரர் இம்மூவரும் போகாங்கசரீரம் உடையவர்கள். மகேஸ்வரர் சதாசிவர் இருவரும் அதிகாரங்களுடையவர்கள். பிந்து நாதம், சக்தி, சிவம் இந்நான்கும் லயாங்கங்களாகும். கும்பத்தில் போகாங்கலயாங்கத்தையும் அக்னியின் அதிகாரங்கத்தையும் கற்பித்தல் வேண்டும். அதிகாரங்கம் மூர்த்திபேதமெனவும் அக்னி கார்யபேதம் எனவும் இரண்டு பேதமாகும். மகேசர், சதாசிவர், மூர்த்தி பேதமும் ௰த்வம், தத்வேசர், தத்வேசி, மூர்த்தி, மூர்த்தீசர், மூர்த்தீசி என்ற ஆறும் அக்னி கார்ய பேதமாகும். கலாகர்ஷணம் இரவு 15 நாளிகையில் செய்வது உத்தமம் 10 நாழிகையில் செய்வது மத்திமம், ஐந்து நாழிகையில் செய்வது அதமம். மத்தியானத்திலும் இரவு 15 நாளிகைக்குப் பின் இராத்திரியிலும் செய்யக்கூடாது. இது போகாங்க கலாகர்ஷணம் ஆகும்.

போகாங்க கலாகர்ஷணம் செய்தவுடன் மறுபக்கம் நிவேதனம் செய்யவேண்டும். கலாகர்ஷணம் முதல் கும்பாபிஷேகம் இறுதியாக ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று இவ்வாறான ஒற்றைப்பட்ட நாள்கையாயிருத்தல் வேண்டும். இனி அதிகாரங்க கலாகர்'ணத்தின் பொருட்டு அக்னிகார்யம் செய்யவேண்டும்.

## அக்னிகார்யம்

அக்னிகார்யம் இரண்டு விதம். ஆவை தேவதாபாவமில்லாத ஜாடராக்கினி ரூபமுடையது வைசுவாநராக்னி ஆகும். தேவமாத்மக பாவமுடையது சிவாக்னி. சிவாக்னி சிவரூபமுடையதால் இது ஞானயாகம் ஆகும். ஆசார்யன் குண்டத்தின் யோனிப்பிரதேசத்தில் அபிமுகமாய் ஆசனத்திலமர்ந்து சாமான்யார்க்கியம் கூட்டி அந்தஜாலத்தால் ஆத்மாவையும் ஹோமந்திரவியங்களையும் புரோகித்து விபூதிதாரணம் சகளீகரணம் செய்து சுத்தபுண்ணியாகவாச ஜலத்தால புரோகித்து விஷேசார்க்கியம், பாத்யம், ஆசமனீயம் சேகரித்து ஹோமத்திற்கு உபகரணமாயுள்ள சகல திரவியங்களையும் திவ்யசிருஷ்டியால் பார்த்துப் பின் குண்டத்திற்கு பதினெட்டு சமஸ்காரங்களை செய்து குண்டத்தின் நடுவே அக்னியின் தாய் தாந்தையராக வாகீசரரையும் வாகீசியையும் பூஜித்து சூரியன் அல்லது அரணி அல்லது ஆதிசைவ பிராமணன் வீட்டிலிருந்து ஏதாவது ஒன்றின் மூலம் பெறப்பட்ட அக்னியை ஸ்வீகரிக்கவேண்டும். பின் ஸம்ஹார முத்திரையால் அக்னியை (பாவனையால்) ஆசாரியர் சுவீகரித்து பூரகத்தால் நாபி ஹிருதயம் புருவநடு ஆகிய இடங்களில் உள்ள பூதாக்னி நாபிஅக்னி பிந்துஅக்னியுடன் சேர்த்து ரேசகத்தால் எடுத்து பாத்திரத்திலுள்ள அக்னியுடன் சேர்த்து ஸமஸ்காரங்கள் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வாகீசர் மூலமாக வாகீசியின் கர்ப்பத்தில் அக்னியைச் சேர்த்து அக்னிக்கு கர்ப்பதானம் 3ம் மாதம் பும்ஸ்வனம், 6ம் மாதம் சீமந்தம், 9ம் மாதம் சித்ஸ்வரூபம், உண்டாகும் வண்ணம் செய்து 10ம் மாதம் ஜனனம் காதகர்மம் நாமகரணம் செய்தல் வேண்டும். பின் பாலாக்னியை பூஜித்து அக்னியின் ரட்சைபொருட்டு ஐந்து ஆவரணங்களை பூஜிக்க வேண்டும். அக்னி முதலாம் ஆவரணம், மேல் மேகலையிலுள்ள விஷடத்தில் 2ம் ஆவரணமாக அஷ்டவித்யேஸ்வரர்களையும் 3ம் ஆவரணமாக நடுமேகலையிலுள்ள பரிதியில் நந்தி முதலிய எண்மரையும், 4ம் ஆவரணமாக கீழ்மேகலையிலுள்ள கூர்ச்சங்களில் இந்திராதிதேவர்களையும், 5ம் ஆவரணமாக பரிஸ்தரங்களின் வஜ்சிராதிகளையும் பூஜிக்க வேண்டும் (இதன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது)

இதன்பின் சிருக்கிருவ சமஸ்காரம் செய்து சிருக்கைசக்தியாகவும் சிருவத்தை சக்தி யாகவும் பூஜக்க வேண்டும் (இதன் படம் 2) அடுத்து நெய் சமஸ்காரம் நிரீட்சணம் முதலாகச் செய்து அமிர்தமயமாய் பாவித்து அதற்கு அதிபதியாக பிந்துவைப் பூஜிக்க வேண்டும். பின் அக்னிக்கு வக்தரம் (முகம்) வக்த்ரானுசந்தானம் வக்ரவிதானம் என இவை ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்பவையாகும். இவ் ஜிஹ்வா (நாக்கு) ஜிஹ்வானுசந்தானம் செய்து அன்னப்பிராசனம், உபநயனம், சமாவர்த்தனம், விவாஹம், வரையுள்ள கிரியைகளை செய்து விருத்த சிவாக்னியை ஆவாஹித்தல் வேண்டும்.

விருத்தாக்னியின் இருதய பங்கஜத்தில் சிவபெருமானை ஆசனமூர்த்தி மூலத்தால் பூஜித்து ஆவரணங்களையும் கிரமமாகப்பூஜித்து அக்னியாகிய நீ ஈஸ்வர தேஜஸ் பரிசுத்தமான மிக மேலானது. இதனால் உனது ஹிருதய பங்கஜத்தில் சிவபெருமானை ஆவாஹிக்கிறேன் என தியானிக்க வேண்டும்.

சிவனுக்கு வியாப்பிய வியாபக ஹோதுவாகவுள்ள பிருதுவி முதல் யஜ்மானி இறுதியாக உள்ள எட்டு அங்கங்களாகும். சதுர குண்டப்பிருதுவியும் அர்த்தசந்திரன் அப்புவும் (ஜலம்) திரிகோண அக்னியும் ஷட்கோணம் வாயுவும், விருத்தம் ஆகாசமும், பத்மம் சூரியனும், எண்கோணம் சந்திரனும், யோனி யஜமானனும் ஆக எட்டுக்குண்டங்களும் எண்வகை சரீரங்களாகும். இவ்விதம் குண்டங்கள் 9,17,25,33 என விரியும். பிருதிவிமுதல் எட்டுக்குண்டங்களும் சிவாக்னி அங்கபூதமாயுள்ளது. உன்மனாந்தத்திலுள்ள சிவன் வரூப சிவாக்னி அங்கி எனக்கூறப்படும். இந்த சிவாக்னி ஒன்பது பேதமாகும்.

நடுவில் விருத்தாக்னியும் கிழக்கில் ஆஹவநீயாக்னி, தெற்கில் தட்சனாக்னி, வடக்கில் கேவலாக்னி, மேற்கில் கார்ஹபத்யாக்னி, தென்கிழக்கில் விருத்தாக்னி, வடகிழக்கில் சாமான்னியாக்னி, தென்மேற்கில் யௌவனாக்னி, வடமேற்கில் பாலாக்னி என பூஜிக்கப்படும்.

இனி மூர்த்திபர்கள் தத்தம் குண்டங்களில் 18 வித ஸம்காரங்களை செய்வர். பிரதான சிவாச்சாரியர் நவாக்னி விபாகத்தின் பொருட்டு பஞ்சபிரம்ம, ஷடங்க வித்யாதேக நேத்திர மூல மந்திரங்களை பூஜித்து விருத்த சிவாக்னியின் கிழக்கே ஆஹவநீயாக்னி பிருதுவிதத்வம் அதிபதிபவன், தத்வேசிவானம், ஷ்மாமூர்த்தி, அதிபதி, தத்புருஷன், மூர்த்தீசி, தாரிகா என நாமோந்தமாக பூஜித்து சராவ பாத்திரத்தில் (பறவை போன்ற வடிவில்) அவ்வக்னியை எடுக்க மூர்த்திபர் எழுந்துவந்து ஆசார்யனிடம் அதனைப் பெற்று கிழக்குக் குண்டத்தில் ஸ்தாபித்து மூர்த்திபர் ஆகுதி செய்ய வேண்டும். இவ்வாறே தெற்கு வடக்கு, மேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு என்ற ஒழுங்கில் விபஜனம் செய்ய வேண்டும். (இவ்விபரம் அட்டவணைக்கிரமமாக தரப்பட்டுள்ளது 3) இதன்பின் நவகண்டஸ்பர்சாகுதி செய்யவேண்டும்.

## நவகண்ட ஸ்பாசாகுதி

ஆச்சார்யர்களும் மூர்த்திபர்களும் சிருக்கை சிரவத்தால் மூடி, பிம்பசம்பத்தை அடைந்து பிம்பத்தை சுற்றிலும் மூர்த்தி கும்பங்களை வைத்து அக்னியிலும் அதிகாராங்க மூர்த்தியை கிருஹித்தல் வேண்டும். முதலில் பிம்பத்தில் அந்தஸ்தானத்திலுள்ள தத்வம், தத்வேஸ்வரர், தத்வேஸ்வரி, மூர்த்தி, மூர்த்தீஸ்வரர், மூர்த்தீஸ்வரி இவர்களைப் பூஜித்து மூர்த்தி கும்பத்தில் சம்யோசித்து ஆசார்யர் பரிசாரகர் சிரசில் கும்பத்தை வைத்து யாகசாலையில் அந்தந்த குண்டத்தின் பக்கத்தில் சுற்ற மாயாபதத்திலுள்ள வேதிகையின் மேல் வைத்து அந்தந்தக் குண்டங்களில் இந்த மந்திரத்திரங்களினால் ஸ்வாஹாந்தமாக நெய்யால் ஹோமஞ் செய்வது நவகண்ட ஸ்பர்சாகுதி. இவ்வாறே லிங்கத்தினுடைய ஒன்பது பேதங்களில் பிரம்மா, வி'ணு, உருத்திரன், மகேஸ்வரர், சதாசிவர், நாதம், பிந்து, சந்து, சிவம் என்ற ஒழுங்கில் கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, மேற்கு, வடக்கு, வடமேற்கு, தென்கிழக்கு என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருதுவி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், சூர்யன், சந்திரன், ஆன்மா என நாடிசந்தானம் வழியாக மூர்த்திகும்பத்தில் அக்னியிலும் ஆவாஹணம் செய்யவேண்டும்.

பிருதுவி முதல் எண்வகை சரீரம் ஆனதால் எண்வகை குண்டத்திலும் கலந்து நின்று பிரதான குண்டத்தில் தோன்றியபடியே ஒழுங்கு மாறாமல் பிரதான மூர்த்தி கும்பத்தை கடைசியிலேயே கலாகர்ஷணமும் ஸம்யோஜனமும் செய்யவேண்டும். இனி லயாங்க ஆவாஹணம்.

## லயாங்க ஆவாஹணம்

ஆச்சார்யர் மூர்த்திபர்களோடு பிம்ப சமீபத்தையடைந்து பிரதானகும்பத்தை ஆவாஹித்து கும்பத்தின் அடிப்பாகம் முதல் சிரசு வரை ஒன்பதாகப் பிரித்து நாத தத்வம் வரை தத்வமும், தத்வாதிபதிகளையும், பூஜித்து பிம்பத்திலிருந்து கும்பத்தில் ஆவாஹித்து பிம்பம், கும்பம், ஆசார்யன், இம்மூன்றுபேர்களைப் பட்டினால் மூடி ஈசனாதி பஞ்சபிரம்ம வித்யாதேஹ, நேத்திரஹிருதய, சிரசு, சிகை, கவச அஸ்திரம் வரை பூஜித்து ஆவாஹித்து இதற்கு மேல் சக்தி தத்வம், அதிபதி, சக்திமதி, இச்சை, ஞானம், கிரியா, ஆதிசக்தி, பராசக்தி, கலைகள், சாதாக்கிய பஞ்சகம், பூஜித்து ஆவாஹித்து பும்ஸ்தத்வம் அதிபதி சிவம் எனப் பூஜித்து சிவபிரானை லிங்கத்திலிருந்து கும்பத்திற்கும் ஆவாஹிக்க வேண்டும்.

(தியானம்) சகளம் நிஷ்கம் இவற்றால் சகளநிஷ்கள ரூபமான சிவபெருமான் சரீரம் மூன்று பிரிவினதால் சகளம் பிரம்ம விஷ்ணு ருத்ர திருமூர்த்திகளுக்கும், சதாசிவர் மகேசர் சகள நிஷகள வடிவமாயும் பிந்து நாதம் சக்தி சிவம் இந்நான்கும் நிஷ்களவடிவமாய் மூன்று பேதமுடையது. இவற்றுள் சாங்கம், உபாங்கம், பிரத்யங்கம், என மூன்று பிரிவினதாகும். பிரத்தியங்கம் சகளமூர்த்தியும் உபாங்கம் சகள நிஷ்கள மூர்த்தியும், சாங்கம் பிந்து முதல் சிவபர்யந்தமான மூர்த்திகளாகும். இவ்வாறான சிவபெருமான் சர்வஞ்யத்துவம், நித்தியதிருப்தித்வம், அனாதிபோததத்வம், ஸ்வதந்திரத்வம், அலுப்தசக்திதத்வம், அனந்தசக்தித்வம் இடவாறுள்ள ஆறு குண்டங்களாகிய சக்திகளால் நிறையப் பெற்றதாய் பிந்துமதியில் நாதமும், நாத மத்தியில் மூர்த்தியும், மூர்த்தி மத்தியில் தத்வமும், தத்வமத்தியில் சிவபெருமான் பிரமேயமற்றவராய் சாதிருஷ்யரஹிதராய் நிர்மலராய் நித்யசுத்தராய் நிஷ்கிரியாக நிஷ்களராய் சாந்தராய் அதிசூக்குமத்திற்கெல்லாம் அதிசூக்குமராய் உள்ள சிவபெருமானை புஷ்பாஞ்சலியாய் பிம்பத்திலிருந்து கும்பத்திற்கு எழுந்தருளச்செய்யும் ஆவாஹணமே லயாங்க ஆவாஹணம்.

பின் கும்பம் யாகசாலைப் பிரவேசம், யாகபூஜைகள், பேரசலனம், யந்திரபிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், தைலாப்பியங்கம், செய்து பிம்பசுத்தி செய்யவேண்டும். இதன்பின் மீளவும் யாகசாலையில் அக்னியிலும் குண்டங்களிலும் ஆவாஹிக்கப்பட்ட சிவனின் மூர்த்திபேதங்களை வர்ணம் (தங்கம்) வெள்ளி, தர்ப்பை, பட்டுநூல், முதலான நாடிசந்தானத்தின் துணையுடன் பூர்ணாகுதி செய்து சிருவத்தில் எஞ்சிய நெய்யுடன் மூர்த்தி கும்பத்துடன் பிம்பத்தையடைந்து அந்தந்தப் பாகத்தில் அபிஷேகித்து சாந்நித்யம் ஆகும்வண்ணம் செய்தலே நவகண்ட ஸ்பர்சாகுதியாகும்.

சிவபெருமானுக்கே பும்ஸ்தத்வம் வரை பூஜிக்கலாம். மற்றத்தேவதைகளுக்கு அந்தந்த தத்வம் வரை தான் பூஜிக்கவேண்டும். விநாயகர் சிவாலயங்களிலுள்ள சக்தி, சுப்ரமணியர் ஆகிய மூர்த்திகளுக்கே நவகண்ட ஸ்பர்சாகுதி செய்யலாம். சிவனுக்கு பஞ்சசாதாக்கியம் உள்ளது போல் விநாயகருக்கும் முருகனுக்கும் ஆறுசதாக்கியம் உள்ளதால் இந்நான்கு மூர்த்திகளுக்கு மட்டுமே பும்ஸ்தத்வம் வரை பூஜிக்கலாம். விநாயகர், சிவன், அம்பிகை, முருகன் ஆகிய மூர்த்திகளின் மூர்த்திவிபரம் அட்டவணையாகத் தரப்பட்டள்ளது. சிவனைப்போன்று விநாயகர் சுப்ரமணியர் அம்பிகை முதலிய மூர்த்திகட்கு உரிய நவகண்ட ஸ்பர்சாகுதி மூர்த்தி, மூர்த்தீஸ்வரர் தனி அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (அட்டவணை 4)

### அடிக்குறிப்பு

01. பெரியபுராணம், 25 : 50
02. சித்தாந்தசாராவளி, சரியாபாதம், 18
03. அகோரசிவாச்சார்யார் பத்ததி, நவகண்டஸ்பர்சாகுதி, பக்கம் 329
04. காமிகாகமம் பூர்வபக்கம், பாலஸ்தாபனவிதி, 1 -- 3
05. திருமந்திரம், 7 : 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மேற்கு விருத்த குண்டம் கார்ஹபத் யாக்னி | ச்ரோத்ரதத்வம் | வ்யோமசரன் | ஆகாசதத்வன் அதிபதி உருத்திரன் | கலவிகரணி | ஆகாசமூர்த்தி அதிபதி சத்யோஜாதன் | சேதனா |
| வடக்கு பத்மகுண்டம் கேலாக்னி | மநஸ்தத்வம் அஹங்கார தத்வம் குணதத்வம் | சங்கல்பன் அகங்கிருதி புத்தி | கலாதத்வம் அதிபதி உக்கிரன் | பலவிகரணி | அர்க்கமூர்த்தி அதிபதிவாம தேவன் | ப[illegible]ோத்கடா |
| வடகிழக்கு அஷ்டகோணம் சாமாந்யாக்னி | ப்ரகிருதித்தவம் | ப்ரதானகன் | காலதத்வம் அதிபதி பீமன் | பலப்ரதமனி | [illegible]மூர்த்தி அதிபதிசிரசு | தாத்ரீ |
| தென்கிழக்கு யோனிகுண்டம் விருத்தாக்னி | புருஷதத்வம் ராகதத்வம் வித்யதத்வம் நியதிதத்வம் | ஏக்கும தேவன் காமதன் வேதவி[illegible]ானன் நியாமகன் | மாயாதத்வம் அதிபதி மஹாதேவன் | சர்வபூததமனி | யஜமான மூர்த்தி அதிபதி ஹிருதயம் | விபவீ |
| பிரதானகுண்டம் | சாந்தியதீத கலை வித்யா கலை பிரதிஷ்டா கலை நிவிருத்திகலை | சக்திதத்வம் சதாசிவதத்வம் சிவதத்வம் | சக்திமதி சதாசிவன் மகாதேவன் | மனோன்மனி | ஈசானமூர்த்தி வித்யாதேஹம் நேத்ரம் [illegible]ிரம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகோரசிவாச்சாரியர் பத்ததி கிரமப்படி நவகுண்ட ஸ்பர்சாகுதி அட்டவணை - 03

## மூர்த்திகள் விபரம் (அதிகாகமம்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரதானம் விருத்த<br>குண்டம் விருத்த<br>சிவாக்னி | | | | | | |
| கிழக்கு சதுரகுண்டம்<br>ஆஹவநீயாக்னி | பிருதிவி<br>ஜலதத்வம்<br>அக்னிதத்வம்<br>வாயு<br>வ்யோம<br>(ஆகாசம்)<br>கந்ததத்வம் | பிரதானகன்<br>ஜலேசன்<br>தீவிஉஷாக்ருதி<br>மாதரிச்வன்<br>விருபாக்ஷன்<br>கந்தாங்கன் | ப்ருதிவிதத்வம்<br>அதிபதிபவன் | வாமை | சூக்ஷ்மமூர்த்தி<br>அதிபதிதத்புருஷன் | தாரிகா |
| தெற்குகுண்டம்<br>தக்ஷிணாக்னி<br>அர்த்தசந்திரம் | ஜலதத்வம்<br>ரூபதத்வம்<br>ஸ்பர்சதத்வம்<br>சப்ததத்வம் | ஜலேசன்<br>பாவமதி<br>பலேக்திரன்<br>ஏக்ஷமநாதன் | ஜலதத்வம்<br>அதிபதிசர்வன் | ஜேஷ்டா | ஜலமூர்த்தி<br>அதிபதிஅகோரம் | தீபிகா |
| தென்மேற்கு<br>குண்டம்<br>திரிகோணம்<br>யௌவனாக்னி | உபஸ்ததத்வம்<br>பாயுதத்வம்<br>பாததத்வம்<br>வாயுதத்வம் | கஜேந்திரன்<br>கண்டக்ருதி<br>ரமணன்<br>விரூபாக்ருதி | நேத்ரதத்வம்<br>அதிபதி<br>ஈசானன் | ரௌத்ரீ | நேத்ரதத்வம்<br>அதிபதி<br>சிகா | உக்ரா |
| வடமேற்கு<br>உஷட்கோணம்<br>பாவாக்னி | பாணிதத்வம்<br>வாக்தத்வம்<br>நாசிதத்வம்<br>ஜிக்வாதத்வம்<br>சக்ஷுதத்வம்<br>த்வக்தத்வம் | சாமநாதன்<br>த்ரம்பன்<br>விலம்பகன்<br>மகாவக்தரன்<br>பிரகாசன்<br>சர்வாங்கன் | வாயுதத்வம்<br>அதிபதி<br>பசுபதி | காளி | வாயுமூர்த்தி<br>அதிபதி<br>கவசன் | ஜ்யோதிர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ காலங்களில் மூஷிகம், விருஷபம், மயூரம், சிம்மம், ஆகிய மூர்த்திகளில் அஷ்டமூர்த்திகளும் அதிபர்களும்

| | ப்ருதவி | அக்னி | யஜமானன் | அர்க்கன் | ஜலம் | வாயு | இந்து | ஆகாசம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மூஷிகம் | வேகன் பாதம் | ீருவ க்தராம் | உர்த்வ ரன் | மகோத தா'ன் விருத் ந்தன் | வக்ரத | ஆகு | தூம்ராபன் | |
| மயூரம் | புஜங்க புஜன் | சிகி | நீலகண்டன் | பர்ஹன் | கணப்ரி யன் | பிஞ்சன் | கலாபின் | கெசின் |
| விருஷபம் | உ'ன் | கோபதி | சங்கு கண்ணன் | தீ'ண கிருங்கன் | நந்தி | பசுபதி | தர்மன் | மகோதரன் |
| சிம்மம் | மிருகேந்தி ரன் | கேஸரின் | சஞ்சாஸ் யன் | கண்டீ ரவன் | ஹரன் | ஹரன் | தம்'ரன் | ஜமாதரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செ | ஶிவாங்கி: | ஸ்வாஹா ஸ்வதா | ஸத்ய ஶிவ: | | ஸோமநாத நக்ஷத்ரம் கஷ்டம் உதயம் | வைஷ்ணவம் நிவாரம் நிஷாவம் | பயோதம் | ஸர்வஸித்தி: |
| ஷ | ஶ்ரீஹவநீயாங்கி: | காஷிநீ | க்ஷாரஉதகி: | ஶவம்: | தத்வநாதம் ஶிவாஸ்த்ரம் | ஹோமபத்ரம் | ஶமீ | ஸ்வஸ்திக |
| ரம் | வ்யோமாங்கி: | காஷிநீ | வஹ்நிஉதகி: | வருணகி: | ஹ்ருதயம் ப்ரத்யம் ஶிராஸ்த்ரம் | ஸ்வஷ்டம் | வடம் | ப்ரஜாவ்ய |
| | ஶக்தீஶாங்கி: | மோஹிதா | யஜமாநஉதகி: | உக்ர: | கமோரம் கமோராஸ்த்ரம் | திலம் | வாமிரம் | ஜயம் |
| த்வாரம் | யாவநாங்கி: | ஜ்வாலா | ககஉதகி: | ரக்ஷ: | ஶிவா ஶிவஶாயகீ | ஶாலீ | வக்ஷம் | ஶாந்தி: |
| | மாஹேஶ்வதாங்கி: | பஞ்சவர்ணா | ஜலஉதகி: | ஹவ: | ஸதேவராஜாஸ்த்ரம் வேதாஸ்த்ரம் | உதும் | கஶ்யம் | வஸித்தி: |
| | பாஶாங்கி: | லம்பஜிஹ்வா | வாயுஉதகி: | ஸோமநாத: | கவசம் ஶிவவஸாவிகீ | முண்டகம் | உதும்பரம் | ஸஸ்யவ்ய |
| | கேவலாங்கி: | விஶ்வஜித் | இந்த்ரஉதகி: | உஹாதேவ: | வாஉதேவம் வாமதேவாஸ்த்ரம் | ஶ்ருங்கம் | பில்வம் | யநவ்ருத் |
| ந | லோகநாதாங்கி: | காஷிநீ | க்ருதாஉதகி: | ஹீஜ: | ஶிர: க்ஷிரிகாஸ்த்ரம் | ஶாஷம் | ககம் | ஜாநக்தி: |

கரணஹவ்யு ।

வதார ப்ராக்ருதிவிஷயே: ஸவகஉதயஸ்யாய நட்டு । ப்ரஜாவ்ருத்திகரம் யோதிரயவஹ்நா ஶிவக்ஷயம் ॥

மணாப்ரம் ஶாந்திகம் வெராக்யவஜநாயஞவதமேட்டு । ஷட்ப்ரம் ஸாமநாஶாயம் ஜயாயம் வெவ வம்கஜு ॥

வஸ்ப்ரம் வஷிகம் ஜ்யேஷ்டம் ஷட்ப்ரம் ஸஸ்யவ்யநட்டு । இந்த்ரஸோமநாதபோதவ்ய ஸவஸித்திப்ரதா ஹவேத் ॥

## விக்னேஸ்வர நவகுண்டம்

| குண்டம் | | அக்னி | தத்துவம் | தத்வேஸ்வரர் |
|---|---|---|---|---|
| கிழக்கு | சதுரம் | ஆஹவநீயம் | பிருதுவிகுமுதம் | |
| தெற்கு | □ | தீணம் | ஜல | குமுதா'ன் |
| வடக்கு | □ | கேவலாக்னி | கலா | ஹரப்பிரியன் |
| மேற்கு | □ | கார்ஹபத்தியம் | ஆகாசம் | தாரகேசன் |
| தென்கிழக்கு | பத்மம் | விருத்தம் | மாயா | பிசாசாங்கா |
| ஈசானம் | □ | சாமானியம் | கால | சீதனன் |
| நிருதி | □ | யௌவனாக்னி | தேயஸ் | குமுதாசன் |
| வாயு | □ | பாலாக்னி | வாயு | அமிருதேசன் |
| பிரதானம் | விருத்தம் | விருத்தம் | சிவ | சிவபுத்ரன் |

| தத்வேஸ்வரி | மூர்த்தி | மூர்த்தீஸ்வரர் | மூர்த்தீஸ்வரி |
|---|---|---|---|
| திவ்ரா | "மாமூர்த்தி | ஆமோகன் | மாலினீ |
| நந்தா | ஜலமூர்த்தி | அவிக்னன் | வசிநீ |
| தேஜோவதி | அர்க்கமூர்த்தி | தூர்முகன் | சித்தினீ |
| காமரூபிணி | வியோமமூர்த்தி | பஞ்சகஸ்தா | வாதினீ |
| ஜுவாலினி | யஜமானமூர்த்தி | சுமுகன் | லேகினீ |
| சக்தி | இந்துமூர்த்தி | பீயாஹிநெ | காமினீ |
| மோக்தா | வன்னிமூர்த்தி | ப்ரமோதன் | ஹ்ரீயை |
| உக்ரா | வாயுமூர்த்தி | விக்னகர்த்ரே | மோகினீ |
| விக்னநாசினி | சிதாகாசமூர்த்தி | விக்னேஸ்வராயவல்லபை | |

திக்குகளில் சதுரமும் விதிகளில் பத்மமும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் நவகுண்டம்

| குண்டம் | அக்னி | தத்துவம் | தத்வேஸ்வரி |
|---|---|---|---|
| கிழக்கு சதுரம் | ஆஹவநீயம் | பிருதிவி | பவன் |
| தெற்கு அர்த்த சந்திரம் | தீணம் | ஜலத்தத்துவம் | சர்வன் |
| வடக்கு பத்மம் | கேவலாக்னி | கலா | உக்ரன் |
| மேற்கு விருத்தம் | கார்ஹபத்தியம் | ஆகாசம் | ருத்திரன் |
| தென்கிழக்கு யோனி | விருத்தம் | மாயா | மஹாதேதேவன் |
| ஈசானம் எண்கோணம் | சாமானியம் | கால | பீமன் |
| நிருதி திருகோணம் | யௌவனாக்னி | தேஜஸ் | ஈசானன் |
| வாயு அறுகோணம் | பாலாக்னி | வாயு | பசுபதி |
| பிரதானம் விருத்தம் | விருத்தம் | சிவதத்தவம் | மஹாதேவன் |

| தத்வேஸ்வரி | மூர்த்தி | மூர்த்தீஸ்வரர் | மூர்த்தீஸ்வரி |
|---|---|---|---|
| வாமா | "மாமூர்த்தி | ஆதிசக்தி | தாரிகா |
| ஜேஷ்டா | ஜலமூர்த்தி | இச்சாசக்தி | தீபிகா |
| பலவிகரணி | அர்க்க | ஞானசக்தி | பலோத்கடா |
| கலவிகரணி | வியோம | கிரியாசக்தி | ஜயோத்சகா |
| சாவபூததமனி | யஜமான | ஹருதயசக்தி | விபவி |
| பலப்ரமதனி | இந்து | சிரசுசக்தி | தாத்ரி |
| ரௌத்ரி | வன்னி | சிகாசக்தி | உக்ரா |
| காளி | வாயு | கவசம்சக்தி | சேதனா |
| மனோன்மணி | சிதாகாசமூர்த்தி | பராசக்தி | விபவி |

இது ஸ்வாந்திர சக்திக்கே மிஸ்ர சக்திக்கு திக்குகளில் யோனிகுண்டமும் விதிக்குகளில் பத்மகுண்டமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபெருமான் நவகுண்டம்

| குண்டம் | அக்னி | தத்துவம் | தத்வேஸ்வரி |
|---|---|---|---|
| கிழக்கு சதுரம் | ஆஹவநீயம் | பிருதிவி | பவன் |
| தெற்கு அர்த்த சந்திரம் | தீணம் | ஜலத்தத்துவம் | சர்வன் |
| வடக்கு பத்மம் | கேவலாக்னி | கலா | உக்ரன் |
| மேற்கு விருத்தம் | கார்ஹபத்தியம் | ஆகாசம் | ருத்திரன் |
| தென்கிழக்கு யோனி | விருத்தம் | மாயா | மஹாதேதேவன் |
| ஈசானம் எண்கோணம் | சாமானியம் | கால | பீமன் |
| நிருதி திருகோணம் | யௌவனாக்னி | தேஜஸ் | ஈசானன் |
| வாயு அறுகோணம் | பாலாக்னி | வாயு | பசுபதி |
| பிரதானம் விருத்தம் | விருத்தம் | சிவதத்தவம் | மஹாதேவன் |

| தத்வேஸ்வரி | மூர்த்தி | மூர்த்தீஸ்வரர் | மூர்த்தீஸ்வரி |
|---|---|---|---|
| வாமா | ''மாமூர்த்தி | தத்புரு'ஹருதயம் | தாரிகா |
| ஜே'டா | ஜலமூர்த்தி | அகோரஹருதயம் | தீபிகா |
| பலவிகரணி | அர்க்க | வாமதேவகுஹயம் | பலோத்கடா |
| கலவிகரணி | வியோம | சத்யோஜாதம் | ஜயோத்சகா |
| சாவபூததமனி | யஜமான | ஹருதயம் | விபவி |
| பலப்ரமதனி | இந்து | சிரசு | தாத்ரி |
| ரௌத்ரி | வன்னி | சிகா | உக்ரா |
| காளி | வாயு | கவசம் | சேதனா |
| மனோன்மணி | சிதாகாசமூர்த்தி | ஈசானமூர்த்தி | விபவி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்ரமணியர் நவகுண்டம்

| குண்டம் | அக்னி | தத்துவம் | தத்வேஸ்வரி |
|---|---|---|---|
| கிழக்கு அறுகோணம் | ஆஹவநீயம் | பிருதுவி | பவன் |
| தெற்கு அறுகோணம் | தீணம் ஜலத்தத்துவம் | சா்வன் | |
| வடக்கு அறுகோணம் | கேவலாக்னி | கலா | உக்ரன் |
| மேற்கு அறுகோணம் | கார்ஹபத்தியம் | ஆகாசம் | ருத்ரன் |
| தென்கிழக்கு பதமம் | விருத்தம் | மாயா | மகாதேதேவன் |
| ஈசானம் பத்மம் | சாமானியம் | கால | பீமன் |
| நிருதி பத்மம் | யௌவனாக்னி | தேஜஸ் | ஈசானன் |
| வாயு பத்மம் | பாலாக்னி | வாயு | பசுபதி |
| பிரதானம் விருத்தம் | விருத்தம் | சிவதத்தவம் | மஹாதேவன் |

| தத்வேஸ்வரி | மூர்த்தி | மூர்த்தீஸ்வரர் | மூர்த்தீஸ்வரி |
|---|---|---|---|
| வாமா | ¨மாமூர்த்தி | கார்த்திகேயன் | சகுனி |
| ஜே்'டா | ஜலமூர்த்தி | சேனாளி | நிசீதினி |
| பலவிகரணி | அர்க்க | அசுராந்தகன் | மஹாபூதா |
| கலவிகரணி | வியோம | சக்திபாணன் | புத்தா |
| சாவபூததமனி | யஜமான | குஹன் | பூதா |
| பலப்ரதமதனி | இந்து | மயூரவாஹன் | சீதளா |
| ரௌத்ரி | வன்னி | விசாகன் | ரேவதி |
| காளி | வாயு | 'ண்முகன் | மாலினி |
| மனோன்மணி | சிதாகாசமூர்த்தி | குஹன் | தேவசேனாவல்லி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் நான்கு

## ஸ்பர்சாகுதி கிரியையில் காணப்படும் சமயதத்துவ சிந்தனைகள்

சமயவாழ்வு வாழ்கின்ற ஒருவன் சாதனையியலில் ஈடுபட துணைநிற்பவை கிரியைகளாகும். சமயம் மனித வாழ்க்கையொடு பின்னிப்பிணைந்ததொன்று. இந்து சமூகம் தங்கள் பண்பாடு கலாச்சாரப் பாரம்பரியங்களுக்கு ஏற்ப சமயக்கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர். நம்பிக்கையே இந்து சமயத்தின் அடிப்படையாகும். மனித அறிவின் வளர்ச்சியுடன் அதாவது கோட்பாட்டு ரீதியான சிந்தனைகள் ஆற்றலின் ஆரம்பநிலையுடன் சமயத்தின் தோற்றம் கருக்கட்டுகிறது எனலாம். சமயம் மனிதனது வாழ்வு அதன் ஆன்மாவுக்கு ஒளி, பாதைநீக்கு தீபம் என ஓரறிஞர் சுட்டுகின்றார். சமயம் வழியாக அவன் அடைய முயலும் உட்பொருளானது (Reality) சத்தியத்தின் உயிர்நாடி. வாழ்வின் பேரின்பம் மனத்தின் ஆனந்தம் அமைதியின் நித்தியத்தின் பூரணம் என தைத்திரிய உபநிடதம் கூறுகிறது.

மனிதனுக்கு உள்ள இந்த உட்பொருள் பற்றிய அறிவை ஏற்படுத்துவது அவனை ஆன்மீக வாழ்வில் முழுமை பெறச்செய்வது சமயத்தின் தலையாய பணியாகும். இவ்வகையிலேதான் இந்து சமயத்தின் சிறப்பு நூல்களாகிய ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களை வகுத்துத் தந்துள்ளன. ஆன்மீக வளர்ச்சியை ஆன்மா பெறுவதற்காகவே மேற்படி நான்கு படிநிலைகளும் சைவசித்தாந்தத்தில் குறிப்பிடப்படுகின்றன. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்கு. முத்தியாகிய பேரின்பச் சுவையை அனுபவிப்பதற்கு அரும்பு, மலர், காய், கனி என விளங்குவன சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களாகும்.

"விரும்புஞ் சரியை முதன் மெஞ்ஞான நான்கும்
மரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே"

என தாயுமானவர் பாடுகின்றார். இவ்வகையிலேதான் சைவசமய மரபில் கிரியைகளும் முக்கிய இடம் வகிக்கின்றன. ஒரு சமயநெறி நிற்பவன் இத்தகைய சமய கிரியைகளிலே ஈடுபாடு கொள்ள வேண்டு மென்பது தொன்மைக்காலந் தொட்டு உணரப்பட்ட விடயமாகும். ஒருவன் தான் பின்பற்றி நிற்கும் சமயத்தை நம்பிக்கையுடன் பின்பற்றுகின்றான் என்பதை வெளிக்காட்டிக் கொள்ளவதற்கு இக்கிரியை களே துணைநிற்கின்றன. எனவே இந்து சமயத்திலே பல்வேறு காலங்களில் கிரியைகள் பரிணாமம் பெற்று வளர்ச்சி பெற்றதை நாம் கிரியை தொடர்பான நூல்கள் மூலம் அறிந்துகொள்ளமுடியும்.

இவ்வகையில் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் கூறும் கருத்து கவனிக்கத் தக்கது. இந்தியாவில் இதுகாறும் எழுந்த ஆஸ்திக மதங்களெல்லாம் செயல்வழி அறவழி என இரு வழிகளை வகுத்துக்கொண்டன. அறிவு குறைந்தவர்களுக்கு இறைவழிபாடு எனும் எளிதான உபாயத்தை எடுத்துக்கூறி அவர்களை உய்யவைப்பது செயல்வழி. அறிவுவழியோவெனின் சைவசித்தாந்தமெனும் மெய்யறிவை உணரத்தருகின்றது. இவ்விரண்டினுள் செயல்வழி பரம்பரையாக பேணப்பட்டு வரும் மரபினையும் அடிப்படையாகக்கொண்டு விளங்கவது. இவ்வாறு பரம்பரையாக வரும் மரபினை ஆகமம் எனக்குறிப்பர். இது பற்றியே இச்செயல்வழியினையும் இது சேர்ப்பிக்கும் அறிவு வழியினையும் எடுத்துக்கூறும் நூல்கள் ஆகமங்கள் எனப்பெயர் பெற்றன. ஆகமம் எனினும் மரபு எனினும் ஒன்றே. இம்மரபு மனிதன் வகுத்துக்கொண்ட ஒன்றன்று. ஆகமங்கள் தெய்வத்திருவருளால் உருவானவை. சைவத்துடன் தொடர்பு கொண்டதினால் "சிவாகமங்கள" எனப்பட்டன. இவ்வாகமங்கள் இருபத்தெட்டினுள் ஒருசிலமட்டுமே எமக்குக் கிடைக்கத்தக்கன. இவை தென்னாட்டிற்கே சிறப்பாகவு ள்ளது. தென்னாட்டினைத் தாயகமாகக் கொண்ட இலங்கையில் விளங்கும் சைவமும் ஆகமங்களும் இதே தொடர்பு கொண்டுள்ளதென்பதும் தேற்றம். இங்கு உருவான திருக்கோயில்களெல்லாம் ஆகமவிதிகளுக்கமைய எழுந்தவையே. இக்கோயில்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் வழிபாட்டு முறைகளும் ஆகமங்கூறும் முறைகளே என்று குறிப்பிடுவது ஆலயக்கிரியைகளுக்கு சிறப்பான விளக்கமாக அமைகின்றது.

திருக்கோயில்கள் ஆகமமரபு பேணப்படும் தூய்மையான இடங்களாகும். மந்திரசக்தி எங்கணும் பரவி தெய்வீக உபாசனை நிகழும் இடமாகவும் அது விளங்குகின்றது. அங்கு இறைவனது திருவருட் சக்தி வெளிப்பட்டு நிற்கும். ஆகவே தான் கிரியைகள் நிகழும் இடமாகிய சூலயம் தூய்மையாகவும் அமைதியாகவும் விளங்கவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் தெய்வசாந்நித்யமாகும் பொருட்டு ஆலயங்களில் நிகழும் பல்வேறு பிரதிஷ்டா கிரியைகளில் ஸ்பர்சாகுதி கிரியை முக்கியத்துவம் பெறுகின்றது. சமயதத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட ஸ்பர்சாகுதிக் கிரியை பல்வேறு அம்சங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. அவையாவன,

சமூகம் (Social )
வரலாற்றுப் பின்னணி (Historical basic )
குறியீட்டுத்தன்மை (Symbolism )
உளவியல் (Paychological )
அழகியல் (Aestheties )
மருத்துவம் (Medical )
ஒழுக்கம் (Moral )
மறைஞான அனுபவம் (Mystical )
போன்ற அமசங்கள் உள்ளடக்கியுள்ளன.

முதன்முதலாக அனைத்திலும் உடையது சமூகப்பணியாகும். கிரியையை உள்ளடக்கிய சமயம் ஒரு மொழியைப்போல தொன்மையான காலத்திலிருந்து ஒரு சமூக விடயமாக எம்மை வந்தடைந்துள்ளது. கிரியை என்ற வடிவத்திலே ஒரு தகுந்த பொருளோடு எம்மிடன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மொழியானது பல பொருட்களைக் கொண்டு எம்மிடத்தே வந்தது போல கிரியைகளும் பல பொருளைத் தங்கிக்கொண்டு மக்களிடையே பரவியுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து கிரியை என்பது நம்பிக்கையின் நிறைவடிவமாகும். நம்பிக்கை கொண்டுள்ள பல எண்ணிக்கையான குழுக்களை ஒன்றிணைக்கின்ற சக்தி கிரியையிலுள்ளது. இதற்கு சான்றாக கும்பாபிஷேக கிரியையின் போது ஆலய எஜமான், மேற்படி காலத்தில் ஆலயங்களில் பரிபாலனம் செய்யும் அடியவர்கள். வழிபடும் அடியவர்கள், ஸ்தபதி, சிற்பாசாரி, சூத்திரதாரி, இசைக்கலைஞர்கள், சிவாச்சார்யர்கள், சர்வபோதகாசார்யர், சர்வசாதகாச்சார்யர். மூர்த்திபர்கள், பரிசாரகர்கள், பூமாலை தொடுப்போர், என எண்ணற்ற மக்கள் சமூகமாக ஒன்றுகூடுவது நம்பிக்கையின் வெளிப்பாடாகும். எனவே சமூக இணைப்பிற்கு கிரியை மூல காரணமாக அமைந்துள்ளது.

நவகண்டஸ்பர்சாகுதி கிரியையைப் பொறுத்தவரை ஒரு வரலாற்றுப் பின்னணி அல்லது வரலாற்று முக்கியத்துவம் உள்ளது. இக்கிரியையானது பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கி சமூகத்தை ஒரு குறிப்பிட்ட தலைமுறைசார்ந்த மக்களினது வழிபாட்டு அமசங்களை ஒன்றிணைத்து நிகழ்காலத்தை கடந்த காலத்தோடு இணைக்கும் ஆற்றல் இக்கிரியைகளுக்கு உண்டு. இதன்மூலமாக இந்துசமயத்தின் தொன்மைக்காலந்தொட்டு இற்றைவரையுள்ள ஓர் உள்ளீடாக தொடர்ச்சியை நன்கு உணரக்கூடியதாக வுள்ளது.

உதாரணமாக இன்று நடைமுறையில் உள்ள நவகண்டஸ்பாசாகுதி வேதமரபு வைதீகமரபு சார்ந்த கிரியையாக இடம் பெறுவதை நன்கு ஊன்றிக் கவனித்தால் புலனாகிறது. வேதங்கள் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கை சக்திகளை தெய்வீகநிலைப்படுத்தி வழிபடுவதாகும். யாகத் திலே உரிய தெய்வங்களை கூவியழைத்து அத்தெய்வங்களுக்குரிய அவிப்பாகங்களை அக்னிமூலம் வழங்குவதே இவ் வழிபாட்டில் முக்கிய அம்சம். அக்னி தெய்வத்தையும் வழிபடுவோனையும் இணைக்கும் நிலையில் சிறப்புறுகின்றான். எனவே இத்தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு வேத காலத்தில் சிறப்படைந்த ஆகமங்கள் தெய்வங்களுக்கு கை, கால் முதலிய சரீர அமைப்புக்களை எங்களுக்கேற்றவாறு பெரும்பாலும் தந்து அவற்றின் தெய்வத்தன்மையும் குறைவுபடாத வகையில் அமைத்து கோயில் என்ற நிறுவனத்தைப் பொதுவாக்கியும் அத்துடன் நிரந்தரமாக்கியும் அங்கே இறைவன் எழுந்தருளும் வண்ணம் பிரதிஷ்டை என்ற கிரியையை வகுத்துத்தந்துள்ளது. இங்கும் விக்ரகவழிபாடு வேதவழிபாட்டிலிருந்து வேறுபட்டது எனினும் அதற்கு முன்னோடியாக யாகம் அமைத்து அவற்றில் அக்னியை வழிபட்டு அக்னி மத்தியில் இறைவனை ஆவாஹித்து இவற்றில் இறைவனை இயற்கை வடிவினனாக அஷ்டமூர்த்தியாகவும் பாவித்து அனைத்துக்கிரியைகளிலும் பஞ்சபூதத் தன்மை காணப்படுகின்றது. அதாவது உபசாரங்கள், அஷ்டபந்தனம், பஞ்சசுத்தி என்பவற்றை சில உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவ்வாறாக வேதகாலத்தைப்போன்று யாக நிறைவில் யாக குண்டங்களை அழித்துவிடல் போலன்றி இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்கு விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவாவி நிகழ்த்தும் ஸ்பர்சாகுதிக் கிரியை அக்னியிலிருந்தும் நீரிலிருந்தும் (மூர்த்தி கும்பங்கள்) இறைவனை விக்ரகத்தில் சாந்நித்யம் பெறும் வண்ணம் செய்வது வேதகால மரபின் தொடர்ச்சியாக ஓர் வரலாற்றுப் பின்னணியை உணர்த்திநிற்கின்றது.

அதுபோல் பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிஷேகக் கிரியையின் போது குடத்தில் நிரப்பப்படும் புனிதநீரால் இறைவனின் திருவுருவத்திற்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதலே சிறப்பம்சமாகும். இக்கும்பாபிஷேகக் கிரியை இறைவனை அகன்றபரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலைக்கச்செய்யும் செயலைச் சுட்டுகின்றது. கும்பாபிஷேகக் கிரியைகளில் குறிப்பாக ஸ்பர்சாகுதிக் கிரியைக்கு முன்பின் நிகழும் அனைத்திலும் நீருக்கும் அக்னிக்கும் பிரதான இட முண்டு. எனவே குடமுழுக்கு எனும் புனித நீரால் நடத்தும் இக்கிரியையும் வரலாற்றுப் பிண்ணணியை உணர்த்துகின்றது. வேதங்களில் உள்ள துதிப்பாடல்களிலும் ஆகமங்கள் விதித்துக்கூறும் கிரியை மரபிலும் புராணக்கதைகளிலும் திருமுறைகளிலும் நீரின் மகத்துவம் எடுத்துக்கூறப்படுகின்றது.

வேதங்களின் சமய மரபுகளை விரித்துக்கூறும் விளக்க நூல்கள் பிரமாணங்கள். அவற்றுள் சிறப்புப் பெறும் சதபதபிராமணம் நீரின் சிறப்பினைக் கூறுகின்றது. இவ்வுலகில் தொடக்கத்தில் நீரே இருந்தது என்ற கருத்து அதில் காணப்படுகின்றது. ரிக்வேதத்தில் நீருடன் நெருங்கிய தொடர்புடை யவனாக இந்திரன் போற்றப்படுகின்றான். இந்திரனது வீரச்செயல்களைப் போற்றும் ரிக்வேதம் அவனே வறட்சி எனும் அசுரனைக் கொன்று நீரினை மலையிலிருந்து பாய்ந்தோட வழிசமைத்தவன் எனக் கூறும் (1--32, 1--3) சதபதபிராமணம் நீரைப் பெண்ணாகவும் தீயை ஆணாகவும் குறிப்பிட்டு இவற்றின் சேர்க்கையினால் உயிரினம் தோன்றுவதாகக் குறிப்பிடுகின்றது ஐதரேய உபநிடதம் உலகைப் பாதுகாப்பவன் என்ற நிலையில் பிரஜாபதி மனிதனை நீரிலிருந்து எழச்செய்தான் எனக்கூறும்(1--3)

யஜுர்வேதத்தில் அக்னியைத் தோற்றுவிற்பதற்குரிய இடத்தில் கூறும் மந்திரம் நீரின் பெருமையை உணர்த்துவதாகவுள்ளது. நீரின் ஓட்டத்தில் வைக்கின்றேன்: பெருகிவரும் நீரில் உன்னை வைக்கின்றேன்: பெரு நீரின் ஒளியில் உன்னை வைக்கின்றேன்: நீரின் இருப்பிடத்தில் அமர்வாயாக: எனவரும் அடிகள் நீர் அக்னியின் புனித இருப்பிடமாக விளங்குவதைக் காட்டுகின்றன. நீரினால் பூமாதேவி புனிதப்படுவாளாக, புனிதமடைந்த அவள் என்னையும் புனிதப்படுத்துவாளாக, ஓ, நீரே: நீ அமிர்தம், நீயே அமிர்தத்தின் இருப்பிடம் என்று வேதகால சிந்தனைகள் எமக்கு உணர்த்துகின்றன.

உயிரோட்டமான சக்தியை வழங்குவதில் நீர் பெருமை பெறுகின்றது. உலகை மனிதனின் வாழ்விடமாக விளங்கச் செய்வதிலும் நீரே முக்கியத்துவம் பெறுகின்றது. நீரிலிருந்து எண்ணற்ற மனிதர்களும் தெய்வங்களும் தோற்றம் பெற்ற தெய்வீக வரலாறுகள் உண்டு. உதாரணமாக பிரமகைவர்த்தபுராணம் ( 34--13) லிங்கபுராணம் (82--88) இராமாயணம் (இ--14--15) மகாபாரதம் (13--26) கந்தபுராணம் முருகன் அவதாரபடலம் முதலியன நீரின் முக்கியத்துவத்தை நன்கு புலப்படுத்துவன.

இவ்வாறாக இந்து சமயமரபில் முக்கிய இடம்வகிக்கும் நீரானது பிரதிஷ்டைகாலங்களில் குறிப்பாக நவகண்ட ஸ்பர்சாகுதியில் மூர்த்திக் கும்பங்களாக நீரும், மூர்த்திவடிவமாக அக்னியும் இடம்பெறுகின்றது. நீரில் இறைவனும் இறைவியும் சாந்நித்தியமாகவுள்ளதை

கும்பமத்தியே ஸ்திதம் தோயம் தோய மத்தியேது பங்கஜம்
ஸவர்ண பங்கஜ மத்தியேது பார்வதி பரமேஸ்வரௌ

"கும்பத்துக்குள்ளே நீரும் நீருக்குள்ளே தாமரையும் தங்கத்தாமரையில் பார்வதியும் பரமேஸ்வரனும் சாந்நித்யமாக இருப்பர்" என நீரின் உயர்தன்மை போற்றப்படுகின்றது. மேலும் கும்பத்தில் போகாங்க லயாங்கத்தையும் அக்னியில் அதிகாராங்கத்தையும் கற்பித்தல் வேண்டும். அதிகாராந்தம் மூர்த்திபேதமெனவும் அக்னி கார்யபேதமெனவும் இரண்டு பேதமாகும்.

எனவே பிரதிஷ்டா காலங்களில் அக்னிகாரியமும் கும்பமுமே பிரதான இடம்வகிப்பன. கலாகர்ஷணம் செய்யும் காலத்தில் அக்னிகார்யம் செய்துவிட்டு அதில் அதிகாரங்க ஆவாஹணம் செய்வர். பின் கும்பத்தில் லயாங்க போகாங்க அதிகாரமாக ஆவாஹணம் செய்யப்படுகின்றது. பின் பிம்பசம்யோஜன காலத்திலும் அக்னியில் பூர்ணாகுதி செய்து பின் பிம்பசமீபம் அடைந்து மூர்த்தி, மூர்த்தீசர் மூர்த்தீசி, தத்வம், தத்வேசர், தத்வேசிகளை கும்பத்திலிருந்து பிம்பத்திற்கு அந்தந்தப் பாகங்களில் சம்யோசித்து அந்தக் கும்பங்களை அபிஷேகித்து பின்னர் எஞ்சிய நீரை ஸ்வாஹா எனும் மந்திர இறுதியில் மூர்த்தி சாந்நித்தியத்தின் பொருட்டு ஆரம்பத்தில் ஆகுதி செய்வர். இக்கிரியையானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமம் வகுக்கும் கிரியை என்றபோதும் வேதகாலந்தொட்டு நிலவி வந்த அம்சத்தின் தொடர்ச்சி எனலாம்.

சதபிதபிராமணம் கூறும் நீரை பெண்ணாகவும் தீயை ஆணாகவும் கூறி இவற்றின் சேர்க்கை யால் உலக உயிரினம் தோன்றுவதாகக் குறிப்பிடுகின்றது. இதேகருத்தை லிங்கவடிவத்தில் சக்தி சிவமாம் இலிங்கமே (1725) என திருமந்திரமும் இன்னும் பல நூல்கள் லிங்கம் சிவம் எனவும் பீடம் சக்தி எனவும் கூறுவன.

எனவே இவ்வகையில் ஸ்பர்சாகுதி மூலம் லிங்கத்தில் அக்னியும் நீரும் ஆண் பெண் என்ற இரண்டும் இணைந்து உயிரினம் தோன்றுவதாக கூறும் சதபதபிராமண வாக்கிற்கு அமைவாக பிரதிஷ்டை அமைகிறது எனலாம். கங்கையில் இடப்பட்ட சிவனது அக்னிபொறிகளில் கார்த்திகேயன் தோன்றியதாக ஸ்கந்தபுராணம் கூறுவது இங்கு ஒப்புநோக்கற்பாலது.

இவ்வாறாக கும்பாபிஷேகம் என வழங்கும் பெயர் நீரின் சிறப்பினையே குறித்து நிற்கின்றது. இதனை குடமுழுக்கு, திருமஞ்சனபெருவிழா எனவும் அழைப்பர். பஞ்சபூதங்களில் ஒன்றாகிய பூமியிலிருந்து பெறப்பட்ட கல், உலோகம் ஆகியவற்றினால் சிற்பமரபுக்கேற்ப கலையெழிலுடன் உருவாக்கப்பட்ட திருவுருவத்தில் இறைவனை சாந்நித்யம் கொள்ளச் செய்யும் பெருஞ்சாந்தியே பிரதிஷ்டையாகும். திருவுருவத்தில் தெய்வத்தை என்றென்றும் நிலைபெற்று விளக்கவேண்டுமென வேண்டி, யாகசாலையில் அக்னியின் மூலம் ஆகுதிகள் வழங்கி பூஜிக்கப்பட்ட தெய்வாம்சம் கொண்ட புனித நீரால் திருவுருவத்தில் நீராட்டுதல் ஸ்பர்சாகுதியின் முக்கிய நோக்கமாகும். வழிபாட்டிற்குரிய தெய்வமானது குறித்த திருவுருவத்தில் எழுந்தருளும் வரை யாகசாலையில் அத்தெய்வம் திருக்குடத்திலுள்ள புனிதநீரிலும் அக்னியிலும் பூஜிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. அட்டமூர்த்தி அம்சத்தில் இறைவன் நீரின் அம்சமாகவுள்ளான். தீர்த்தச்சிறப்புமிக்க புனித நீர்களும், மூலிகைகள், வாசனைத்திரவியங்கள் ஆகியவற்றுடன் இக்குடம் விளங்கும். இங்கு ஓமகுண்டங்கள் வளர்க்கப்படுவதும் பஞ்சபாகமாய் அமைந்த சந்தனாதித் திரவியங்கள் தீபாராதனைகள் சாமரை முதலான உபசாரங்கள் பட்டு அணிதல் நாதகீத உபசாரங்கள், என்பன நிகழ்த்தப்பட்டு கோபுரம், விமானம், மூர்த்திகளின் புனிதநீரால் கும்பாபிஷேகம் நிகழும். இவ்வாறாக வேத இலக்கியங்களிலும் இதிகாசபுராணங்களிலும் புனிதமாகப் போற்றப்பட்ட நீரும் நெருப்பும் இணையும் ஸ்பர்சாகுதி கிரியை தீயானது வேதகால வழிபாட்டின் தொன்மையை உணர்த்தி இந்து சமய வழிபாட்டின் ஆரம்பநிலையில் தொடர்ச்சியாக ஆகம கிரியைகளும் இணைந்து நிகழ்காலத்தை கடந்தகாலத்தோடு இணைத்து ஓர் வரலாற்றுப் பின்னணியாக காணப்படுகின்றது. அடுத்துக் கிரியைகளின் முக்கிய நோக்கம் குறியீட்டுத்தன்மை முக்கிய இடம் பெறுகின்றது. கிரியையில் ஈடுபடுவோர் தமது நம்பிக்கையின் வெளிப்பாடாக இக்கிரியைகள் அமைக-ின்றன. இறைவன் மீது காட்டும் பக்தி அன்பு போன்ற விழுமியங்கள் இறைவனக்காக வழங்கும் மலர் மற்றும் நிவேதனப்பொருட்கள் வழியாகவும் மேலும் ஆலயத்திலே மேற்கொள்ளுகின்ற செயலை இறைவன் இப்பூவுலகம் மேலாக வைத்து மரியாதை செலுத்துவது போல அமைகின்றது.

ஸ்பர்சாகுதி காலத்தில் அக்னியிலும் கும்பத்திலும் சாந்நித்யமாகவுள்ள இறைவனை பிம்பத்தில் சாந்நித்யமாகும் பொருட்டு யாகத்திலிருந்து பிம்பத்திற்கு இடப்படும் நாடியானது மனிதனக்குள்ளே உள்ள பிங்கலை, இடை சுசும்நாநாடிகளாக பாவித்து அந்நாடியூடாக யாகத்திலே பூஜிக்கப்பட்ட இறையருளும் மந்திரயங்களும் செய்வதாக நம்பப்படுவது குறியீட்டுத்தன்மையை உணர்த்துகின்றது. உதாரணமாக மின்சாரமானது செப்புக்கம்பியூடாகக் கடத்தப்படுவது போன்று இந்துக்களும் இந்நாடிகள் வழியாக இறையருள் கடத்தப்படுவதாக நம்புகின்றார். இன்னும் லிங்கம் எனும் அருவுருவமும் இறைவனையடைய ஓர் குறியே என்று உபநிடதத்தத்துவங்களும் கூறுவன. எனவே லிங்க வழிபாடும் குறியீட்டுத்தன்மையாகும்.

அடுத்து உளவியல் தன்மையை நோக்குமிடத்து ஒருவன் சமய உணர்வாக மிளிர்வதற்கு இந்த உளவியல் சார்ந்த அம்சங்கள் கிரியைகளுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. ஸ்பர்சாகுதி காலங்களில் யாகசாலை குண்டங்கள், அங்கே பாவிக்கப்படும் சாதனங்கள், சிருக்கு, சிருவம், நெய், பாத்ய அர்க்ய ஆசமநீய பாத்திரங்கள், தர்ப்பைகள் என்பன எல்லாம் புனிதமந்திரங்களாலும் புனித நீரினாலும் சுத்தம் செய்தபின் அங்கு ஓர் தூய்மையான நிலை ஏற்படுகின்றது. அதுபோல் பிம்பத்தில் அ்டபந்தனம், தோ'நிவர்த்தியின் பின் பிம்ப சுத்திசகனவிடத்து நியாசம் செய்தவுடன் கிரியைகளில் ஈடுபடுவோருக்கு மனதில் உளத்தூய்மை ஏற்பட்டு ஸ்பர்சாகுதிக் கிரியை செய்யும் காலத்தில் ஓர் புனிதகடமை அல்லது காரியம் செய்ய நிறைவு ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அழகியல் தன்மை உளரீதியான நிறைவுக்கு அடுத்தபடி அழகியல் ரீதியான அனுபவம் ஏற்படும் இக்கிரியையின் போது மேற்கொள்ளும் கிரியை ஒழுங்கு அலங்காரம் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் ஒருவன் உள்ளத்தில் அழகியல் உணர்வைத் தூண்டத்தக்கவையாக அலங்காரங்களும் கும்பஅலங்காரம், விஷ்டரம் (தர்ப்பையினால் ஓர் வடிவம்) சிருக்சிருவ அலங்காரம் என்பன மிக்க கலையுணர்வுடன் மிகத்தொன்மையான காலந்தொட்டு எமது சமய மரபிலே கிரியைகளும் கலைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். வடநாட்டிலும் தென்னாட்டிலும் கிரியை எனும் கலைமூலமாக ஒருவன் பெற்ற அனுபவத்தினால் மேலதிக நுண்கலைகளுள் ஒருவனுக்கு சிறந்த சமய அனுபவத்தைத் தந்துள்ளான். ஆசார்யன் காட்டும் அனைத்து முத்திரைகளும் பரதநாட்டியத்தோடு தொடர்புடையன. கிரியைகளுக்கும் கலைகளுக்கும் உள்ள தொடர்பு பல நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இன்னும் செய்யத்தக்கது.

அடுத்து இக்கிரியை மரபிலே இடம்பெறுகின்ற மரபு ஒழுக்கம் சார்ந்த முறையாகும். பிரதிஷ்டாகாலங்களில் கிரியைகளில் ஈடுபடும் ஆசார்யர், மூர்த்திபர்கள், எஜமான், என்போர் ரட்சாபந்தனம் செய்து தம்மை ஓர் வரையறைக்குள் கட்டுப்படுத்தி ஆசாரசீலர்களாய் இருத்தலும், மனக்கட்டுப்பாடு போன்ற ஒழுக்கக்கோட்பாடுகள் காணப்படுகின்றன. ஆன்மா வீடுபேறு அடைதலே கிரியைகளின் முக்கிய நோக்கம். எனவே ஒழுக்கக் கோட்பாடுகளும் அவசியமானது.

அடுத்து மறைபொருள் தன்மை எந்தவொரு கிரியையின் மையக்கருத்து என்னவெனின் அது மறைஞான அனுபவம் ஆகும். மறைஞான அனுபவம் என்பது கிரியை மூலம் ஒவ்வொருவரின் மனதும் இறைவனிடம் அண்மிக்கின்றது என்ற உணர்வாகும்.

நன்கு சிறப்பாகத் திட்டமிட்டு மனவொருமைப்பாட்டோடும் ஆயத்தங்களோடும் செய்யப்படுகின்ற கிரியைகளில் கிரியை செய்பவர்களின் மனநிலை அமைதியடைகின்றது. கிரியை செய்யும் நிலை புனிதமடைகின்றது. அத்துடன் படிப்படியாக உலகியல் வாழ்க்கையிலிருந்து விடுபட்டு இறைவனோடு ஈடுபடுகின்ற ஒரு மனோநிலையை தோற்றுவிக்கின்றன. அதற்குக் காரணமாகத்தான் இறைவன் சாந்நித்யம் கொள்ளும் ஆலயத்திற்கு செல்வதும் மிகவும் தொன்மையான காலத்தில் மந்திரத்தை நாங்கள் பிரயோகிப்பதும் இடம்பெறுகின்றது. இதன்மூலமாக வலர் பெற்ற அனுபவங்கள் எமக்கு நல்ல முன்மாதிரியாக அமைகின்ற காரணத்தால் நாமும் அவ்வாறு ஈடுபடுவதற்கான தேவைகளை கிரியைகள் கொடுக்கின்றன.

ஸ்பாசாகுதி கிரியை பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள சிவாச்சார்யர்களிடம் நேரடியாகக் கேட்டறிந்த போது கும்பாபிஷேகக் கிரியைகளில் கலாகர்ஷணம் முதலாக ஸ்பாசாகுதி கும்பாபிஷேகம் வரை தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதாகவும் ஓர் பூரணமான ஸ்பர்சாகுதிக் கிரியையின் காலத்திலும் அது பூரணமாக நிறைவுற்ற பின் அங்கே உள்ள பிம்பத்தின்மூலம் மனதில் மறைஞான அனுபவம் ஏற்படுவதாகக் கூறினார்கள்.

ஆகவே இத்தகைய நோக்கத்தை அடைவதற்காக கிரியைகள் ஏற்றவொரு சூழ்நிலையை ஏற்படுத்தி அதன்வழியாக ஆன்மாவானது குறிப்பிட்ட இலட்சியத்திற்காக தன்னை ஈடுபடுத்தி சாதனையை வளர்க்க இவை வழங்குகின்றன. இப்படியான ஒன்றிற்கு மறைஞானநிலை சார்ந்த விடயங்களுக்கு கிரியைகளிலே குறியீட்டுத்தன்மை வாய்ந்த கிரியை மந்திரங்கள் போன்றவைகள் குறிப்பிடத்தக்கன.

உதாரணமாக கிரியை முன்னின்று நடத்துபவர் ஓர் சிவாச்சார்யார் தன்னை சாதாரண மனிதநிலையிலிருந்து விடுபட்டு சமயக்கிரியை செய்யுமாறு உயர்த்திக்கொள்கின்ற போது அவர் உள்ளத்திலே ஒரு மறைஞான அனுபவம் இடம்பெறுகின்றது. கிரியை நடத்துவதற்காக தனது சாதாரண உடம்பை மந்திரம் மூலமாகப் புனிதப்படுத்தும் போது அப்புனிதப்படுத்தலின் பின் உரிய கிரியையில் ஈடுபடும் போது மக்களுக்காக அவர் ஆலயவழிபாட்டில் ஈடுபடும் போதும் அவர் உள்ளத்திலே ஏற்படுவது உயர்ந்த மறைஞானமாகும். சகளீகரம், பூதசுத்தி போன்ற கிரியைகள் வாயிலாக உரிய மந்திரங்கள் கூறி அவருடைய தோத்திரத்தின் வாயிலாகவும் ஒரு சமயநிலை சார்ந்த நிலைக்கு உயர்த்திக்கொள்ளுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

சாதாரண மனிதன் பஞ்சாட்சர மந்திரம், காயத்ரி மந்திரம் பொன்ற மந்திரங்களை உச்சரிப்பதுடன் அவரையறியாமல் ஒரு மறைஞான அனுபவம் உள்ளத்திலே ஏற்படுகின்றது. இவ்வாறாக நன்கு அமைக்கப்பட்ட இக்கிரியை மரபு தனக்கேயுரிய நீண்டகால மரபு பாரம்பரியத்தைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. இக்கிரியைத் துறையில் ஆலயக்குருமார், சர்வபோதகாச்சார்யர், கர்த்தாக்கள் போன்றோர் ஒன்றிணைந்து செயற்படுகின்ற போதுதான் ஒரு கூட்டுமுயற்சி அடிப்படையில் கிரியைகள் உயர்ந்த பலனையும் அனுபவத்தையும் நல்குவதாகக் கருதப்படுகின்றது.

ஆலயக்கிரியைகள் காலந்தோறும் ஒரு புனிதத்துவம் ஒழுங்கு பேணப்பட வேண்டுமென்பதை வேதகாலங்களிலிருந்து வரும் கிரியை ஒழுங்கிலிருந்து நாம் காணலாம். பிரபஞ்ச ஒழுங்கு உலக ஒழுங்கு அனைத்தும் வேதகாலத்தில் சிறப்பாக பேசப்பட்ட ரிதம் என்ற அம்சத்தில் அடக்கலாம். எனவே தான் ஆகமங்கூறும் கிரியைகளில் ஓர் ஒழுங்கான கட்டுக்கோப்பான அனைத்துக் கிரியைகளும் இடம்பெறுவதைக் காணலாம். வேதகாலந்தொட்டு யாகத்திலுள்ள அக்னி சத்யம் எனக்கூறப்படுகின்றது. சத்தியத்தை எவரும் கண்ணால் காணமுடியாது. ஆது மறைவாக இயங்கும் அதுவே எந்நாளும் வெல்லும் என்கிறது. "சத்தியமேவ ஜயதே" உபநிடதம்.

பாலிலுள்ள சத்து திரண்டு உருவெடுத்து வந்து நெய்யாகிறது. ஆது சத்தியத்தின் திரட்சி எனலாம். இது பாலில் இருப்பது கண்ணுக்குத் தெரியாது. ஆது தயிராகி வெண்ணையாக அதன்பின்புதான் நெய்யாகக் கிடைக்கும். அதுவரை அது கண்ணுக்குத் தெரியாது. சத்தியத்தின் உருப்பொருளாகவும் சத்தியத்தைக் காக்க செயற்படும் யாகம் சத்துப்பொருளாகவும் நெய் மற்றப் பொருட்களோடு அக்னியிலிட்டு ஓமஞ் செய்யப்படுகின்றது. எந்தப்பொருளையும் நாம் ஓர் ஊடகத்தின் மூலம் பயன்படுத்த முடியும். வானொலி நுட்பமான இடையலைகள், தொலைக்காட்சி ஒளியலைகள் வாமண்டலத்தில் மிதந்து வருவது போல நாம் கிரியைகளில் உச்சரிக்கும் மந்திரங்கள் தோத்திரப்பாடல்கள் என்பன அக்னி மூலமாக இயற்கைச் சக்தியிடம் போய்ச் சேருகின்றன. ஆகவே மிகத்தொன்மையான வேதகாலந்தொட்டு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட யாகங்கள் மிக உன்னத நிலையை விளக்கிவந்த காரணத்தால் யாகத்தில் யாகம் இயற்கையோடு இணைந்து நிகழும் விடயத்தை சுட்டுகின்றார்.

அந்நாத் பவந்தி பூதானி பர்ச்சன்யாத் அன்ன சம்பவஹா
யக்நாத் பவதி பர்ச்சன்யோ யேக்ன கர்ம சமுத்பவஹ

உணவிலிருந்து உயிர்கள் உண்டாகின்றன. மழையினின்று உணவு உற்பத்தியாகின்றன.
யக்ஞத்திலிருந்து மழை வருகிறது, யக்ஞத்திற்குப் பிறப்பிடம் கர்மம்.

ஆகவே மிகைத்தொன்மையான காலந்தொட்டு வேதகாலத்தில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட யாகங்கள் இந்தசமயத்தில் மிக உன்னதமான மரபுகளை விளக்கி வந்த காரணத்தால் ஆகம மரபில் நன்கு வளர்ச்சி பெற்ற திருக்கோயில் வழிபாட்டின் முன்னோடியாக இவ்வழிபாடு பிரதிஷ்டையின்போது நிகழ்கிறது. அத்தோடு பிரதிஷ்டை நிகழ்ந்து நித்திய நைமித்திய வழிபாட்டில் இறைவனின் தெய்வீக சாந்நித்யம் அதிகப்படுத்த யாக குண்டத்தில் கூடிய அவிப்பாகம் வழங்கி தெய்வ அருளைப்பெற திருப்திப்படுத்த சமய நடைமுறை இன்றும் தொடர்கிறது. இவ்வாறு மிகநுட்பமாகவும் ஒழுங்காகவும் புனிதமாகவும் கூறப்பட்ட நிர்ணயமுறைகள் இன்று அறிவியல் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைகின்றது.

இவ்வாறு வேதகாலமரபின் தொடர்ச்சியாக நிகழும் யாகவழிபாடு ஆகமத்தில் இணைந்து பிரதி'டா காலங்களில் ஸ்பர்சாகுதி மூலம் விக்கிரகத்தில் இணைகின்றது. அடுத்து ஆகமங்கூறும் ஸ்பாசாகுதி கிரியைகளில் காணப்படும் சமயதத்தவ சிந்தனைகளை நோக்கலாம்.

## சமயதத்துவ சிந்தனைகள்

சமயம் என்பது நம்பிக்கையினையும் தத்தவம் என்பது அறிவாராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டன. சிவாகமங்களின் வழிவந்த சித்தாந்தங்களிலும் இறைவனுக்கு இருவேறு நிலைகளை கூறுகின்றன. ஒன்று உருவ வழிபாட்டை அடித்தளமாகக் கொண்ட தடத்தநிலை எனப்படும் பதிக்கோட்பாடாகும் இது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு கிரியைகள் ஆற்றப்படுகின்றன. ஸ்வருப நிலை என்பது தன்னியல்பான நிலையாக சொரூபலட்சணமாக சித்தாந்தம் கற்றுக்கொடுத்துள்ளது.

ஆகமம் கூறும் கிரியைகளுள் பிரதிஷ்டை எனும் கிரியையானது இறைவனின் சர்வவியாபகத் தன்மையை சுட்டிநிற்கின்றது. இக்கிரியை காலங்களில் இறைவன் அஷ்டமூர்த்திகள் என விரிந்து அவற்றின் அதிபதிகளாகவும் எட்டுமூர்த்திகள் பூஜிக்கப்படுகின்றனர். ஆகமமரபில் இவ்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திகளின் அதிபர்களாக பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்ரன், பீமன், மகதே, தேவன் என்போரே தத்துவதிபர்களாக கூறப்படுகின்றனர்.

இவ்வெட்டுப் பெயர்களில் தொடக்கநிலை யஜுர் வேதம் எனலாம். "சதருத்ரியம்" எனும் பகுதியில் தெய்வம் ஒன்றிற்கு பல பெயர் சுட்டியிருப்பதைக் காணலாம். இவற்றுட் சில சிறப்புப் பெயர்கள் சில காரணப்பெயர்கள், சில பொதுப்பெயர்கள், சில தெய்வத்தின் பண்புகளைச் சுட்டும் பெயர்கள். இப்பெயர்களின் வளர்ச்சியை இன்று தென்னாட்டிலும் இலங்கையிலும் பெருவழக்கிலுள்ள அர்ச்சனை முதலான வழிபாடு தோன்றக்காரணமாயின. அதேபோல் ஆகமக்கிரியைகளிலும் இதன்தாக்கம் காணப்படுகின்றன.

"யஜுர் வேதத்தின் தோற்றுவாயாக அமைந்தவை பிராமணங்கள். இந்துசமய மரபில் நிகழும் கிரியைகளின் வரலாற்றை நோக்குமிடத்து பிராமணங்களுக்கும் இடமுண்டு. கிரியைமுறைகளின் முழு இயல்புகளையும் செவ்வனே விளக்குவதற்கு பிராமணங்களின் பயிற்சியும் அவசியம். யாகங்களின் விரிவான விளக்கங்களை இந்திய இலக்கியப் பரப்பிலும் இங்கு காண்பது போல வேறு எங்கணும் காணவரிது. இவற்றை நிலைக்களனாகக் கொண்டு விளங்கவதே ஆகமம் கூறும் சிவயாகம்"

சைவவழிபாட்டை பொறுத்தமட்டில் பிராமணங்கள் சிவனின் பெருமை கூறி வழிபாட்டின் அமைப்பை அதன் உயரிய நிலைக்கு வந்துள்ளன. பிராமணங்கள் உருத்திரனின் சிறப்பை கூறி அவரை பெருந்தேவன், ஈசானன், என்றும் தேவதேவன் என்றும் குறிப்பிடகின்றன. கௌ'தசி பிராமணன் சிவனுக்குப் பவன், சர்வன், பசுபதி, உக்ரன், உருத்திரன், ஈசானன், அரனி என்னும் பெயர்களைக் கூறுகின்றது. சாங்காயனன் என்னும் பிராமணன் இவ்வெட்டுப் பெயர்களுடன் நீர், நெருப்பு, வளி, கோள்கள், மரங்கள், ஆதித்தன், தண்மதி, அன்னம், இந்திரன் முதலிய பொருள்களையும், தெய்வங்களையும் உருத்திரனுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றது. இதுதான் இறைவனுக்கு அட்டமூர்த்தி கற்பிப்பதன் மிகவும் தொடக்கநிலை. பிரதிஷ்டா காலங்களில் நிகழும் நவகுண்டங்களில் பூஜிப்பதும், ஸ்பர்சாகுதியின் நவபேதங்களும் உணர்த்தும் பேருண்மையும் இறைவனின் அட்டமூர்த்தி என்பதாகும்.

கிரியைகளை நன்குவிளக்க விரும்புவோர் முதலில் அவற்றிற்கு இன்றியமையாத திருவுருவங்களை பற்றிக் கற்றல் வேண்டும். அவ்வண்ணம் திருவுருவங்களை நன்கு விளக்குதற்கு அவற்றுடன் தொடர்புகொண்டுள்ள வரலாறுகளையறிதல் முக்கியம். இவற்றை விரிவாகக் கூறுவதற்கென உருவானவை இராமாயணம் பாரதம் ஆகிய இரு இதிகாசங்களும் பதினெண்புராணங்களும், உப புராணங்களுமாம். இந்நூல்கள் சமயக்கிரியை பற்றி தெரிந்துகொள்ள விரும்புவோர்கள் முதன்முதலாகக் கற்றறிய வேண்டியவை. சிவபெருமான் திருக்கோலங்கொள்ளும் வேளை இவனுக்கென சிறப்பாக பொருந்தியுள்ள உருவ உறுப்புக்களின் அமைப்புக்கள் அவன்புனையும் கோலங்கள் ஆகியனவெல்லாம் புராணங்களிலே விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வேதஇலக்கியங்கள் இதிகாசபுராணங்கள் கூறம் சமய நெறியினையே ஆகமங்களும் கூறிநிற்கின்றன.

சிவனின் திருமுகங்கள் ஐந்து. இவை ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவன், சத்யோசாதம் என்பன. இம்முகங்கள் அனைத்திற்கும் தனித்தனி நிறமுண்டு. இவை முறையே வெள்ளை, சிவப்பு, மஞ்சள், நீலம், வெண்சிவப்பு என்பனவாம். இவ்வைந்து முகங்களும் ஐந்தொழில்களுடன் தொடர்புறுவன. இவ்வாறு புராணங்கள் கூறுனும் கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களில் நாம் காணுவதில்லை. ஆனால் சிவலிங்கத்தில் இறைவனை ஆவாஹிக்கும் போது ஆசார்யனால் கூறப்படும் தியான மந்திரங்களில் இவ்வாறான புராணங்கள் சித்திரிக்கும் இயல்பைக் காணலாம். இதே போல் சிவனுக்கு சிறப்பாயுள்ளது நெற்றிக்கண். இதனால் இவன் திரியம்பகன் எனப்பட்டான். சதாசிவம் பரம்பொருளின் வடிவம். காமிகாகமத்தில் (3: 327: 339) கீழ்க்கண்டவாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

சதாசிவர் ஐந்து திருமுகங்களும் பத்துத் திருக்கரங்களும் உடையவர்: ஒவ்வொரு முகத்திலும் மூன்று திருக்கண்கள். இந்து திருமுகங்களுள் மேலே நோக்கிய முகம் ஈசானம் எனப்படும். இம்முகம் அழகாகவும் தெளிவாகவும் படிகம் போன்று நிர்மலமான ஒளியுடையதாகவும் குழந்தைத் தன்மையுடையதாகவும் விளங்கும். இம்முகம் அருளல் எனும் செயலைப் புரியும். கிழக்கு நோக்கிய முகம் தற்புரு'ம். இது உருக்கிய தங்கத்தின் நிறத்தையுடையதாகவும் கம்பீரமாகவும் சாந்தமாகவும் காணப்படுவதுடன் கூடினதாகவும் விளங்கும். இது மறைத்தல் என்பதைச் செய்யும். தெற்கு நோக்கிய மகம் அகோரம் எனப்படும். இது கருமை நிறமும் எரிக்கும் புருவங்களையும் உடையது. பயங்கரமான தோற்றமும் கோரப்பற்களும் உடையது. துடிக்கும் உதடுகளையுடைய இம்முகம் பரிபூரணமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளைப்பருவத்துடன் அழித்தல் தொழிலைப் புரியும். வடக்கு நோக்கிய முகம் வாமம் எனப்படும். இது புதிய பவழத்தின் ஒளியையுடையது. கரியவண்டுக்கூட்டம் போன்ற சுறுண்ட கூந்தல்களால் பிரகாசிப்பதாகவும் யாவரையும் கவரக்கூடியதாகவும் பார்வதியின் முகம் போன்று தோன்றுவதாகவும் காட்சியளிக்கும். ஐந்தொழில்களில் இம்முகம் காத்தலைப்புரியும். மேற்கு நோக்கிய முகம் சத்யோசாதம். இது சந்திர ஒளி பொருந்தியதாகவும் ராஜ லட்சணங்களுடன் கூடியதாகவும் சந்திராபரணம் உடையதாகவும் காட்சியளிக்கும். ஐந்தொழில்களில் இம்முகம் படைத்தல் எனும் தொழிலைப்புரியும். பத்துக்கரங்களில் வலக்கரங்களில் சூலம், வஜ்ஜிரம், கத்தி, பரசு, அபயமுத்திரை என்பவற்றையும் இடக்கரங்களில் நாகம், பாசம், மணி, அக்னி, அங்குசம் என்பவற்றையும் தாங்கியிருப்பர். ஜடாமகுடம் உடையவர் சாந்தமான தோற்றமுடையவர் என சதாசிவப் பெருமானின் வடிவத்தைக் கூறுவன. இதேகருத்தைத் திருமூலரும்,

"நடுவு கிழக்குத் தெற்கு தரமேற்கு
நடுவு பழகநற்குங்கும வன்னம்
அடைவுள அஞ்சனஞ் செவ்வரத்தம்பால்
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே"

இவ்வாறாக புராணங்கள் சிவனின் தோற்ற இயல்பைக் கூற ஆகமங்கள் அதனை சிவனின் அருவுருவ வடிவமாகிய சிவலிங்கத்தில் பாவனையாக கற்பித்துக் கூறுகின்றது.

சிவபெருமானின் திருவுருவத்தைப் புராணங்கள் பலவாறு விதந்து கூறுகின்றன. இவ்வுருவம் எட்டு அம்சங்களைக் கொண்டது. நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்களும், சூரியன் சந்திரன், ஆகிய இருகோள்களும் வேட்கும் இயல்பான இயமனும் இவ்வெட்டு உறுப்புக்கள் இதனாலேயே சிவனுக்கு அட்டமூர்த்தி என்னும் சிறப்பு பெயர் உண்டாயிற்று. இதனாலேயே ஆகமங்கள் பிரதிஷ்டைக-ளில் ஒன்பது குண்டங்களில் அஷ்டமூர்த்தியாக பூஜித்து ஸ்பாசாகுதி மூலம் சிவலிங்கத்தில் சாந்நித்யம் பெறச்செய்யும் கிரியையை வகுத்துள்ளன.

இவ்வாறு இதிகாசபுராணங்களில் இறைவன் ஏற்ற திருமேனிகளெல்லாம் சிவசம்பவங்களைப் பற்றியனவாய் அவற்றைச் சித்தரிக்கும் வண்ணம் உருவாகியுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இறைவனின் இருபத்தைந்து மூர்த்திகளின் தியான சுலோகங்களாக கூறி அவற்றை உருவாக்கும் விக்கிரகக்கலை உருவாக வழிசமைத்தன ஆகமங்கள். இதன் அடிப்படையிலேயே சிற்பநூல்கள் பல எழுச்சி பெற்றன. அவ்வாறே ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பட்ட இறையுருவங்களில் அதாவது சிவலிங்கங்களிலிருந்து தான் அனைத்து மூர்த்தி பேதங்களும் உருவாகின என்பதை சைவசமயம் சார்ந்த நூல்கள் பகர்வன. லிங்கம் பற்றி சிறப்பு இயல் ஒன்றில் தரப்பட்டுள்ளதால் இங்கே ஸ்பர்சாகுதிக் கிரியையின் போது லிங்கத்தில் பிரிந்து செயற்படும் நவபேதங்கள் அஷ்டமூர்த்திகள், மூர்த்தீசர், மூர்த்தீசி, தத்வம், தத்வேசர், தத்வேசி ஆகியன பற்றிய சமயசிந்தனைக் கருத்துக்களுக்கு வருவோம்.

சிவாகமங்களும் இறைவனுக்கு சொரூபநிலை தடத்தநிலை என இரண்டாக வகுத்துள்ளன. இதனையே சைவசித்தாந்தமும் கூறுகின்றது. அவை இவற்றுள் சொரூபம் என்பது யாவற்றையும் கடந்தநிலை. "என்றுமுள்ள இயல்பான நிலை" என சிவப்பிரகாசம் கூறும். இவ்வியலில் ஸ்பர்சாகுதிக் கிரியை பற்றியது என்றபடியால் தடத்தநிலை மட்டுமே இங்கு ஸ்பர்சாகுதி கிரியையோடு தொடர்பு செய்து ஆய்வு செய்யப்படுகின்றது.

இறைவனின் தடத்தநிலைக் கொள்கையை அற்புதமாக விளக்கிநிற்கும் பகுதியே நவகண்ட ஸ்பர்சாகுதியாகும். இறைவனாகிய சிவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருவம், உருவம், அருவுருவம் என்ற தடத்தநிலை வடிவங்களாகும் நிலை பெறுகின்றான். இறைவன் கை, கால், முதலிய உறுப்புக்களோடு கூடிய உருவவடிவம் கொள்வது உயிர்களின் பொருட்டு என்பதனை சிவஞானசித்தியார்,

"உருவருள் குணங்களோடு மூணர்வருளுவிற்தோன்றுங்
கருமமு மருள என்றன் அரசரணாகதி நூல்கள்
தருமரு னுபாங்க மெல்லாந் தானரு டனக்கொள்றின்றி
கருனுரு வுயிர்க் கென்றே யாக்கின நசிந்தனன்றே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வனது திருவுரு அருள்வடிவமானது அவ்வுருவில் தோன்றும் சிரசு, முகம், என்பன அங்கம் கண், மூக்கு, செவி, கழுத்து, மார்பு, தோள், நாடி, கை, கால், விரல் முதலியன பிரத்தியங்கங்கள். சூலம், மழு, வாள், வச்சிரம், அபயம், நாகம், பாசம், அங்குசம், கண்டமணி, அக்னி என்னும் ஆயதங்கள், சாங்கம், உபாங்கம், வஸ்திரம்(ஆடை), பூநூல், மாலை, சந்தனம், ஆபரணம், ஆசனம், ஆவரணம் என்பனவாம். இவற்றை அங்கம்-- திருமேனி, பிரத்தியஸ்தம் அத்திருமேனியிலுள்ள உறுப்புக்கள் சாங்கம் அங்கத்தோடு கூடியது. ஊபாங்கம் அங்கத்தைவிட்டு நீங்காது சமீபத்திலிருப்பது. இவற்றையே சாங்க உபாங்க பிரத்தியங்கங்கள் என கிரியா காலங்களில் செய்யப்படுவன. இவ்வகையாக இறைவனின் வடிவம் கூறப்பட்டாலும் அவை நம்முடைய தேகம்போலல்ல. அசுத்தமாயையின் தொடர்பில்லாமல் மந்திரங்களால் உருவான தூலதிருமேனியாக இருக்கும் இந்தத் திருமேனியையே "வித்யாதேஹம்" என்று காமிகாகமம் (3:426) சப்த பிரம்மரூபம் என்று அஜிதாகமம் (1:13:26) கூறுகின்றன.

கலாகர்ஷணம் முதல் ஸ்பர்சாகுதியீறாக செய்யப்படுவன "லயபோக அதிகாரங்க ஆவாஹணம்" என்ற பெயர் பெறுகின்றது. முதலில் செய்யப்படுவது ஷடத்வா நியாசங்கள். இவை பரமசிவனை அடையும் வழிகள். மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்வம், கலை எனும் அத்வாக்கள் ஆறும் முதல்வனுக்கு வடிவங்கள். அத்துவாக்களுக்குள்ளே மந்திரம் இரத்தமாகவும், பதங்கள் முடியாகவும், வர்ணம் தோலாகவும், புவனம் உரோமமாகவும், தத்வங்கள் ஏழவகை தாதுக்களாகவும், கலை அவயமாகவும் கூறப்படும்.

"அத்துவா மூர்த்தியாக வறைகுவ தென்னை யென்னின்
நித்தனாய் நிறைந்த வற்றி னில்சீடா நிலைமையானுந்
சித்துடன்னசித்திற் கெல்லாஞ் சேட்டிடனாத லானும்
வைத்தவா மத்து வாவும் வடிவென மறைகளெல்லாம்"

எனவே தத்துவ நிலையில் இவ்வாறு கூறப்பட்ட அதாவது இறைவனுக்கு அத்வாக்கள் ஆறும் வடிவம், அத்தோடு எங்கும் வியாபகனுமாய் அவற்றை விட்டு நீங்காது சித்துப் பொருள் சடப்பொருள் எல்லாவற்றையும் உடனாய் நின்று செலுத்துவதனாலும் அத்வாக்கள் எனும் இவற்றை மந்திரங்கள் ஈசானம் முதல் அஸ்திரமந்திரம் வரையுள்ள 11 மந்திரங்களையும் ஓம் முதல் மகேஸ்வர உள்ள 54 பதங்களையும், 51 வர்ணங்களையும், 224 புவனங்களையும், 36 கலைகளையும், 5 கலைகளை கும்பத்திலும் பிம்பத்திலும் பின்பு பிம்பசுத்திக்குப் பின் செய்யப்படுகின்றன.

போஹாங்க ஆவாஹணத்திற்கு கலாகர்ஷணமும் அதிகாராங்கத்திற்கு அக்னிகார்யமும் லயாங்கத்திற்கு ஆவாஹணமும் செய்யவேண்டுமென அகோரசிவாச்சாரியார் கூறுகின்றார். அதிகாரங்க ஆவாஹணத்திற்காக அக்னிகார்யம் செய்யப்படுகின்றது. இங்கே கிழக்கு முதலான குண்டங்களில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டு மூர்த்திகளுடன் அந்தந்தப் பதங்களுக்கும் சூர்யன், சந்திரன், ஆன்மாக்களுக்குரிய இயல்புகளையும் பூஜித்தும் ஆகுதி வழங்கியும் பின்னர் இறைவனிடம் பிம்பத்திலிருந்து மூர்த்தி கும்பங்களிலும் ஆவாஹிப்பர். பின் இதே போல் பிம்ப சம்யோஜன காலத்திலும் ஒடுக்கப்படும். இவ்வாறான அட்டமூர்த்திகளிலும் அவற்றின் இயல்புகளால் இறைவன் வியாபித்துள்ள தன்மையை மாணிக்கவாசகரின் திருவாசகத்தில்,

"பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

என வரும் அடிகளால் உணரலாம் (அஷ்டமூர்த்திகளின் தத்துவங்களின் விபரம் தனி அட்டவனையாக இயல் 3 ல் தரப்பட்டுள்ளது)

இனி அஷ்டமூர்த்திகளின் அதிபதியாக நிலம் - தத்புருஷன், நீர் - அகோரம், நெருப்பு - சிகா, வாயு - கவசம், ஆகாயம் - சத்யோஜாதம், சூரியன் - வாமதேவன், சந்திரன் - சிரசு, யஜமானன் - ஹிருதயம் என்ற ஒழுங்கில் மூர்த்திகளும் அதன் அதிபர்களும் விளங்குவர். இறைவனுடைய தூயதிருமேனியே "சப்தபிரம்மரூபம்" என அஜிதாகமமும் பௌஷ்கர ஆகமமும் (பதிபடலம் 54) கூறுகின்றன. சிவஞானசித்தியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திர மந்து வாவின் மிகுத் தொருவடிவமாகத்
தந்ததெ னரனுக் கென்னிற் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ இனிமான் மூன்றா மிவற்றின்மேலாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசக்தி சேர்ந்து நிற்கும்"

சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய வாத லானுஞ்
சத்திதான் பிரேரித் துப்பின் றானதிட் டித்தக்கொண்டே
அத்தினாற் புத்தி முத்தி யளித்தலா லரனுக்கென்றே
வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைகளெல்லாம்"

முதல்வனுக்கு அத்துவா வடிவங்கள் ஆறினுள்ளே மந்திரவடிவமே மிக்கது என்பது வேதாகமங்களின் முடிவு. ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், ஹிருதயம், சிரசு, சிகா, கவசம், நேத்ரம், அஸ்திரம் என்பவையே பிரதான மந்திரங்களாகும். இவை சதாசிவனின் வடிவம் என்னும் பிரிவின்றி இருக்கும் சக்திகள் எனவும் சிவாகமங்களிற் கூறப்படுவன. இருதயம் ஞானம் என்றும், சிரசு மிக்க உயர்ச்சி என்றும், சிகை தத்வயமுடமை, கவசம் காத்தல், நேத்ரம் எல்லாம் அறிகை என்றும் ஸ்திரம் தாழ்தற்கரிய பிரதாபம் என்றும் பெஷ்கரமும், மிருகேந்திரமும் கூறுவன. இவற்றை ஷடங்கம் எனவும் அதாவது 'ஷட் அங்கம் ஆறு அங்கங்கள் எனவும் கூறப்படுவன. இம்மந்திரங்கள் பதினொன்றும் முதல்வனுடைய திரோதான சக்தி தொழில் வேறுபாட்டால் ஈசானம் முதலிய மந்திரங்கள் பெயருடையனவாய் நின்று அதிஷ்டிப்பன. இதனால் தான் இவை இறைவனின் வடிவங்கள் எனப்பட்டன. இனி பஞ்சபிரம்ம மந்திரங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்பன. ஈசானம் - சிரசு, தத்புருஷம் - முகம், அகோரம் - இருதயம், வாமதேவம் - குறுயம் (இரகசியம்), சத்யோசாதம் - பாதம் இவை ஐந்து அங்கங்கள். அத்தோடு பஞ்சபிரம்ம மந்திரங்கள் எனவும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. ஈசானத்திற்கு ஐந்து கலைகள் சதாசிவ மூர்த்தியின் ஐந்து சிரசுகள், தற்புருஷம் நான்கு கலைகள் இவை முகங்கள், அகோரம் எட்டுக்கலைகள் இவை அவரது இருதயம், கழுத்து, தோள்கள், நாபி, வயிறு, பின்புறம், மார்பு எனும் அங்கங்கள், வாமதேவம் பதின்மூன்று கலைகள் இவை சூஸ்யம், தொடைகள், முழங்கால்கள், கணைக்கால்கள், இடுப்பின் மேற்பாகங்கள், இடுப்பின் இரண்டு பதிகங்கள் எனும் அங்கங்கள். சத்யோசாத மந்திரத்தின் எட்டுக்கலைகளே கால்கள் கைகள் மூக்குகள் சிரசின் உச்சி புயங்கள் எனும் அங்கங்கள்.

ஈசானன் உலகமெல்லாவற்றையும் நீறுதல் செய்வது அருள்வது. "ஈச்" ஆகுதல் "ன" என்பது விகுதி. தத்புருஷம் தேவசரீரம் மானுடசரீரம் முதலிய அந்தந்த சரீரங்களே அதிட்டித்து நிற்பன. தத்-அந்த, புருஷம் - புரத்திலிருப்பது, புரம் - சரிரம் , அகோரம் - சாந்தமாயிருப்பது. கோரம் - கடுமை, அ - இன்னம், வாமதேவம் - அறம் பொருள் இன்பங்களை ஆன்மாக்களுக்கு கொடுக்கும் ஒளிமயமானது. வாமம் - அறம் பொருள் இன்பம். தேவம் உடையது. சத்யோசாதம் - உடம்பை உயிர்களுக்கு உடனே தோற்றுவிப்பது - சத்திய - உடனே - ஜாதம் - பிறப்பு என பஞ்சபிரம்ம மந்திரங்களின் இயல்பை மிருகேந்திர ஆகமம் பதிலட்ஷணத்திலும், பௌஸ்கர ஆகமம் பதிபடலத்திலும் காணலாம். சித்தியாரும் பஞ்சபிரம்ம மந்திரங்களை ஏன் ஆகமங்கள் இறைவனின் வடிவம் என்றன என்பதனை,

"மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிஞ் கென்னனெனிற் சாற்றக் கேணீ
முந்திய தோற்றத்தானு மந்திர மூலத் தாலும்
அந்தமில் சந்தி யாதிக் இசைத்தலு மாடுமன்றே"

பஞ்சபிரம்ம மந்திரங்கள் முதல்வனுக்கு வடிவமாக தந்திரங்கள் என்று போற்றப்படுகின்றன. ஆகமங்கள் சொன்ன காரணமெனின் ஏனைய மந்திரங்களுக்கெல்லாம் முன்னர் தோன்றினவாதலாலும் அவற்றிற்குக் காரணமாயிருந்ததாலும் அவை முதல்வனுக்கு வடிவமாகக் கூறப்பட்டன.

எனவே தான் பிரதிஷ்டா காலங்களில் அஷ்டமூர்த்திகளின் அதிபதிகளாக இந்த தத்புருஷம், அகோரம், சிகா, கவசம், சத்யேதசாதம், வாமதேவம், சிரசு, இருதயம் என்பன நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்கின்ற அஷ்டமூர்த்திகளின் அதிபர்களாக பூஜிக்கப்படுகின்றான்.

இறைவன் அஷ்ட மூர்த்தங்களாக வியாபித்துள்ளான் என்பதனை நன்கு உணர்ந்த போதும் இந்த அஷ்ட மூர்த்திகளுக்கும் அதிபர்கள் பூஜிக்கப்படுவது தத்துவ ஆய்வில் நன்கு சிந்திக்கற்பாலது. ஐம்பூதங்களும் சூரியன், சந்திரன், ஆன்மா முதலியவற்றை உள்நின்று இயக்குவன. ஒருவன் உளான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவற்றின் தன்மையைக் கொண்டு இவை அழியும் தன்மை மிக்கன அவை தோன்றி நிலை பெற்று அழிந்து மீண்டும் உற்பத்தியாக்க ஒருவன் வேண்டுமென்பது சைவசித்தாந்தத்தின் கடவுளியல்பின் சிறப்பம்சமாகும். எனவேதான் சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறும்,

"ஒருவனோ டொருத்தி யொன்றென்றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாதலாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான் முதலீறுமாகி
மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னிநின்றே"

இக்காரணத்தினால்தான் இறைவன் அஷ்டமூர்த்தியாகவும் அவற்றின் அதிபதியாகவும் இந்தமந்திரங்கள் தியான மந்திரங்களோடு உருவம் கற்பிக்கப்பட்டு பூஜிக்கப்படுகின்றன. பிரதானகுண்டத்தில் ஈசானம், நேத்திரம், அஸ்திரம், வித்யாதேகம் என்பன இறைவனை விட்டு பிரியா என்பதால் பிரதான குண்டத்திலும் மூர்த்திகும்பத்திலும் பூஜிக்கப்படுகிறது.

இனி இந்த அஷ்டமூர்த்திகளும் லிங்கத்தில் ஒன்பது பாகங்களில் பூஜிக்கப்பட்டு சாந்நித்யம் ஆகும்வண்ணம் ஸ்பர்சாகுதி நடைபெறுகின்றது.

அருவத்திருமேனிகளான சிவம், சக்தி, நாதம், விந்து என்பனவும் உருவத்திருமேனிகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், என்பனவும் அருவுருவத்திருமேனியான சதாசிவமும் சேர்ந்து இந்த ஒன்பது பேதங்களும் லிங்கத்தில் பூஜிக்கப்படுகின்றது. திருமூலரும் ஒன்பது பேதங்கள் பற்றி,

"மலர்ந்த வயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகம் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சக்தி சிவன் வடிவாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தியாமே"

இவ்வாறு சிவன் பஞ்சகிருத்தியங்களை செய்யும் பொருட்டு ஒன்பது பேதங்களாக நடிப்பான் என்கிறது சித்தியார். "சிவஞ்சக்தி நாதம் விந்து சதாசிவம் நிகழுமீசன் உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாய்ப் பவந்தரு மருவ நாலில் குரவநா லுபய மொன்றாம் நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்" எனவே பரம்பொருளே நவபேதங்களாக விரிகிறான் என்பது தெளிவு. எனவெதான் ஸ்பாசாகுதி காலங்களில் பிம்ப சம்யோசானத்தின் போது பிரம்மபாகத்தில் 'மாமூர்த்திகளும், பிருதிவையையும் இவ்வாறே முறையே வி'ஞுபாகத்தில் ஜலமூர்த்தியையும், ருத்ரபாகத்தில் அக்னிமூர்த்தி யையும், மகேசபாகத்தில் வாயுமூர்த்தியையும், சதாசிவபாகத்தில் ஆகாசமூர்த்தியையும், பிந்துபாகத்தில் சூரியனையும், நாதபாகத்தில் சந்திரனையும் (கலை) சக்திபாகத்தில் யஜமானனையும் (ஆன்மா) சிவபாகத்தில் சிவத்தையும் சமயோஜிக்கப்படுகின்றது. பிருதுவி முதல் எட்டும் இறைவனுக்கு எண்வகைச் சரீரங்கள் ஆதலால் எண்வகைக் குண்டத்திலும் கலந்து நின்று பிரதான குண்டத்தில் தோன்றியபடியே ஒடுங்குமாதலால் தான் பிரம்மபாகம் முதலாகக் கொண்டு இறுதியில் சிவபாகத்தில் ஸ்பர்சாகுதி நிறைவுறுகின்றது.

இதேபோல் நவகண்டஸ்பர்சாகதியில் மூர்த்தீசர்களோடு மூர்த்தீசிகளும், தத்வேசர்களோடு தத்வேசிகளும், பூஜிக்கப்படுகின்றனர். இவர்கள் கிரமமாக வானம், ஜேஷ்டா, ரௌத்ரி, காளி, கலவி, கரணி, பலவிகரணி, பரப்ரதமணீ, சர்வபூததமனி என தத்வ சக்திகளாகவும் மூர்த்திகளின் சக்தியாக தாரிகா, தீபிகா, பலோத்கடா, ஜ்லோத்லநா, விபவி, தாத்ரி, உக்ரா, சேதனா, என எண்வகைச் சக்திகளும் பூஜிக்கப்படுகின்றன.

"சக்தியாய் விந்து சத்தியாய் மனோண் மணிதானாகி
ஒத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணியாகி
வைத்துறுஞ் சிவறிக் கிங்ஙன் வருஞ்சக்தி யொருத்தியாகும்
எத்திறத் நின்றான் னீச னத்திற மவனு நிற்பான்"

எனவரும் அடிகள் மூலம் இறைவன் எவ்வடிவம் கொள்வானோ அவ்வாறே அவளும் கொள்வதால் இக்கிரியைகளில் சக்திகளும் பூஜிக்கப்படுகின்றனர்.

சுத்தசிவசோதி நிஷ்களத்தில் நின்று உண்டான எல்லை கடந்த வட்டவடிவமான பரபிந்துவையுடைய நாதமான சிவம் தோன்றி அதில் நின்று எல்லைகடந்த பராசக்தி தோன்றும். இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று எல்லைப்பட்ட அபரநாதம் தோன்றும். அதில் நின்று ஆதிசக்தி தோன்றி உலகவியாபக பேதத்தால் இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி, தோன்றும். மேலே கூறிய அபரபிந்துவாகிய பராசக்தி முதல் பஞ்ச சக்திகளில் நின்றும் முறையே சிவசதாக்கியம், அமூர்த்திசதாக்கியம், மூர்த்திசதாக்கியம், கர்த்துரசதாக்கியம், கல்மசதாக்கியம், எனும் பஞ்சசதாக்கியங்கள் தோன்றும். இவற்றுள் கன்மசதாக்கியம் என்பது ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கர் ஆவுடையாரின் உருவமாகும். இதுவே அருவுருவமாகிய சதாசிவருபமாகும். இச்சதாசிவத்தினின்று மனோன்மணியும் பின் ஏனைய ஐந்து மூர்த்திகளும் அவர்களின் சக்திகளும் தோன்றுவர்.

பிரதான கும்பத்தில் பிம்பத்திலிருந்தும் பின் ஸ்பர்சாகுதி நிறைவுற்ற பின் கும்பாபிஷேகம் நிகழ்வதற்காக பிரதான கும்பம் வீதிவலம் வந்து கர்ப்பக்கிருகத்தில் தண்டிலத்தில் வைத்து ஸ்வர்ண நாடிசந்தானம் பிம்பத்திற்கும் கும்பத்திற்கும் இட்டு லயாங்க ஆவாஹணம் செய்யப்படும். இதில் ஈசான-ாதி பஞ்சபிரமம், வித்யாதேகம், நேத்திரம், அஸ்திரம், சக்திதத்துவம், இச்சா, ஞான, கிரியா, சந்திரன், சாந்திய கலை முதலான ஐந்துகலைகள் பஞ்சசாதக்கியங்கள் அமூர்த்திசதாக்கியம் லிங்கம் போலவும் மூர்த்திசதாக்கியம் எரிகின்ற அக்னிக்கு சமமான திவ்ய லிங்கமாகவும், தர்மசதாக்கியம் லிங்க பீடமாய், நாதம் லிங்கவடிவமாகவும் நாதபிந்து வடிவமாகவும் பூஜித்து மனோன்மணி சக்தியையும் பூஜித்து அதன்மேல் பும்ஸ்தத்வம் வரை அவாஹித்து சகள, நி'கள, வடிவினராய் உள்ள சதாசிவப் பெருமானை லிங்கவடிவில் சாந்நித்தியமாகும் பொருட்டு ஆவாஹிப்பர்.

இவ்வாறு செய்யும் போது உயிர்களில் பக்குவ நிலைக்கேற்ப அறிவு இச்சைகளையும் தனு கரண புவன போகங்களையும் இறைவன் கொடுப்பார். ஆன்மாக்களின் இத்தனுவாகிய சரீரத்தைக்கொண்டு சிவ சாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவுரைக்குத் தலைப்பட்டு பதிபுண்ணியமாகிய கும்பாபிஷேகம் முதலிய சிவதர்மத்தில் பங்குபற்றி தரிசிக்க வேண்டியது முதற்கடமையாகும். அங்ஙனம் தரிசிக்கும் அன்பர்கள் ஊன்றிக்கவனித்து உணர்ந்தால் ஸ்பாசாகுதிக் கிரியையில் காணப்படும் சமயதத்துவ சிந்தனைகள் நன்கு புலனாகும். சிவாகமங்களில் கூறப்படும் கும்பாபிஷேகக் கிரியையின் முக்கிய நோக்கம் அனாதிமலமுக்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதி எனினும் அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கி போகமோட்சங்களையடைய ஆலயத்தில் நிறுவப்படும் அருட்கோலத்திருவுருவில் கருணையே உருவாகும்படி பிராத்தித்து அபிஷேகத்திலே கும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தியாகும்.

## அடிக்குறிப்புக்கள


01. கா. கைலாசநாதக்குருக்கள், சைவத்திருக்கோயில் கிரியைநெறி, 2ம் பதிப்பு, கொழும்பு, 1992, பக்கம் 3 - 4.

02. ப. கோபாலகிருஷ்ணஐயர், யாழ்ப்பாணம், இந்துப்பண்பாட்டு மரபுகள், யாழ்ப்பாணம், 1992, பக்கம் 45.

03. சிவஸ்ரீ. ச. குமாரசாமிக்குருக்கள், அச்சுவேலி, சிவலிங்கப்பிரதிஷ்டா விதி, கும்பஸ்தாபனம், 1953, பக்கம் 50.

04. பகவத்கீதை, 3 : 14.

05. கா. கைலாசநாதக்குருக்கள், சைவத்திருக்கோயில் நெறி, 1992, பக்கம் 29.

06. திருமூலர் திருமந்திரம் 7ம் தந்திரம், கழகவெளியீடு, 1994, சதாசிவலிங்கம் 1705.

07. கா. கைலாசநாதக்குருக்கள், சைவத்திருக்கோயில் கிரியைநெறி, 1992, பக்கம் 40.

02. சிவஞானசித்தியார், சுபக்கம், 1971, 1 : 2 , 67.

03. மேற்படி, 1 : 2 , 76.

10. மேற்படி, 1 : 2 , 77.

11. மேற்படி, 1 : 2 , 78.

12. மேற்படி, 1 : 2 , 79.

13. மேற்படி, 1 : 21.

14. திருமந்திரம், 7ம் தந்திரம் 1745.

15. சிவஞானசித்தியார், 2 : 3 , 164.

16. மேற்படி, 2 : 3 , 165.

17. சிவஸ்ரீ. கா. கைலாசநாதக்குருக்கள், கும்பாபிஷேகதத்வம், புங்குடுதீவு, அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் 1973, பக்கம் 6.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஐந்து

## கிரியைகளில் ஞானபாத சிந்தனைகள்

இந்தியாவில் சமயமென்பது ஒரு வாழ்க்கை முறையே ஆகும். அதன் முடிவு மனிதனை அறிவின்மையினின்று விடுவிப்பதே. குறிக்கோளை அடைய பயனுள்ள வழியை அமைத்துக்கொடுப்பது சமயத்தின் கடமை. அவ்வகையிலே சைவசமயமரபில் பரம்பொருளை அடைவதற்குரிய வழிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் சரியை புறத்தொழில் மட்டும். கை, கால் முதலிய உறுப்புக்களால் நிகழ்த்தி இறைவன் திருமேனியைக் குறித்து நிகழ்த்தும் வழிபாடு. இங்கு அறிவு பெரிதும் தொழிற்படும் ஏது இல்லை. கிரியைநெறி அகத்தேயும், புறத்தேயும் நிகழ்வது. இதில் இறையன்பு சரியைநெறியைக் காட்டிலும் முதிர்ந்து மிகுந்து காணப்படுவது. கிரியை இறைவனின் உருவத்திருமேனியிலே பெரும்பாலும் நிகழ்த்தப்படுவது.

இது நித்தியம், நைமிதிதியம், காமிகம், எனும் மூவகைத்து: ஆன்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் நிகழ்வது. இங்கு வழிபடுவோன் மைந்தன்நிலையினை வகிக்கின்றான். தந்தை மைந்தன் தொடர்பே இங்கே இறைவனுக்கும் வழிபடுபவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு. எனவே இக்கிரியை நெறி புத்திர மார்க்கம் எனக்கூறப்பட்டுள்ளது. தந்தை மைந்தன் உறவு அன்பை அடிப்படையாகக் கொண்டது. அன்பெனப்படும் பக்தி - கிரியை நெறிக்கு அத்தியாவசியமானது. கிரியைநெறி சித்தசுத்தியை உண்டாக்கும். இதனைத்தொடர்ந்து வழிபடுவோன் தன்னை அறிகிறான்.

யோகநெறி அகத்தே மட்டிலும் நிகழ்வது. இது இறைவனின் அருவத்திருமேனியை கருத்திற் பதித்து நிகழ்த்தும் வழிபாடு. "யுஜ" என்பது இணைத்தல், இயமம், நியமம், ஆசனம் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்ட பகிரங்க யோகப்பயிற்சியாலும், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய அந்தரங்க யோகசாதனைகளால் இறைவனுடன் ஒன்றும் நிலை யோகபாதமாகும்.

ஞானநெறி அறிவு தொழிற்படும் நிலையிற் கைகூடுவது. இங்கு வழிபடும் இறைவன் உருவம், அருவம், அருவுருவம் ஆகிய நிலைகளைக் கடந்தவன். அவன் பேரருளுக்குப் பாத்திரமாகி அவன் அறிவிற்க அவனை உள்ளவாறு அறிவதற்கு உரியது ஞானவழி. ஓரளவிற்கு ஞானநூல்களின் துணையாலும் ஞானாசிரியரின் அறிவு மொழியாலும் இறைவன் திருவருளாலும் ஞானவழியைக் கடைப்பிடிக்கும் போது ஆன்மாக்களுக்குக் கிட்டும் அகண்டாகாரமானதும் நித்தியமானதும் எங்கும் வியாபகம் பெற்றதுமான நிலை எய்தலே இவ்வழியைக் கடைப்பிடிப்பதன் பெறுபேறு. இந்நான்கு நெறிகளும் அரும்பு, மலர், காய், கனி எனப்படிப்படியாக முதிர்ச்சியும் மாற்றமும் பெற்று ஒன்றே பல நிலைகளில் நிற்கும் வரிசைகாட்டி விளக்கப்படுவன.

ஒன்றன்பின் ஒன்றாக இந்நான்கு வழிகளையும் மேற்கொள்பவர்கள், இறைவனை அகத்தும் புறத்தும் இருத்தி வழிபடல் அவசியமாகின்றது. ஆகவே ஆலயவழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆலயங்களில் இறைவன் மூர்த்திபேதங்களாகவமையும் உருவத்திருமேனியையும், அருவுருவத் திருமேனியையும், அருவத்திருமேனியையும் லிங்கவடிவினையும் கொண்டு எழுந்தருளுவான். இவற்றைப் புறக்கண் கொண்டுபார்த்து அனுபவம் மிக்கோருக்கு அவனது திருமேனி அவர் அகக்கண் கொண்டு உள்முக நோக்காகத் தோன்றும் நிலையினை எய்துவிக்கும் மெய்யடியார் அகத்தம், புறத்தே தேவாலயங்களிலும் நிகழ்த்தும் வழிபாட்டினை அண்ணல் அன்புடன் எற்றருள்வான்.

இறைவழிபாடு இருவழியாக நிகழ்கின்றதைக் காண்கின்றோம். இவ்விரண்டினுள் வழிபாட்டிற்குரிய திருக்கோவிலில் தீர்த்தம், தூபம், தீபம், அர்ச்சனைப்பொருட்கள், பூமாலை, நைவேத்தியம் முதலிய பொருட்களையெல்லாம் துணைகொண்டு புறத்தே நிகழத்தும் பூஜை நாமனைவரும் புறக்கண்ணாலே காணத்தக்கது. அனைவரும் அறிந்தது.

இவ்வாறு புறத்தோற்றம் பெறாத இப்பொருட்களனைத்தையும் அகக்கண்ணால் கண்டு நுண்ணியதாக நெஞ்சினுள் கற்பித்து வழிபடுவது. அகத்தில் நிகழும் வழிபாடு ஆதலால் அது அந்தாயஜனம் எனப்பெயர்பெற்றது. புறத்தே புலனாகும் புறக்கிரியை வழிபடநிற்பவர்களை ஞானவழியை நோக்கி இட்டுச்செல்ல இது முக்கியமாதல் பற்றியே அகமம் இதனைக் கிரியைகள் எல்லாவற்றிற்குமே இன்றியமையாததாகக் குறிப்பிடுகின்றன. அந்தர்யாகம் இன்றெல் வெளியே நிகழ்த்தப்படும் வெளிப்பூஜை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்தராது. அந்தர் யாகத்தை முதலில் நிறைவேற்றியே சிவாச்சாரியாகள் யாகத்தைத் தொடங்குதல் வேண்டும். என அஜீதாகமம் கூறுகின்றது.

அந்தர்யாகம் கட்டாயமாக நிகழ்த்தப்படவேண்டுவது என்பதை சித்தாந்த நூல்கள் எடுத்துக் காட்டுகள் மூலம் நம்மைத் தெளிவாக உணரவைக்கின்றன. அந்தர்யாகபூசையின் இயல்பினையும் பயனையும் சிவஞானசித்தியார்,

"அந்தர்ய கந்தனை முத்தி சாதனமா
அறைந்திடுவரது தானு மான்மசுத்தியாகுங்
கந்தமலர் புகை யொளிமஞ் சனமமுது முதலாகக்
அண்டளவெ லாமளத்தாற் கருத் கொண்டு
சிந்தை தனி லர்ச்சிக்கச் சிவனை ஞானத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமேல் வொளிபோல மருவியர லுள்ளதே
வறவரவந் திடுவன்பின் மலமான தறுமே"

ஆன்மாவிற் சிவனை அர்ச்சித்தலும் அருள்வழிநின்று சிவனை தியானித்தலுமாகிய அகப் பூசனையாற் சிவம் விளக்கமலம் நீங்கி ஆன்மசுத்தியடைதலால் அவ்வகைப்பூசனையும் முத்திசாதன-மாம். உள்ளே சிவத்தை ஆவாஹித்துப் பூஜை செய்யாது வெளியே பூஜை செய்தல், உள்ளங்கையிலிருக்கும் பாலை விடுத்துப் புறங்கையை நக்கும் செயலை ஒக்கும். தேவாலயம் முதலிய புறவழிபாடு அகத்தே நிகழும் அந்தர்யாகம் முதலிய உள்வழிபாட்டினை சிறிதாக இடம்பெறச்செய்யும். இவ்வழிபாட்டால் அனுபவம் பெருகி வளரும் பொழுது சிவஞானப் பேறு கிட்டும். இது ஈற்றில் வீடுபேற்றை அடைவிக்கும். மறைநூல்களை தன்னையடையும் வழிகளாக கொண்டவன் இறைவன். அவனையடைய அந்நூல்களின் வழிநின்று தசநாடிகளையும் சுத்தம்செய்து ஐம்புலன்களை தன்பின்னால் வரச்செய்யின் சிவனது திருவடி கிட்டும் என்பதனை திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்.

" கோயில்கொண் டாவடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டானடி நாடிகள் பற்றுள
பூசைகொண்டின்புல னைந்தும் விறகிட்டு
வாயில்கொண் டானெங்கள் மாநந்திதானே"

அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் உண்டெனும் அடிப்படையில் "புறத்தே பூசைக்கு வேண்டும் ஆழ்நிலை இறைவனை அகத்தே பூசை செய்வதற்கேற்றதாக எம் உள்ளத்திலும், அதை நடுவே கொண்டமையும் எம் சரீரத்திலும் அமைந்துள்ளது" என்பதனை நமது சாத்திரங்கள் தனித் தனியே சுட்டியுள்ளன. பஞ்சபூதங்களும், முத்தானங்களும், மும்மலர்களும், பதினான்கு உலகங்களும், மலைகளும், தீவுகளும், சமுத்திரங்களும், புறவுலகிற் காண்பதுபோல சரீரத்திலும் காணப்படுமாற்றை தனித்தனி காட்டிவிளக்குவன. புறவுலகில் உயிர்கள் தோன்றி ஒடுங்கும் நிகழ்ச்சியினை நிகழ்த்தி இவை சரீரத்திலும் நிகழ்தலையும் நூல்கள் உணர்த்துகின்றன.

உடம்பில் தலை ஸ்ரீபர்வதமாகவும், நெற்றி திருக்கேதாரமாகவும், புருவமத்தி காசி யாகவும், குஹ்யம் குருச்சேத்திரமாகவும் இதயம் பிரயாகையாகவும், இருதயத்தின் நடு சிதம்பரமாகவும், திருத்தலங்கள் உடம்பில் விளங்குமாற்றைச் சூதசங்கிதை எடுத்தோதுகின்றது. நம்முடையிற் காணப் படும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரமம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை முதலிய ஆறாதாரங்க ளாக முறையே திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்னும் தலங்கள் அமைவதையும் மதுரையம்பதி பிரமாந்திரமாய் விளங்குவதையும் திருவிளையாடற் புராணம் கூறும்.

இவ்வாறாக கிரியை நெறியில் நெடுங்காலமாக ஈடுபட முதிர்ச்சி ஏற்படும். அதன்விளைவாக கிரியைபற்றிய அறிவும் அனுபவமும் இவ்விரண்டினால் பரிபக்குவமும் ஈற்றில் சித்தசுத்தியும் உரிய வேளைகளில் ஏற்படும் பொழுது மறைபொருளாய் உணர்த்தப்படும் தத்துவங்கள் ஒவ்வொன்றாகத் தானே விளக்கம் பெறும்.

பிரதிஷ்டை உள்ளிட்ட பெருங்கிரியைகளில் ஆங்காங்கு இன்றியமையாது இடம்பெற்றுக் காணப்படும் பூதசுத்தி, அந்தர், யஜனம் முதலிய இக்கிரியைகள் கிரியை வழியிலிருந்து ஞானவழிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச்செல்லுமாறு உபாசனை ஈர்க்கும் இயல்பினவாக இருக்கக்காண்கிறோம். இக்கிரியைகளில் ஈடுபட்டு பக்குவம் முதிர்ந்து வரும் வேளை குருவருளும் கைகூட தனி ஞான வழியிலேயே செல்லும் பேறு விரைவில் கிட்டும்.

இவ்வகையிலேதான் ஸ்பர்சாகுதி கிரியைக்கு முன்னோடியான அனைத்துக்கிரியைகளிலும் சிவாச்சாரியா்கள் பூதசுத்தி, அந்தர்யாகம், சகளகரணம் என்பன செய்யப்படுகின்றன.

**பூதசுத்தி**

பூதங்களைச் சுத்தி செய்தல் பிருதுவி முதல் ஐந்து பூதங்களையும் இவை சம்மந்தமான ஆத்மாவையும் சுத்தப்படுத்துவதாகும். பிரதிஷ்டா ஆரம்பகாலக் கிரியையாக அமைவது ஆசார்யபரணம் ஆகும். அப்போது பிரதான குருவுக்கு சகல உபசாரங்களும் கொடுத்து குருவே நீங்கள் பிரம்மாவாகவும், வி'ஹுவாகவும், உருத்திரனாகவும், பரப்பிரம்மாவாகவும் இருக்கின்ற படியால் இச் சிவகைங்கரியத்தை செய்து பக்தர்களை சிவானுக்கிரகத்திற்கு பாத்திரா்களாக்குதல் வேண்டுமென வழிபடப்படுகின்றார். எனவேதான் சிவாச்சாரியன் ஆன்மாவானது தனது அறிவுமயங்கி மாயையின் வயத்தால் மாயை செய்விக்கின்ற வேலைகளை நானே செய்கின்றேன். எனது சொத்து என்று அகங்காரம் மமகார மேலீட்டால், செய்கின்ற நினைக்கின்ற குற்றங்களை நீக்கி ஆத்மாவை சுத்தப்படுத்துவதாகும். இவ்வாறு சுத்தப்படுத்திய பின் இறைவனை பரார்த்த பூஜையில் ஈடுபடுத்துவர்.

இந்தப் பூதசுத்தியானது ஆத்மாக்களை அடைகின்ற பதப்பிரார்த்தியினாலும் தீட்சை பேதங்க ளாலும் ஐந்து வகைப்படும். இதில் குருமூர்த்தியால் (சிவாச்சாரியார்) சிவப்பிரத்தியங்களாகையாலும், சிவாஸ்ரமீகளாகவும், ஆதிசைவர்களாகவும் இருப்பதால் சிரு'டிக் கிரமம், நிதிக்கிரமம், திதிக்கிரமம், சம்ஹாரக்கிரமம், திரோபவக்கிரமம், அனுக்கிரகக்கிரமம் என்பவற்றுள் ஐந்தாவதாகிய அனுக்கிரகம் பூதசுத்தியை செய்தல் எனப்படும்.

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவித பாசமறுப்பார்"

தனது தேகமானது பிருதுவி முதலிய பஞ்ச பூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக்களால் முளையுண்டானதாகவும் ராகம், துவேசம், தர்மம், அதர்மம், யோகங்கள் வேராகவும் வித்தை அவித்து அதிபர்களால் ரட்சீக்கின்றதாகவும், கலைமுதலிய தத்துவங்கள் சாரமாகவும் தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளைகளாகவும், விஷயம் தளிராகவும், பிரபஞ்சம் புஷ்பமாகவும், புத்தி விவசாயிகள் சங்கற்ப பழமாகவும் பழரசத்தை புருஷனாகிற பட்சி புசிக்கிறதாகவும் பாவித்து வேர் மேலாகவும் தளிர் கீழாகவும் ஆலமரத்தைப் போல் தியானித்து தலைமுதல் பாதம் வரை ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பிருதுவி இவைகள் ஒன்றிலொன்று சேர்ந்து விதையாகவும் பாவித்து ஜாதி, குலம், குணம் முதலியவற்றிற்கு காரணமான தூலதேகத்தை தியானித்து யோனி ஷேத்ரத்தில் பிரம்மன் சிருஷ்டிப்பவராகவும், விஷ்ணு காக்கின்றவராகவும் தியானித்து நமது கர்மம் மூலமாகிய கிழங்காகவும் ஆணவம் முளையாகவும் தர்மா தர்மத்தைப் பாவித்து அத்துடன் ராகத்வே' மோகம் உபமூலமாகவும் அவித்தை மாயா கர்மத்தில் இருந்ததாகப் பாவித்து வித்தை பரமெனவும் இந்தப் பரம்பரி பாலிப்ப தாகவும், பாவித்து நடந்து நடக்கின்றது நடக்கப்போகின்றது ஆகிய காலத்து விருட்சம் அசையா திருக்கும் பொருட்டு காசாரமாகப் பாவித்தல் வேண்டும். இனி தன் பாத்திர இந்திரியம் ஞானத்திரியம் என்றும் கன்மேத்திரியம் என்றும் இரண்டாகப் பிரியும். அதைக் கொப்பில் கிளையாகவும் தியானித்து சப்தம் முதலிய ஐந்தையும் ஐந்து துளிராகவும் புத்தி சங்கல்ப்ப பழக்கத்தை பனி ரூபமான ஆன்மா புசிக்கின்றதாகவும் தியானிக்க வேண்டும்.

ஓம் எனும் மந்திரத்தை ஐந்து முறை உச்சரித்து ஆலமரத்தை அசைவற்றதாகப் பாவித்து பின்னர் ஹும் எனும் மந்திரத்தை மூன்று முறை உச்சரித்து வலதுகால் கட்டைவிரல் முதல் உண்டாகும் காலாக்னியால் உலர்ந்த பத்திரத்தை தசிக்கப்பட்டதால் தியானித்து ஐஹம் எனும் மந்திரத்தை இரண்டுமுறை உச்சரித்து தகித்த சாம்பலைப் பரந்ததாகத் தியானித்துப் பின்னர் ஹிம் எனும் மந்திரத்தை ஒருமுறை உச்சரித்துப் பரந்த சாம்பல்களை சேர்த்து அந்தச் சாம்பலை சுத்தஸ்படிகமாகவும் நிர்மலமாகவும், தியானித்து முன்கூறிய ஆகாயத்துள் அடங்கியிருக்கும் சிவாப-ின்னமான ஆத்மாவை சிவனிடத்தில் சேர்த்து எல்லா உபாதைகளில் நின்று ஓம் ஹாம் சிவாய வெள'ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சிகையில் நின்றும் அதே முகமாக (உள்முகமாக) இருக்கும் பத்மத்தில் அமிர்தம் பெருகி வருவதாய் தியானித்து உள்முகம் புறமுகம் நனைத்துப் பின் இருதய கமலத்தில் ஓம் அகார, உகார, மகாரமும், அதிக ஒளியும் சர்வவல்லமை முதலிய ஆறு குணங்களோடும் எல்லா வித்தைகளையும் உண்டாக்குகின்றதாகப் பாவித்து இருதய கமல கர்ணிகையின் நடுவில் இந்த ஆத்மா புரியப்பட்ட தேகமுடையதாய் தியானித்து இந்த ஆத்மாவிற்கு உள்ளிருக்கும் பரமாத்ம ஸ்வரூபமானது எல்லா ஐவரியங்களையும் கொடுப்பதாகவும் சாந்தரூபமாகவும் ஆறு குணங்களாய் நிறைந்துள்ளதாயும் உள்ள ஆத்மாவை சிவஸ்வரூபம் செய்து கலைகளைத்தாண்டி பஞ்சபிரம்மத்தை ஆவாஹித்து பிரசாத மந்திரத்தை தேஹத்தில் ஆவாஹித்து அஸ்திரமந்திரத்தால் திக்குப் பந்தமும் கவச மந்திரத்தால் மும்முறை சுற்றி கலாமயத்தைத் தாண்டி சிவஸ்வரூபத்தை உண்டாக்கவேண்டும். பின் தனது இடைந-ாடியால் பரகமும், சுழுமுனைநாடியால் கும்பகமும் செய்து ஜீவாத்மாவைக் கொணர்ந்து உண்டான அமிர்தத்தால் தனது தேகத்தை நனைத்து சிவனோடு ஐக்கியம் செய்தலே அனுக்கிரகபூதசுத்தியாகும் என ஆகம நூல்களிலும் பத்ததிகளிலும் விளக்கப்பட்டுள்ளன.

**அந்தர் யாகம்**

அந்தர் யாகம் என்பது அந்தர் முகமாக சிவபெருமானை மானசீகமாக வழிபடல் ஆகும்.

"அர்ச்சித்தா னந்தர் யாகம் புரியாதே பலத்தை
வர்ச்சித்தா னென்றே மதி"

அந்தர் யாகத்தில் கூறப்படும் கிரியையாவது மானசீகமாக நிகழ்வன. சுத்தமாயை வடிவான அர்க்கிய பாத்திரத்தை இதய கமலத்தில் கதளி பத்திரமூலத்தடியில் (வாழைமரஅடி) வைத்து பிந்துஸ்தானத்திலிருந்தே வெளியே பெருகும் அமிர்தமாகிய நீரினால் அதை நிரப்பி உரியவாறு அர்ச்சித்து அந்நீரினால் மானசீகமான பூஜையில் ஈடுபட்டுள்ள சிவாச்சாரியார் தன் தலையில் தெளித்தல் வேண்டும். இருதய கமலநடுவில் உள்ள கர்ணிகையில் ஆர்ய-சந்திர அக்னி மண்டலங்களைப் பாவித்து முறையே சதாசிவம், மகேசம், சிவம் இவர்கள் இருப்பதாகவும் இந்த இருதயத்தில் தானே தோன்றிய கிழக்கிலிருந்து வெளிப்போந்ததும் உடலின் நடுவில் விளங்குவதும் ஒன்பது அங்குலப்பிரமாணம் வாய்ந்ததும் நான்கு அங்குல நீளமும், அதேயளவு உயரம் வாய்ந்ததும், முட்டை வடிவினதும், தோல் முதலியவற்றுடன் விளங்கவதுமான இதயகமலத்தை கர்ணிகையோடு கூடியதாக தியானித்தல் வேண்டும். அங்கு இறைவனை ஆசன, மூர்த்தி மூலமாக தியானித்து ஆவாஹித்தல் வேண்டும். அவ்வேளையில் இறைவன் மூன்று நிலைகளில் தோன்றி அருளுவார்.இம்மூவகைத் தோற்றங்களும் அநாஹத சிவனிடம் பூஜையும், அமநஸ்க சிவனிடம் ஹோமமும், பரமசிவனிடத்து சமாதியும் நிகழ்த்தல் வேண்டும். இதயகமலத்தில் இறைவனை பஞ்சபிரம்ம மந்திரங்களாலும், ஷடங்க மந்திரங்களாலும், மானசீகமாக அர்ச்சிப்பதற்கு உரிய எட்டுவகைப்பூக்கள் அகிம்சை இந்திரிய நிக்கிரகம்,ஷாந்தி, தயை, ஞானம், தபம், சத்யம், பாவம் என்பன 'மை அர்க்கியம் பாத்திரமாயமாயுள்ள அமிர்தஸ்வரூபமான சீர் இங்கு அபி'கேத்திற்குரியது. அடுத்து அமிர்த பிரவாகத்தால் அபிஷேகம் நிகழும்.

புத்தி, குங்குமமும், கர்ப்பூரமும், கஸ்தூரியும், புனுகும், சந்தனமும் கலந்த வாசனைத் திரவியங்களால் பூசும் உபசாரப்பொருட்களாகும். ஐம்பூதங்களால் ஐவகை உபசாரமும் நிகழும். பஞ்சபூதங்களான பிருதிவி முதலான நைவேத்யம், நீர், கண்ணாடி, விசிறி, ஸ்தோத்திரம் ஆகிய ஐவகை உபசாரப் பொருட்களால் அர்ச்சித்து இவையனைத்தையும் சூக்கும சரீர யோகத்தால் சேமித்து மானசீக சிவபூஜை செய்தல் வேண்டும். இதயகமலத்தில் வித்யா பீடத்தில் சிவனை ஆசனமூர்த்தி மூலம் மானசீகமாக அர்ச்சித்து தியானித்து முன்கூறிய பொருட்களை மனதால் நிவேதித்து மானசீகமாக பஞ்சமுகி முத்திரை காட்டி நாபி குண்டத்தில் தானாகவே உற்பத்திபெற்ற அக்னியில் ஹோமம் செய்தல் வேண்டும்.

இவ்வக்னி காரியத்தில் சுத்தமாயை குண்டமாகும். இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்று சக்திகள் மூன்று மேகலைகள்: சுழிமுனை இருக்கு: இடை சுருவம்: மூலாதாரம் நெய்க்கிண்ணம். எல்லாத்திரவியங்களுடன் கூடிய பிரபஞ்சமே ஹோமத்திற்குரிய பொருட்கள். பிந்துவிலிருந்து வெளிப்போகும் அமிர்தம் நெய். நாபி குண்டத்தில் தானாகவே தோன்றிய அக்னியில் ஞானாக்னியை துவாத சாந்தத்திலிருந்து சுழிமுனை வழியே நாபி குண்டத்தில் சேர்ப்பித்துப் பூரகஞ் செய்வதனால் பெருகச் செய்யப்படும் நெய்யினால் நூற்றெட்டு ஆகுதிகள் முதலான ஆகதிவகைகளைக் கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோமஞ் செய்தல் வேண்டும். ஹோமத்தின் முடிவில் சுழிமுனையினை சிருக்காகக் கொண்டு பூர்ணாகுதி நிகழ்த்துதல் வேண்டும். இது ஹோமம் ஆகும். பின்னர் சமாதிநிலை நிற்றல் கூறப்படுகின்றது . ரேசகும்பகம் செய்து அனாகத சிவன் அமனங்கசிவனிலும், அமனங்கசிவன் பரமசிவத்திலும் ஒடுங்கிய-தாகத் தியானித்து சச்சிதானந்த ரூபியான பரமசிவனிடத்தில் லயித்தலான சமாதிநிலை கூடல்வேண்டும். உள் நிகழ்த்திய பூஜையை இறைவனிடம் சமர்ப்பித்து அந்தாயாகத்தை முடித்தல் வேண்டும். இதேகிரியை மார்க்கநிலையை சித்தியாரும்,

"நாட்டுமித யந்தானு நாபியினி னடியாய்
ஞானமுதற் றத்துவத்தா லெண் விரணாளத்தாய்
மூட்டுமோ இனிசுத்த வித்தையால் ரெட்டாய்
முழுவித எழுட் டக்கரங்கண் முறைமையின் னுடைத்தாய்க்
காட்டுகம லாசனமே லீசர்சதா சிவங்கள்
கலாமூர்த்த மாமிவற்றின் கண்ணாகுஞ் சக்தி
வீட்டையருள் சிவன்மூர்த்தி மானசித் சத்தி
மேலாகி நிற்பணிந்த விளைவறிந்து போற்றே"

## சகளீகரணம்

கரசுத்தி கைகள் ஒன்றால் ஒன்றை உள்ளும் புறமும் துடைத்து அவற்றிலுள்ள அசுசிகளைத் தகித்த (எரித்து) பாவனையாகும்.

கரநியாசம் - இருகைகளையும் சிவனுக்குரிய கமலாசனமாகப் பாவித்து அதிலே சிவனை அர்ச்சித்து அக்கைகளைச் சிவ வடிவவினவாக்கல். இருகரங்களும் சக்திவடிவினவாக அவற்றை குவித்தவிடத்து அங்குட்டங்களொழித்த மற்றையெட்டு விரல்களும், இருதய கமலத்தின் எட்டு இதழ் வடிவினவாயும் மத்தியில் வைத்து அங்குட்டவிரல் அக்கமலத்தின் கர்ணிகை வடிவினதாயும் பாவிக்கப்படும் குவிந்த இருகைகளின் நடுவில் அங்குட்டவிரல்களினால் சிவாசனை மந்திரத்தால் ஆசனம் கற்பித்து அதில் சிவமூர்த்தி மந்திரத்தால் உருவமாகிய மூர்த்தியை ஆவாஹனம் செய்து சிருஷ்டி, திதி, சங்கார, கிரமத்தில் அதிகாரத்தக்கிரியை ஐந்து விரல்களிலும் ஈசானாதி பஞ்சப்பிரம்ம மந்திரங்களினால் நியாசித்து (தொடுதல்) சிவனுடைய சிரசு முதலிய அங்கங்களை அமைத்து பூஜித்து (இருதயம், சிகை, சிரசு, கவசம்(தோள்), நேத்ரம்(கண்), அஸ்திரம் எல்லா அங்கங்களும்) மேல் கைக-ளின் நடுவில் அங்குட்ட விரலால் வித்தியரேஹ மந்திரத்தால் அருவரூபமாகிய சிவலிங்க மூர்த்தியில் வித்தியாதேகம் அமைத்துப் பூஜித்து இருகைகளின் நடுவிரல் மூன்றாலும் நேத்திரமந்திரத்தால் நேத்திரமமைத்து பூஜித்து அங்குட்ட விரல்களினால் சிவமூலமந்திரத்தால் நியசித்து அச்சிவலிங்க மூர்த்தியில் நிஷ்களமாகிய சிவனை ஆவாஹித்துப் பூஜித்து முதல் மூன்று விரல்களிலும் இருதயம், சிரசு, சிகை மந்திரங்களால் முறையே அவ்வவ்வங்கங்கள் அமைத்துப் பூஜித்து மேல் கவச மந்திரங்களால் அவகுண்டஞ் செய்து அவ்வாறு பிரசன்னமாக்கிய சிவனைச் சூழ மதில் உண்டாக்கி அஸ்திர மந்திரத்தால் ஒவ்வொருள்ளங்கையையும் மற்றைய தன் அணிவிரலால் நியசித்தலுமாகிய பாவனையாம். மேல் சிவமூலமந்திரத்தால் இரு கரமுங்குவித்து பரமீகரணம் செய்தல் முன்வைத்த மந்திரமனைத்தையும் ஏகீபாவஞ் செய்தலாம். (பரமீகரணம், ஏகீபாவம் ஒருங்குசேர்த்துப்பாவித்தல்) இக்கிரியை மேலங்கத்தை சிவசொரூபமாக்கும் நிமித்தம் வேண்டப்படுவதாகிய கையை மன்னர் சிவ வடிவினதாக்கிக் கொள்ளும் பாவனையாகும். மாணிக்கவாசகரும் திருவெம்பாவையில்,

"என்கை உனக்கலா தெப்பணியுஞ் செய்யற்க"

எனப் பாடுகின்றார். இக்கரநியாசம் வலக்கைப் பெருவிரலாதியாக இடக்கைப் பெருவிரலீறாக நியசிக்கும் சிருஷ்டிக்கிரமமும் இருகரத்தும் ஒரே காலத்துப் பெருவிரல் முதல் சிறுவிரலீறாக நியசிக்கும் திதிக்கிரமும், சிறுவிரல் முதல் பெருவிரலீறாக நியசிக்கும் முறை சங்காரசிரமம் என மூன்றுவகைப்படும். இவற்றுள் சிருட்டிக்கிரமம் பிரம்மச்சாரிக்கும், கன்னியர்க்கும், திதிக்கிரமம் கிருஹத்தனுக்கும், சுமங்கலிக்கும், சங்காரகிரமம் வனப்பிரஸ்தன் சந்நியாசி, விதவை ஆகியோருக்குமுரியது.

அங்கநியாசம் - அங்கத்துச் சிவவடிவினை வைத்துப் பூஜித்து அதைச் சிவ சொரூபமாகப் பாவித்தல். சிவாசனமந்திரத்தால் பெருவிரல் அணிவிரலைச் சேர்த்து இதயத்தில் நியசித்து ஆசனம் அமைத்து அதிலே சிவமூர்த்தி மந்திரத்தால் உருவாயமூர்த்தியை ஆவாஹித்துப் பூஜித்துக் கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டியாகப் பிடித்து பெருவிரல் கொண்டு ஈசான மந்திரத்தால் சிரசிலும் பெருவிரலோடு மற்றைய நாலு விரல்களையும் முறையே சேர்த்துத் தத்புருடம், வாமம், அகோரம், சத்யோஜாத மந்திரங்களை முறையே முகம், மார்பு, சூஷ்யம், பாதம் அகிய இடங்களிலும் நியசித்து உருவத்திருமேனிக்குரிய சிரம் முதலாய அவயங்கள் உண்டானதாகப் பாவித்து பூஜித்து பெருவிரல் அணிவிரல் சேர்த்து வித்யாதேக மந்திரத்தால் இருதயத்து நியசித்து அங்கே அருவாரூபமாயுள்ள சிவலிங்கம் தோன்ற அதில் வித்யாதேகம் பொருந்தியதாகப் பாவித்து பூஜித்து பெருவிரல் அணிவிரல் சேர்த்து வித்யாதேக மந்திரத்தால் இருதயத்து நியசித்து அங்கே அருவாரூபமாயுள்ள சிவலிங்கம் தோன்ற அதில் வித்யாதேகம் பொருந்தியதாகப் பாவித்து பூஜித்து வலக்கை நடுவிரல் மூன்றாலும் நேத்திரமந்திரத்தால் கண்களில் நியசித்து சிவனுக்கு நேத்திரங்கள் அமைத்ததாகப் பாவித்து சிவமூலமந்திரத்தால் இருதயத்தில் நியசித்து அங்குள்ள சிவலிங்கமூர்த்தியிலே அருவமாய சிவனை ஆவாஹித்துப் பூஜித்து மேல் பெருவிரலோடு கூடிய சிறுவிரல் அணிவிரல் நடுவிரல்களினால் இருதயம், சிரம், சிகை, என்னும் மந்திரங்களால் அவ்விடங்களை நியசித்து சிவனுக்கு அவ்வங்கங்கள் உண்டாயதாக பாவித்துப் பூஜித்து இருகரங்களிலும் நீட்டிய சுட்டுவிரல்களினாலே கவசமந்திரத்தால் கழுத்தை முலை நடுவளவாகச் சுற்றி இருதயத்துற்ற சிவனக்குக் கவசமிட்டு பூஜித்து ஒருகையின்றி விரலால் மற்ற உள்ளங்கைகளிலே அஸ்திர மந்திரத்தால் நியசித்து சிவமந்திரத்தைப் பூஜித்தலுமாகிய பாவனையுஞ் செய்து மேல் தாளத்தியம், திக்கு பந்தனம், அவகுண்டனம் ஜலசுத்திக்குப் போலச்செய்து சிவசொரூபத்தை பாதுகாத்து சிவ மூலமந்திரத்தால் சிரமுதற்பாதமளவாக மஹாமுத்திரை காட்டி எல்லா மந்திரங்களையும் ஏகீபாவஞ் செய்தலாம். இதனையே மந்திர சகிதமாய்க் கிரியையோடு கூட்டிச் செய்தபாவனையின் வழியாய் தன்னிடத்து சிவசொரூபம் உண்டாகும் (சகளீகரணம் அனைத்துக் கிரியைகளுக்கும் உள்ள விடயமாகும்)

இவ்வாறு அசுத்தமான தேகத்தை சுத்தமடையச்செய்து சிவோஹம் பாவனையாக ஆக்குதல் மூலம் கிரியை செய்தற்குரிய பரிபக்குவநிலை ஏற்படுகின்றது. இங்கேயும் வேதங்களும் ஆகமங்களும் ஒன்றாகும் நிலையை காணலாம். ஷோகம் அதுநான் என்ற பாவனை செய்தல் அதுநான் அவன் நாள் என்பது வேதாந்த வாக்கியம், சிவோகம் என்பதும் இதுவே சிவம் நான் இது ஆகம சித்தாந்தவாக்கியமாகும்.

கருடதியானத்தால் விஷம் நீங்குவது போல சோகம்பாவனை செய்தலால் மலங்கள் நீங்கும். ஆதிபௌதிக கருடன், . ஆதிதைவிகருடன், ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூவகைப்படும். அவற்றுள் உலகத்திற் காணப்படும் கருடன் ஆதிபௌதிக கருடன் என்றும், கருடமந்திரம் ஆதிதைவிக கருடன் என்றும், கருடமந்திரமிடமாக நின்று பலன் கொடுக்கும் சிவசுத்தி ஆத்தியான்மிக கருடன் என்றும் சொல்லப்படும். ஆதிதைவிக மந்திரத்தை நாடோறும் பயின்று வந்த பயிற்சி விஷேடத்தால் அம்மந்திரமே தானாக அநந்நிய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைந்து நின்று அம்மந்திரக்கண் கொண்டு பார்க்கும் போது வி'ம் நீங்குவது போல சிவோஹம் பாவனையில் சிவதத்துவ விளக்கம் வாயிலாக பாசமாகிய விஷம் நீங்குமென்பர்.

இவ்வாறு கிரியையில் ஈடுபடும் சிவாச்சாரியார் தேகசுத்தி செய்தபின்பு கிரியைகளை ஆற்றுவார். ஆகமக் கிரியைகள் புலன்களைச் சிவநெறியிற் செலுத்துவன. கிரியைகட்குயிராகிய மந்திரமும் பாவனையும் புலன்களும் சிவமாக்கும். கிரியைகளில் ஈடுபடும் சிவாச்சாரியார் தம்மை சிவமாக பாவிப்பதன் மூலமே பிரதஷ்டாதி உற்சவகாலங்களில் அவர் போற்றுதற்கும் வழிபாட்டிற்குரியவராகின்றார். அதனால் தான் குருவே பிரம்மா, விஷ்ணு, சிவன் எனவும் திருமூலரும் 1ம் தந்திரத்தில் தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல், தெளிவு குருவுச் சிந்தித்தல்தானே என வகுப்பதும் நோக்கத்தக்கது. தெளிவு என்பது இங்கு ஞானத்தைப்பெறும் விடயத்தில் குரு வழிகாட்டுவது இன்றியமையாததாகும். அறிவு ஒரேவிதமாக இருந்தாலும் பக்குவத்திற்கேற்றபடி ஒவ்வொன்றிலும் பிரகாசிக்கின்றது. இந்த அறிவாகிய ஆத்மா ஒளியை முழுமையாக பிரகாசிக்கச்செய்யவும், துக்கமின்றி இருப்பதற்குரிய வழிவகைகள் கூறவும் நமக்கு குருபரம்பரை அவசியமாகின்றது.

இந்த அதிகாரம் பரம்பரையாக இடம்பெறும் வகையில்தான் ஒரு குருப்பரம்பரை இடம்பெறுகின்றது. ஆன்மாவுக்கு ஞானத்தையும் செயலையும் வேதாகமங்கள் வழங்குகின்றன. அவ்வேதாகமங்கள் பிரமாதிகள் ஓதுவிக்க இருடிகளால் ஓதப்பட்டு அவர்கள் வழியாகத் தொன்றுதொட்டு வருவதால் தவறின்றி உயர் அறிவுடையவராகவே சொல்லவேண்டும் என்ற உயர்வு ஆழமாக மக்களிடையே இருந்துவருகின்றது. சித்தியாரும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திரத்தான் மருந்துகளான் வாய்ந்தவியோ கத்தான்
மனியிரது குளிகையினான் மற்று மற்றுஞ்
தந்திரத்தே சொன்னபடி செய்யவேத
சகலகலை ஞானங்க டிர்கால ஞானம்
அந்தமிலா வண்மதி ஞானங்க ளெல்லாம்
மடைத்திடுமா சானருளா வடிகென் ஞானம்
வந்திடுமற் றொன்றாலு வாரா தாடு
மற்றவையு மவனருளான் மருவுமன்றே"

"பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றா ளென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்றளென்றும்
அரன்றருஞ்சீா் நிலையெல்லா மிவனே யென்றும்
அருட்குரவை வழிபடவே யவளிவன்றா ளாயே
இரல்சிவாரசமாயை மீனண்டஞ் சினையை
இயல்பினோடு பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமோ போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தேனே"

இவ்வாறாக தொன்மையான காலம் முதல் சமயகிரியைகளுக்கு குருவே வழிகாட்டி வருகின்றார். அவரே கிரியைக்குரிய வழிகாட்டி. தெய்வீக பொலிவுடன் விளங்கும் குரு கர்த்தா செய்யும் விரும்பும் கிரியைகளின் விடரங்களை விளக்கி அவற்றை முன்னின்று நடாத்துகின்றார். இவர் மூலமே கிரியை தொடர்பான பாரம்பரியம் இன்றளவும் பேணப்பட்டு வருகின்றது. அத்தகைய குரு வழிபாட்டிற்கு உரியவராகின்றார்.

நீண்டகாலச் சமயபாரம்பரியத்தினை தலைமுறை தலைமுறையாகப் பேணிப்பாதுகாத்து பக்தர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு குரு என்ற நிலையில் நின்று சமயக்கிரியைகளை வழிநடத்தும் இவர்கள் என்றென்றும் அனைவரது அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் என்பதை எம்மில் ஒவ்வொருவரும் நன்கு உணரவேண்டும். குருவை சித்தத்தில் சேவித்து வழிபடுதல் ஆகியவை உயர்ந்த செயல்களாகும். குருவே தெய்வமென்றும் குருவே தர்மம் என்றும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அஞ்ஞான இருளை நீக்குபவர்களாக குருவாக விளங்கும் காரணத்தால் அவரைப் போசித்தல் தர்மம் என இந்து சமயம் கூறுகின்றது. திருமூலரும்,

"குருவே சிவமெனக் கூறினென் நந்தி
குருவே சிவனென் பலகுறித் தோரா்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணா் வற்றதோ் கோவே"

அவ்வாறே,

"சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
சூரியன் தோற்றமுன் அற்றமலங்களே"

எனக் குறிப்பிடுகின்றார். சித்தியாரும்,

"சூரியகாந் தக்கல்வி னிடத்தே செய்ய
சுடர் தோன்றியிடச் சோதீ தோன்று மாபோல்
சூரியனா மானன்வந் தருளாற் றோன்ற
வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்
சூரியனாஞ் சிவன் றோன்றுந் தானுந் தோன்றும்
தொல்லுலக மேல்லாந்தன் னுள்ளே தோன்றும்
நேரியனாய்ப் பரியனுமா புயிா்க்குயிரா யென்கு
நின்றநிலை யெல்லா முன்னகழ்ந்து தோன்றும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தக்கல்லில் சூரியனின் ஒளி பிரகாசிக்க அங்கே அக்னிவடிவில் விளங்குவது போல ஞானசாரியார் அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளிவந்து பக்குவ ஆன்மாவின் முன்தோன்றி உபதேசிக்க சிவஞானம் அவ்வான்மாவிற் தோன்றி அதன் அனுபவமாக அறிவிற் தோன்றும் என சித்தியார் சிவோகம் பாவனையாக நிற்கும் நிலையினையும் சிவாச்சாரியாரின் பெருமையையும் கூறி நிற்கின்றது. இவ்வாறாக சிவாச்சாரியார் சகளீகரணம், பதசுத்தி, அந்தர்யாகம் என்பவற்றால் பரிபக்குவ நிலை அடைந்து கிரியையில் ஈடுபடுவர். இதுவே கிரியை நிலையில் ஞானபாதசிந்தனையாக வளர்கின்றது.

## அடிக்குறிப்புக்கள்

01. சிவஞானசித்தியார், 9 : 3 , 30.
02. திருமூலர் திருமந்திரம், 7 : 1699.
03. கா. கைலாசநாதக்குருக்கள், சைவத்திருக்கோயில் கிரியைநெறி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய ஆய்வுநிறுவன வெளியீடு, 2ம் பதிப்பு, கொழும்பு, 1992, பக்கம் 255.
04. சைவசமயநெறி, 502, ஆறுமுகநாவலர், புத்துரையுடன், விசுவநாதப்பிள்ளையால் வெளியிடப்பட்டது. 7ம் பதிப்பு, இரத்தா' தைமாதம்.
05. மேற்படி, 603.
06. சித்தியார், 9 : 3 : 300 திருவிளக்கம் புத்துரை கொழும்பு, 1971.
07. மேற்படி, 12 : 2 - 327.
08. மேற்படி, 72 : 3 - 328.
09. திருமூலர் திருமந்திரம், 6 : 1556, கழகவெளியீடு 1996 மே, 8ம் பதிப்பு.
10. மேற்படி, 6 : 161.
11. சித்தியார், 8 : 2 - 280.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஆறு

## நிறைவுரை

இந்துப்பண்பாட்டின் இற்றைவரை நிலவும் கிரியைகள் தொன்மைக்காலந்தொட்டு ஓர் தொடர்ச்சியான ஓர் மரபுநிலை சார்ந்த அடிப்படையில் நிகழ்வதாகும். இயற்கைவழிபாட்டினடிப்படையில் நிகழ்ந்த வழிபாட்டு மரபு இன்றைக்கும் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆகமமரபில் பிரதிஷ்டை முதலாக நிகழும் அனைத்து வழிபாட்டு அம்சங்களும் பஞ்சபூத உபசாரமாகவே திகழ்கின்றது.

நிலத்தில் விளையும் கந்தமூல பலாதிகளான பலவகை உணவுப்பொருட்கள் பூக்கள் முதலியன இறைவனுக்கு அர்ப்பணித்தல். பிருதுவி உபசாரம், நீர், பால், தயிர் முதலியன நீருடன் தொடர்புறுவன. இவை ஆப்யோபசாரம் எனப்படும். உலோகங்கள், ஆபரணங்கள், தீபங்கள், கண்ணாடி என்பன ஒளியுடன் தொடர்புள்ளன. தைஜசோபசாரம், தூபம், சாமரை முதலியன காற்றுடன் தொடர்புள்ள லாயங்க உபசாரம், கீதம் தோத்திரம் என்பன ஆகாயத்துடன் தொடர்புள்ள வைஹாய சோபபாரமாகும். (விஹாயம் என்பது ஆகாயம்) இவ்வாறே வாத்திய ஒலிகளும் ஐவகைப்படுவன. மரத்திலிருந்து அமையும் வாத்தியங்கள், மண்ஒலி, சங்குஒலி நீரிடம் தோன்றுவன உலோகங்களினால் ஒலிக்கும் ஒலி, ஒளி, குழலிலிருந்து பிறப்பு வளியொலி, பாட்டுப் பின்னொலி எனப்பல. எவ்வகை வாத்தியமெனினும் அவை இந்த ஐந்து பூதங்களுள் அடங்குவன.

கும்பாபிஷேகக் கிரியைகள் நிறைவேறிய பின்னர் இறைவனுக்கு நாமகரணம் சூட்டப்பெற்றபின் ஆலயத்தில் சாந்நித்யம் கொண்டு அடியார்களின் பக்திக்கு உரியனாகின்றான். தெய்வீக பொலிவு பெற்று விளங்கும் இறைவனுக்குப் பல்வேறு உபசாரங்களும் பதினாறு வகையின. இவை சோட சோபசாரம் எனப்படும். பத்துவகைப்படும் உபசாரங்களை தசோபசாரம் என்றும் ஐவகை உபசாரங்களை பஞ்சோபசாரம் என்றும் கிரியைகள் நூல்கள் கூறுவன.

இவை ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், சந்திரோதானம், பாத்தியம், அர்க்கியம், ஆசமநியம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், ஜபம், ஆராத்திரிகம் என்பனவாகும். "வியாபிக்கும் பரமசிவனது பொருவிலுயர் பரிபூரானந்தன்னையறிவிலழுந்துதல் ஆவாஹனம் அவையாதாமுந்த நிலை பெறல் தாபனமாகும் இவன் நன்றறிவு சிவன் பூரணத்துவமிவன்றனதறிவிலும் ஒன்றை யொன்றகலா துறவு செய்திருப்பது சாந்நிரோதனம்" எனப்படும் "இவனிடத்துறமறிவென்று மொழியாச்சமையாது" சந்நிரோதனம் பாத்யம் இறைவன் திருவடிகளிற் சமர்ப்பிக்கப்படும் நீர் ஆசமநீயம் திருமுகத்திற் கொடுப்பது அர்க்கியம். இறைவன்முடியில் சமாப்பிக்கப்படுவது அ்டபு்பங்கள் அர்ச்சனைக்குரியன. "அத்தனாரைப் பத்திமலர் தூவமுத்தியாகும்" என தேவாரம் மலர் தூவுவதினால் வரும் பெறுபேறு கூறுகின்றது. தூபதீபம் ஞானவிளக்க நண்ணுதற்பொருட்டு அமையும். கற்பூரம் வெண்ணிறம் வாய்ந்தது. இது சாத்துவிகநிலையினைச் சுட்டும். இந்நிலையே ஆன்மா எய்தவேண்டியது. கற்பூரத்தில் அக்னி பற்றியதும் அது தன்வயமிழந்து அக்னிமயமாகவே ஆகிவிடுகின்றது. ஆன்மாவும் அவ்வாறே ஞானாக்னி தன்னைப்பற்றுங்கால் பசுவென்னும் நிலை நீங்கிச் சிவத்துவம் பெறும். கற்பூரம் சிறிது சிறிதாக தன்னுருவம் தேய்ந்து ஈற்றில் வெளியுடன் இரண்டறக்கலந்துவிடும். இவ்வத்துவித நிலையே ஆன்மா சிவத்துடன் ஒன்றாகக்கலந்து பேரானந்தப்பெருவாழ்வு எய்தவிருக்கும் சிவாத்துவித நிலை. இதுவே கற்பூர ஆரார்த்தி காட்டும் தத்துவமாகும்.

எனவே கிரியைகளின் இத்தகைய சிறப்பினைக்கொண்டே சைவசித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம் "கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என அந்நூல்கூறும் இக்கருத்து குறிப்பிடத்தக்கவொன்றாகும். இதன்படி அகமநூல்களில் கிரியை எனச் சொல்லப்பட்டுப் பொருந்தியிருப்பன யாவும் ஞானம் கிடைத்தற்கு காரணமாக அமைவனவாகும். கிரியைகளில் இத்தகைய புனிதத்துவம் கருதியே திருக்கோயில்களில் பணி செய்பவர்களும், வழிபடுவோர் களும். வழிபாட்டின் பயன் பெறும்பொருட்டு தம் சிந்தனை செயல் சொல் ஆகியவற்றைத் தூய்மைசெய்து தம்மைப்பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டியள்ளது.

திருக்கோயில்களில் ஆகமமரபு பேணப்படும் தூய்மையான மந்திரசக்தி எங்கணும் பரவி தெய்வீக உபாசனை நிகழும் இடமாகவும் அது விளங்குகின்றது. அங்கு இறைவனின் திருவருட்சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பட்டு நிற்கும். ஆகவேதான் கிரியைகளின் போது பூவுலக அரசனுக்கு நிகழும் அனைத்து உபசாரங்களும் இறைவனை அனைத்துலக ராஜாவாகப் பாவித்து சகலவித உபசாரங்களும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு ஆலயக்கிரியை மரபில் பிரதிட்டா காலங்களில் நவகண்டஸ்பர்சாகுதியானது வைதீகமரபையும் ஆகமமரபையும் இணைக்குமோர் உன்னத கிரியையாக விளங்குகின்றது. இயற்கைச் சக்திகளை தெய்வீக நிலைப்படுத்தி வழிபட அதாவது அக்னியிலும் கும்பத்திலும் ஆவாஹிக்கப்பட்ட இறைவனை ஆகமமரபிற்கேற்ப அமைத்து திருவுருவத்தில் ∴ லிங்கத்தில் தெய்வீகம் சூரியசந்திரர் உள்ளவரை சாந்நித்தியமாகும் வண்ணம் வேண்டிச்செய்யும் ஸ்பர்சாகுதியின் மூலமாக அக்னிவழிபாடு மந்திர உச்சாடனம், அர்ச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களில் நாம் உய்த்து உணரலாம். நிகழ்கால சின்னங்களாக அமைந்து பக்தி உணர்வை வளர்ப்பதோடு ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுவனவாகவுள்ளன. எமது சமயப்பாரம்பரியத்தின் உன்னத வழிமுறைகளாகவே ஆலயங்களில் நிகழும் ஸ்பாசாகுதிக்கிரியைகள் அமைந்து விளங்குகின்றன எனலாம்.

## தமிழ் நூல்கள்


01. திருமந்திரம் - தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவெளியீடு, டிசம்பர் 1996, 7ம் பதிப்பு (1 - 5, 6 - 9 ம் தந்திரம் வரை).
02. சிவஞானசித்தியார் - கொழும்பு திரு. மு. திருவிளக்கம் (சுபக்கம்) அவர்கள் எழுதிய புத்துரை, 2ம் பதிப்பு 1971.
03. சைவசமயநெறி - ஆறுமுகநாவலர் புத்துரை, 7ம் பதிப்பு.
04. ஏழாம் திருமுறை - தருமையாதீன வெளியீடு, 1964.
05. கா. கைலாசநாதக்குருக்கள் - "சைவத்திருக்கோயில் கிரியைநெறி", கொழும்பு ஸ்ரீ முத்துவிநாயகர் வேதாகம ஆராய்ச்சி நிறுவன வெளியீடு, 2ம் பதிப்பு, 1992.
06. கலாநிதி. ப. கோபாலகிரு'ணஜயர் - "இந்துப்பண்பாட்டு மரபுகள்", வித்தியாவெளியீடு 1, யாழ்ப்பாணம் 1992.
07. திருச்செந்தூர் முத்துப்பட்டர் - கும்பாபி'கே கிரியாக்ரமவிளக்கம் 1959.
08. சிவஸ்ரீ. ஜ. கைலாசநாதக்குருக்கள் - ஆகமாமிர்திவர்'ணி, 1972 "டியப்ரபூர்த்தி வெளியீடு, விவேகானந்த அர்ச்சகம்.
09. திருமதி. கலைவாணி இராமநாதன் - "வேதபாரம்பரியமும் சைவசித்தாந்தமும்", ஸ்ரீ ரெல்கா பிரிண்டர்ஸ், 1992.
10. சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள், அச்சுவேலி  "மகோற்சவவிளக்கம", 1958.
11. " " "
- "முப்பொருள் விளக்கம்", மூன்றாம் பதிப்பு 1969.
12. " " "
- "வேதாகம நிரூபணம்," 2ம் பாகம் 1951.
13. சிவஞானபோதம் - யாழ் ஏ. ஆறுமுகனார், இன்னாள் உரையுடன், 1973.
14. திருநாவுக்கரசர் தேவாரம் - ஆறாம் திருமுறை, தருமையாதீன வெளியீடு, 1973.
15. டாக்டர். எஸ். பி. சபாரத்னம் - சைவாகமங்கள் ஓர் அறிமுகம், 3ம் பதிப்பு, 1994.
16. ப. கோபாலகிரு'ணஜயர் - சிவாகமங்களும் சிற்பநூல்களும் சித்தரிக்கும் சிவ விக்கிரகவியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கென சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வேடு.


## நூற்பட்டியல்


01. ஆகமங்கள்,
1. காமிகாகமம் - பூர்வபாகம், கொ. 'ண்முகசுந்தரமுதலியார், அவர்களால் சென்னை சித்தாரிப்பேட்டை சிவஞான யந்திரசாலையில் பதிக்கப்பட்டது.
2. காமிகாமம் - பூர்வபாகமுற்பகுதி, சிவஸ்ரீ. இ. சுவாமிநாதசிவாச்சாரியார் அவர்களால் அதன்னிந்திய அர்ச்சகர் சங்கவெளியீடு, 1977.
3. காரணாகமம் - பூர்வபாக மூலம், மயிலை அழகப்பமுதலியாரவர்களால் சிவஞானபோத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திரசாலையிற் பதிக்கப்பட்டது.
4. மகுடாகமம் - பூர்வபாகம், மூலம் சிவஸ்ரீ. சி. சுவாமிநாதசிவாச்சாரியாரால் தென்னிந்திய அர்ச்சகர் சங்கவெளியீடு, 1977.
5. சுப்ரபேதம் - மூலம், மயிலை அழகப்பமுதலியாரால் சிவஞானபோத யந்திரசாலையிற் பதிக்கப்பட்டது.
6. AJITAGAMA – Vd iii, 1991, INSTITUTE FRANCAIS DE PONDICHERY ED. N.R. Bhatt.
7. சித்தாந்தசாராவளி - திரிலோசன சிவாச்சாரியாரின் மூலமும் அனந்தசிவாச்சாரியாரின் தமிழ் உரையும், சிவஸ்ரீ. சி. சுவாமிநாதக்குருக்கள் பரிசோதித்து தென்னிந்திய அர்ச்சகர் சங்கவெளியீடு, 1975.
8. மிருகேந்திர வியாக்கியானம் - மயிலை அழகப்பமுதலியார் சிவஞானபோத அச்சகப்பதிப்பு.

02. பத்ததிகள்,
1. அகோரசிவாச்சாரியார் - சிவப்பிரதிஷ்டா காரிகை, தென்னிந்திய அர்ச்சகர் அசோசியேஷன், 1967.
2. சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அச்சுவேலி - சிவலிங்கப்பிரதிஷ்டாவிதி இரண்டாம் பாகம், 1953.
3. நயினை. சிவஸ்ரீ. ஜ. கைலாசநாதக்குருக்கள் - அகோரசிவாச்சாரியாரின் பத்ததியின் தழுவலைக்கொண்ட கையெழுத்துப் பிரதி, 1975.
4. ஸ்ரீ. மகோற்சவபத்ததி - ஊரெழு சிவஸ்ரீ. ச. பாலவைத்தியநாதக்குருக்களின் ஞாபகார்த்த வெளியீடு, 1999.

## பிறநூல்கள் கட்டுரைகள்

அ. கும்பாபிஷேக மலர் -
1. "வைதீகமரபும் ஆகமமரபும" பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ. வீரகத்திவிநாயகர் ஆலயம், 1989.
2. "கும்பாபிஷேக தத்துவார்த்தம்" சிவஸ்ரீ. ஜ. கைலாசநாதக்குருக்கள் மேற்படி ஆலயம், 1973.
3. "இந்துசமய மரபில் நீரின் புனிதத்துவம்" பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ணஐயர், யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ. வெய்யிலுகந்தவிநாயகர் தேவஸ்தானம், 1993.
4. "தெய்வசாந்நித்தியத்தை ஏற்படுத்தும் கும்பாபிஷேகம்" பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ணஐயர், கொழும்பு இரத்மலானை இந்துக்கல்லூரி கற்பகவிநாயகர் ஆலயம், 1999.

ஆ. நினைவுப்பேருரை -
"சைவசமயமரபில் ஆகமங்கள்" பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர், பண்டிதமணி நினைவுப்பேருரை,


"சைவசமயவாழ்வின் கிரியைகள்" பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ணஐயர், அமரர். க. சபாரத்னம் ஞாபகார்த்த வெளியீடு, நீர்வேலி, 1995.

ஆங்கில நூல்கள்

1. Ritual And Mantras, Frils Staal, 1996.
2. M. Wiaferaits, History of indian literature, University of Calcutta, 1959.
3. Siva Temple And Temple Rituals, EH. S.S. Janaki, The Kuppuswami Sastri Research Institute Madras, 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெற்றோரை உவந்தளித்த
பொன்நாடாம் புங்குடுதீவே - உன்னை
பணிந்து நாம் போற்றுகின்றோம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org